# மன்னா

MANNA

மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

மன்னா

பொழிவு-8
குவீப்பு-12
பக்கங்கள்-18
விலை ரூபா 20.00
டிசம்பர் 2005

THE ONLY TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR. Manna Office, Pastoral Centre, St. Sebestian's St. Mannar, Sri Lanka. T.P:023 -2232377



## கிறிஸ்மஸ் புதுவருட சிறப்புப் பொழிவு

## வரலாற்றுத் தடத்தில் மன்னார் மறைமாவட்டம்

ஜனவரியில் வெள்ளி விழா நிகழ்வுகள்!




# அஞ்சாதீர்கள் இதோ உங்களுக்காக மீட்பர் பிறந்துள்ளார்! லூக். 1:10





## யாழ் புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் யூபிலி விழா

1980-2005



அனைத்து மன்னா வாசகர்களுக்கும்
எனது மனம் நிறைந்த, செபம் கலந்த
கிறிஸ்[illegible] புதுவருட
நல்வாழ்த்துக்களையும்
இறை ஆசியையும்
அன்போடு தெரிவித்து நிற்கின்றேன்.
அன்புடன்
கிறிஸ்துவின் பணியில்
மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை
மன்னார் ஆயர்



## மன்னார் மறைமாவட்ட குருமுதல்வராக 25 ஆண்டுகளை நிறைவு செய்யும்

## அன்புத் தந்தை சேவியர் குருஸ் அடிகளார்



சுனாமி அனர்த்தத்தில் உறவுகளை பறிகொடுத்து ஆறாத் துயரில் அமிழ்ந்திருக்கும் அனைத்து உள்ளங்களின் உணர்வுகளோடு நாமும் ஒன்றிணைகின்றோம்.

## மன்னா அன்பு நெஞ்சங்களே!

அமைதியின் அரசாரம் இயேசு கொண்டுவந்த அமைதி
உங்கள் உள்ளங்களில் நிலைக்க
வாழ்த்துகின்றோம். ஆசிக்கின்றோம். செபிக்கின்றோம்.
உங்களுக்கு எமது அன்பும் அருளும் சமாதானமும் நிறைந்த
புதுவருட வழ்த்துகளைத் தெரிவிக்கின்றோம்.
நிறைந்த ஆசியுடன்
அருள்பணியாளர் நேசன், பதிப்பாசிரியர், மன்னா



செல்வி. றெஸ்னிக்கா பீரிஸ்
கராத்தே போட்டியில்
உலக சாதனை



# வாசகர் எண்ணங்கள்

### தினமொரு மன்னாவாய் எப்போது மலர்வாய்?

என் அன்புள்ள மன்னாவே, நீ இறைவனின் வாசனை மலராக என் இதயத்தில் மலர்கின்றாய். எனக்குப் பிடித்த வண்ண மலரே, நீ என் மனதெங்கும் மலர்ந்துள்ளாய். என் வீட்டில் உன்னை மலர்போல் வைத்திருக்கின்றேன்.

அழகு மன்னாவே, என் வீட்டில் நீயிருப்பாய். என் முற்றத்தில் பூத்த இனிய மன்னாவே, என் மனதைக் கவர்ந்த அன்பு மன்னாவே, என் மனதினை கொள்ளைகொண்ட அன்பு மன்னாவே, தினமொரு மன்னாவாய் நீ எப்போது மலர்ந்திடுவாய்?

*ப.சகாயறாஜ், இல.89, முதலியார்குளம், செட்டிகுளம்.*

### தகவல்களைச் சுமந்து வரும் சுமைதாங்கி நீ

அன்பிற்கினிய மன்னாவே, நீ எம் மத்தியில் பல தகவலை சுமந்து வரும் சுமைதாங்கியாக இருக்கின்றாய். உனது இப்பணிவான சேவை எக்காலமும் தொடரவேண்டும் என்று உன்னை அன்புடன் வாழ்த்தி நிற்கின்றேன். உனது இந்த சேவையில் எந்த இடையூறும் வராதிருக்க இறைவனையும் வேண்டி நிற்கின்றேன்.

*ப. யசோதினி, எழுத்தூர், மன்னார்.*

### மறை அறிவுப் போட்டி தரமானவை

மன்னாவின் மறை அறிவுப் போட்டியானது மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது. கேட்கப்படும் ஒவ்வொரு கேள்விகளும் எம்மை தேடலுக்கு தூண்டுகின்றன. இதனை திறம்பட தொகுத்துத் தரும் மன்னாவுக்கு எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

*ப. வதனா, ப. அகிலன் வாழ்க்கைப்பெற்றான்கண்டல்.*

### கவிதையாலே வாழ்த்துகின்றேன்

மன்னாரில் உதித்திட்ட மன்னாவே
மாதம் ஒருமுறை மலர்கின்ற பூவே
கருத்துக்கள் பலதாங்கி களிப்போடு வருகின்றாய்
கரம்பிடித்து எம்மை உன் பக்கம் திருப்புகின்றாய்
சிறுவர் கவிதைகளை சிறப்பாக வரைகின்றாய்
சிரிக்க வைக்கின்ற பெரியப்பா பதில்களால்
சிந்திக்க வைத்து எம்மை சிந்தனையில் ஆழ்த்துகின்றாய்
காணாத உள்ளங்களின் அஞ்சலிகளால்
கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றாயே!
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டிதனில்
எம்மை விறுவிறுப்பு அடைய வைப்பதுடன்
பரிசுப்பொருட்களை பரிவோடு அளித்து
பாராட்டுப் பெயர்களையும் பொறிக்கின்றாயே
மன்னாவே நீ வாழ்க! நீ வாழ்க நீடுழி வாழ்க!

*வேந்தக்கோன் சியாமளா,*
*வாழ்க்கைப்பெற்றான்கண்டல், முருங்கன்*

### உன்வரவு நல்வரவாகட்டும்

மகத்தான மன்னாவே! உனக்கு என் மனம் கனிந்த வணக்கம்! நீ தாங்கிவரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. நீ தாங்கி வரும் பல்சுவை அம்சங்களில் "கதையும் - கருத்தும் களமும்" என்ற பகுதி மிகவும் சுவையானது. ஒவ்வொரு மானிடரையும் சிந்திக்கத் தூண்டுகிறது. அடுத்துக் குடும்ப குவலயம், இளைஞர் பொழிவு, சிறுவர் பொழிவு என்று நீ அசத்தும் அத்தனை அம்சங்களும் அருமை.

மேலும், விவிலிய குறுக்கெழுத்து போட்டி மிகவும் சுவையானது. விலியத்தை வாசிக்காமல் இருக்கும் உள்ளங்களுக்கு இது ஒரு திறவுகோல்! இதில் பங்குபற்ற வேண்டும் என்பதற்காகவாவது ஒரு அதிகாரத்தைப் புரட்டிப் புரட்டி ஒருமுறையல்ல 10 முறை வாசித்து விடுவார்கள். ஏனென்றால், உனது கேள்விகள் அனைத்தும் வாசகர்களை குழப்பிவிடுகின்றது. அதனால் அதை மீண்டும் மீண்டும் வாசித்து பதிலைத் தேடுவார்கள். உனது வருகை மாதத்தில் இருமுறை வரவேண்டும் என்பதே எனது ஆசை.

இது எனது ஆவல் மட்டுமல்ல, அத்தனை வாசகர்களினதும் ஆவல் இதுவே! சமய நிகழ்வுகளை மட்டுமன்றி, அரசியலைக்கூட நீ விட்டுவைக்கவில்லை. அத்தனையும் இனிமையானது. மேலும் உன்னிடம் ஒரு வேண்டுகோள்.! இளந்தலைமுறையினரின் எழுத்தார்வத்தை வளர்க்க உதவிபுரிகிறாய். நன்றி. அதைத் தொடர்ந்து செய்.

இடைவிடாமல் மென்மேலும் எம்மை நாம் வளர்க்க, அதில் தளைக்க உதவி புரிவாய் என்ற நம்பிக்கையில் உன் வரவை எதிர்பார்க்கின்றேன்."மகத்தான மனிதனின் மாண்பான சிந்தனையைத் தூண்ட 'மன்னா' எனும் உன் உணவினை மாதந் தவறாமல் எமக்களித்து மக்களின் மனதைக் கவர்ந்திழுத்து மாதம் ஒருமுறை எம் ஆன்ம பசி தீர்க்கும் மன்னாவே! மழுங்கிய இதயத்தில் மணிமகுடம் பூண்டு மாண்புடன் உன்பணி தொடர வாழ்த்துக்கள்!" "உன்வரவு நல்வரவாகட்டும்"

*அ.ஜெஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.*

---

## தாழ்வுபாட்டைச் சேர்ந்த செல்வி றெஸ்னிக்கா பீரிஸ் உலக சாதனை

மன்னார் தாழ்வுபாட்டைச் சேர்ந்த செல்வி. றெஸ்னிக்கா பீரிஸ் அவர்கள் கராத்தே போட்டியில் உலக சாதனையை நிலைநாட்டியுள்ளார். கடந்த ஒக்ரோபர் மாதம் 30, 31ந் திகதிகளில் கொழும்பில் நடைபெற்ற அகில உலக ரீதியிலான கராத்தே போட்டியில் 'கட்டா' என்ற போட்டியில் 2ம் இடமும், 'குழுத்தே' என்ற போட்டியில் 3ம் இடமும் பெற்று முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றுள்ளார்.



திரு. திருமதி ஜெஸ்மன் பீரிஸ் தம்பதியரின் மகளாகிய இவர் தற்போது மன். புனித வளனார் றோ. க. த. வித்தியாலயத்தில் 10ம் தரத்தில் கல்வி பயில்கின்றார்.

தென்னிந்தியாவில் அகதிகளாக இருந்தபோது இவர் 4 வயதிலேயே தனது தந்தையாரும் "கராத்தே" கலையில் கறுப்புப் பட்டி பெற்றவருமாகிய பறுனாந்து ஜெஸ்மன் பீரிஸ் என்பவர் மூலம் "கராத்தே" கலையைப் பயில ஆரம்பித்துள்ளார்.


8 வயதில் மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற கராத்தே போட்டியில் மதுரை வாழ் மக்கள் சார்பாக போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார். 10வது வயது வரை "கட்டா" மற்றும் "குழுத்தே" போட்டிகளில் 15 தடவைக்கு மேல் 1ம், 2ம் இடங்களைப் பெற்று சான்றிதழ்கள் பெற்றுள்ளார். 10வது வயதிலேயே வயது அடிப்படையில் கறுப்புப் பட்டியும் பெற்றுள்ளார் (ஆண்டு 1998) தொடர்ந்து 2004 வரை பல தடவைகள் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

இலங்கைச் சிறுமி என்ற ரீதியில் பல சிரமங்களைச் சந்தித்த போதிலும் ஆற்றலின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளார். அங்குள்ள பல முக்கிய பிரமுகர்களாலும் (மாவட்ட கலெக்டர், பொலிஸ் அதிபர்) பாராட்டுப் பெற்றவர்.

தாயகம் - இலங்கை திரும்பிய பின்பு மன்னார் மாவட்டத்தில் இவரது தந்தையார் ப. ஜெஸ்மன் பீரிஸ் என்பவர் தலைமையில் "கராத்தே" கலை புத்தூக்கம் பெற்று – 28.07.2004ல் மன்னார் மாவட்ட கராத்தே சங்கத்தினால் போட்டிகள் அனுராதபுரம், வவுனியா நகர் நடுவர்கள் முன்னிலையில் நடைபெற்றன.

இப்போட்டிகளில் வெற்றிபெற்று "சம்பியன்" பட்டம் பெற்றுள்ளார். வடகிழக்கு மாகாண மட்டப் போட்டியிலும் அதிசயிக்க விதமாகச் "சம்பியன்" பட்டம் கிடைத்துள்ளது.

கிளிநொச்சியில் லண்டன் மாநகரைச் சேர்ந்த "கராத்தே" நிபுணர் திரு. ஸ்மித் முன்னிலையில் நடைபெற்ற பயிற்சி நெறியில் பங்களிப்பும், பாராட்டும் பெற்றார். போட்டியிலும் "சம்பியன்' பட்டம் கிடைத்தது (கேடயம், சான்றிதழ் பெற்றுள்ளார்)



மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆபேல் றெவல் அவர்கள் உலக சாதனை நிகழ்த்திய மாணவியைக் கௌரவிப்பதையும் அருகில் மன்னார் வலய நிர்வாகத்திற்கான பிரதிக் கல்விப்பணிப்பாளர் திருமதி எம். வெனிற்றன் (மாலினி), மன்னார் வலய விளையாட்டுக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.பி.எல். லெம்பேட் (டெனிஸ்), முசளிக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. ஜே.ஜீ.எல். பிகிறாடோ (யூட்) மற்றும் சாதனையாளரின் தந்தை திரு. ஜெஸ்மன் பீரிஸ் அவர்களும் படத்தில் காணப்படுகின்றார்கள்.

---

*கருத்துக் களம்.... கருத்துக் களம்... கருத்துக் களம்....*

## சீடத்துவ ஆன்மீகம்

**தன்னார்வப் பணியாளர்: கி. அருளப்பு, 7ம் வட்டாரம், விடத்தல்தீவு**

### அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலைதானே வந்தெய்தும் பராபரமே?

ஒரு மனிதனுடைய உண்மையான வளர்ச்சியானது, அவனது உடல், உள்ளம், ஆன்மீகம், மனச்சான்று இப்படிப் பல கூறுகளிலே வளர்வதிலேதான் தங்கியிருக்கிறது. ஒருவன் தன்னுடைய சொந்த வாழ்விலே தான் சந்திக்கின்ற பலவிதமான மக்களோடு பரஸ்பர நிலையில் சங்கமிக்கிறதாலும் அதாவது ஒன்றுபடுகிறதாலும், தன்னுடைய சக்திகளையும், செல்வங்களையும், மற்றவர்களோடு சேர்ந்து பகிர்ந்து கொள்கிறதாலும், ஒருவர் தன்னைத்தானே வளர்த்துக்கொள்கிறார். மற்றவர்களுக்கு உதவுவதால் தானும் வளர்ந்து, மற்றவர்களையும் வளர்த்துக் கொள்கிறார்.

ஒருவன் தன்னுடைய இயல்பான வாழ்க்கையிலே, தேய்ந்து போகிறான் என்று வைத்துக்கொள்வோம். அதற்குக் காரணம் அவன் மற்றவர்களோடு நெருங்கிய ஈடுபாடு கொள்ளாமல் வாழ்வது ஆகும்.

நானுண்டு என் குடும்பமுண்டு என்று ஒரு சுயநல வட்டத்துக்குள் வாழ்ந்து, தன் ஆளுமையை இழந்துவிடுகிறான்.

ஆன்ம வாழ்வை உறுதிப்படுத்த தன்னார்வப் பணியாளர்களுடைய குடும்பத் தரிசிப்பு சிறந்த வழியாக விளங்குகிறது. இப்பணியிலே பலவிதமான மக்களோடு தோழமையுறவை ஏற்படுத்த முடிகிறது. அவ்வுறவிலே அவர்களது குறை நிறைகளை அறிந்து, அவர்களுக்கு இறைவிசுவாச வாழ்வை ஊட்ட முடிகிறது. அவர்களது உள்ளத்தில் இருந்து எழுகின்ற விருப்பு வெறுப்புக்களை அறிவதும், ஆன்மீகத்திலே அவர்களை உறுதிப்படுத்துவதும், இறை அன்பில் அவர்கள் தொடர்ந்து வளர, அவர்களது குடும்பத்திற்காகவும், எல்லோருக்காகவும் செபிக்கும் பணிதான் தன்னார்வப்பணி. குறிப்பாக நற்கருணை சமூகமாக வாழ அழைக்கப்பட்ட சீடத்துவப்பணியே தன்னார்வப்பணி. விண்ணரசின் மதிப்பீடுகளை வாழ அழைக்கப்பட்ட பணி தன்னார்வப்பணி.

இப்பணியில் கிறிஸ்துவோடு நாம் கொண்டுள்ள உறவில் இன்னும் நாம் குழந்தைகளே! "நான் உங்களுக்குத் திட உணவை அல்ல, பாலையே ஊட்டினேன். ஏனெனில் திடவுணவை உங்களால் உண்ண முடியவில்லை. இப்போதும் அதே நிலையில்தான் இருக்கிறீர்கள். (1கொரி.3:12) தன்னார்வப் பணியாளராகிய நாம், இயேசு காட்டிய வழியைப் பின்பற்ற வேண்டுமென்றால், இயேசு நசரேத்தூர் செபக்கூடத்தில் நடந்துகொண்ட வழிமுறைகளைத்தான் பின்பற்ற வேண்டும். அதாவது இயேசு செபக்கூடத்துக்குள் நுழைந்தார். எசாயா இறைவாக்கினருடைய ஏட்டுச்சுருள் அவரிடம் கொடுக்கப்பட்டது. அவர் தந்தை சொல்லப் பணித்த செய்தியை அவர்களுக்கு எடுத்துச் சொன்னார். ஏட்டுச்சுருளை திறந்து வாசித்தார். அதை மூடித் திரும்பக் கொடுத்தார். இறைவார்த்தையைத் திறந்தார். திறந்த பின் மூடினார். ஏட்டுச்சுருளை மூடிய பிறகுதான், தன்னுடைய வாழ்க்கைப் புத்தகத்தைத் திறக்க முடிந்தது. திறந்தார். நாம் எம்முடைய வாழ்க்கைப் புத்தகத்தை மூடி வைத்துக்கொண்டு, விவிலிய புத்தகத்தை மட்டும் திறந்து, போதித்துக் கொண்டு இருக்கிறோமா? என்பதை சிந்திக்க வேண்டும்.

எம்முடைய வாழ்க்கைப் புத்தகம்தான் பிறர் மனதைத் திறக்க வேண்டும். பிறர் மனதைத் தொடுவது எம்முடைய வாழ்க்கையின் எடுத்துக்காட்டுக்கள். நாம் அறிவிக்கும் இயேசு நம்மிடம் இருக்கவில்லை என்றால், நாம் இதுவரை இயேசுவை அறிவிக்கவில்லை என்பதுதான் உண்மை. "நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள். உப்பு உவர்ப்பற்றுப் போனால், எதைக்கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது வெளியிலே கொட்டப்பட்டு மனிதரால் மிதிபடும். வேறொன்றிற்கும் உதவாது. (மத்.5:13) உப்புத் தன்னையே கரைத்து உணவுப் பண்டங்களை பக்குவப்படுத்துகிறது. தியாகம், பிறர்நலம் உப்புச் சொல்லும் சாட்சியாகும்.

நற்செய்தியின் படிப்பினைகள்தான் எம்முடைய ஆன்மீக உணவு. இந்த உணவைப் பிறரும் உண்பதற்குத் தேவைப்படும் உப்புத்தான், எம்முடைய அன்றாட வாழ்க்கையின் எடுத்துக்காட்டுக்கள். வார்த்தைக்கு, போதனைக்கு, எம்முடைய வாழ்க்கை மற்றவர்களுக்குச் சுவையூட்ட வேண்டும். இதுதான் எம்முடைய திட்டமிட்ட வாழ்க்கை முறை.

இன்னும் இறைவார்த்தை ஒளியிலே நாம் செல்வோமானால்,

*கலைவண்ண விளக்கை ஏற்றிக் கட்டிலின் கீழ்வைப்பாரா?*
*விலையில்லா ஒளியை வீச விளக்கினைத் தூக்கி வைப்பார்?*
*அலை புகழ் மனித வாழ்க்கை அடுத்தவர் அறியத்தானே!*
*மலைமீது உள்ள பட்டி மறைவாக இருப்பதுண்டோ?*
*நல்லொளி பரவுதல் போல், நாட்டினில் ஒளியாய் நின்று,*
*இல்லத்தில் மட்டுமன்றி, எங்கணும் வழியைக் காட்டிச்*
*செல்லுங்கள் உங்கள் வாழ்க்கை திரைபோட்டு மறைக்கவல்ல.*
*துல்லிய வானில் உள்ள தூயவன் மகிழவென்றார் இயேசு.*

கிறிஸ்தவம் என்பது மறைத்து வைப்பதற்கு அல்ல. அது மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு உரியது. உண்மையை என்றும் மறைத்து வைக்க முடியாது. உண்மையின் முழு வடிவம்தான் கிறிஸ்தவம். ஒளி வழிகாட்டுவதற்கு உரியது. கடலில் தத்தளிக்கும் கப்பலுக்கு கரைகாட்டும் கலங்கரை விளக்கு கிறிஸ்தவம். அந்தக் கலங்கரை விளக்கத்தின் தூண்கள்தான் நாம் அனைவரும். நாம் எவ்வளவுக்கு எவ்வளவு உயர்ந்து நிற்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு ஆன்மாக்கள் மனந்திரும்ப முடியும். நாம் காட்டும் ஒளியைப் பார்த்து, நாம் வாழும் வழியைப் பார்த்து, "உலகம் முழுவதும் என் மீட்பைக் கண்டு கொள்ள, பிறவினத்தாருக்கு ஒளியாக உன்னை ஏற்படுத்துவேன்" என்று ஆண்டவர் இயேசு பவுலுக்கும் - பர்ணபாவுக்கும் கூறியுள்ளார். இதை இன்று, நம் ஒவ்வொருவருக்கும் கூறியதாக நாம் எடுத்துக் கொள்வோம்.

ஒருகாலத்தில் இருளாய் இருந்தோம். ஆண்டவரோடு இணைந்து, ஒளியாய் இருக்கின்றோம். ஒளிபெற்ற மக்களாய் வாழ, ஆண்டவர் இயேசு காட்டிய வழியிலே சென்று, நற்கருணை சமூகமாக வாழ, முன்வருவோம். இன்று மக்கள் வார்த்தையைவிட வாழ்க்கைச் சான்றையே எதிர்நோக்குகின்றனர்.

## மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 25 வருடங்கள் நிறைவு!

# வரலாற்றுத் தடத்தில் மன்னார் மறைமாவட்டம்

## ஜனவரியில் யூபிலி விழா இறுதி நிகழ்வுகள்

மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டு 25 வருடங்கள் (1981 - 2006) நிறைவுபெறுவதை முன்னிட்டு 2006ம் ஆண்டு ஜனவரி மாதம் 29ம் திகதி தோட்டவெளி வேதசாட்சிகள் அன்னை ஆலய வளாகத்தில் யூபிலி விழா இறுதி நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. மாலை 5.00 மணிக்கு யூபிலி விழாத் திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஆயர் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். இரவுணவைத் தொடர்ந்து யூபிலி விழாக் கலைநிகழ்வுகள் நடைபெறும்.

இவ்விழாவின்போது மன்னார் மறைமாவட்டத்தின் 25 வருடகால வளர்ச்சியை குறித்துக்காட்டும் பல்வேறு ஆக்கங்கள் அடங்கிய யூபிலி விழா மலர் வெளியிட்டு வைக்கப்படும்.

இவ்விழாவிற்கு மன்னார் மறைமாவட்டத்தில் இருந்து குருக்கள் துறவிகளாக உருவாகி பல்வேறு துறவற சபைகளில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பணியாற்றும் அனைவரும் அழைக்கப்படவுள்ளனர். இவ்விழா தொடர்பான - வழிபாடு, கலைநிகழ்வுகள், உணவு, தங்குமிட வசதி, போக்குவரத்து போன்ற - பல்வேறு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யூபிலியை ஒட்டிய அண்மைய ஆன்மீக ஆயத்தமாக ஜனவரி மாதத்தில் மன்னார் மக்களுக்கு முன்பு அறிமுகமான அகஸ்ரின் மொண்டே காட் அடிகளின் தலைமையில் மறைக்கோட்ட மட்டத்தில் விசுவாசப் புதுப்பித்தல் நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

## கொழும்பு கத். பாடசாலைகளுக்கு புதிய அதிபர்கள்

கொழும்புப் பேராயர் மேதகு ஒஸ்வோர்ட் கோமிஸ் ஆண்டகை, கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு தனியார் பாடசாலைகளுக்குப் புதிய அதிபர்களை நியமித்துள்ளார். கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரியின் புதிய அதிபராக பிறரிஸ் யூட் கபிரியல் அடிகளாரும், கொழும்பு ஜோசப் கல்லூரியின் புதிய அதிபராக சில்வெஸ்ரர் றணசிங்க அடிகளாரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் 1985 ஆம் ஆண்டு, குருக்களாகத் திருநிலைப்படுத்தப் - பட்டு கல்விப் பணியில் சேவையாற்றியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## மன்னார் திருமறைக் கலாமன்றத்தினரால் குஞ்சுக்குளத்தில் இளைஞர் சமாதான பாசறை



மன்னார் திருமறைக் கலாமன்றத்தினால் மன்னார் மாவட்ட ரீதியாக சுமார் 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள இளைஞர் யுவதிகளை இணைத்து இளைஞர் சமாதானப் பாசறை நடாத்தப்பட்டது. மன்னார் குஞ்சுக்குளத்தில் நடைபெற்ற இப்பாசறை கடந்த செப்ரம்பர் மாதம் 23,24,25 ஆகிய மூன்று தினங்களில் வதிவிடப்பாசறையாக நடைபெற்றது. இப்பாசறையில் 20க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து சுமார் 65 இளைஞர் யுவதிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

இவர்களுக்கு பலவிதமான பயிற்சிகள் கொடுக்கப்பட்டு இறுதிநாளில் சான்றிதழ் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மன்ற இணைப்பாளர் திரு. ஜோண் பொஸ்கோ மற்றும் செயலாளர், பொருளாளர் பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் அருட்சகோதரர்கள் ஆரோக்கியம், சவுல்நாதன் ஆகியோரும் கிராம சேவகர் பீற்றரும் கலந்துகொண்டனர். மன்னார் திருமறைக் கலாமன்றத்தின் பயிற்சியாளர் குழுவினால் நடாத்தப்பட்ட இப்பாசறை தீப்பாசறைக் கலைநிகழ்வுகளுடன் 3வது நாள் நிறைவுற்றது. பாசறை நிகழ்வுகளிற்கு குஞ்சுக்குளத்து மக்கள் பெரிதும் உதவியாக இருந்தனர்.

## செபமாலைக் கன்னியர்களின் உயர் தலைவியாக மீண்டும் அருட்சகோதரி பப்ரிஸ்ற் தெரிவு



செபமாலைக் கன்னியர்களின் (Rosarian Sisters) புதிய உயர் தலைவியாக அருட்சகோதரி மேரி ஜோன் பப்ரிஸ்ற் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். கடந்த நொவம்பர் மாதம் 3ம் திகதி வெண்ணப்புவ திருக்குடும்ப கன்னியர் தியான இல்லத்தில் நடைபெற்ற செபமாலைக் கன்னியர்களின் பொதுச் சங்கத்திலேயே (General Chapter) இவர் தெரிவு செய்யப்பட்டார். இலங்கையில் இருந்து 23 அருட்சகோதரிகளும் இந்தியாவில் இருந்து 20 அருட்சகோதரிகளும் பங்கெடுத்த இப்பொதுச்சங்கத்தில் செபமாலைக் கன்னியர்களின் வாழ்வு பணி பற்றி மீளாய்வு செய்யப்பட்டது. அருட்சகோதரி பப்ரிஸ்ற் அவர்கள் தற்பொழுது மூன்றாவது தடவையாக உயர்தலைவி பொறுப்பை ஏற்கின்றார். அருட்சகோதரி அவர்களுக்கு மன்னா சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

## பைபிள் அச்சிட்ட சீன அமைச்சருக்கு தண்டனை

சீனாவில் சட்டவிரோதமாக பைபிள் அச்சடித்து வெளியிட்ட அமைச்சருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவரின் மனைவிக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை கிடைத்தது.

மத நம்பிக்கையற்ற நாடான சீனாவில் பைபிள் மற்றும் இதர மதங்கள் பற்றிய புத்தகங்கள் வெளியிடுவதற்கும், அச்சிடுவதற்கும் அந்நாட்டின் மதவிவகாரத்துத் துறையின் அனுமதி பெறவேண்டும். இங்குள்ள கடைகளில் பைபிள்களை தாராளமாக விற்கமுடியாது. வாங்கவும் முடியாது. இதனால் சீனா உலகளவில் மதசகிப்புத் தன்மையற்ற நாடு என விமர்சனத்திற்கு உள்ளாகி வருகிறது. இந்நிலையில், புரட்டஸ்டாண்ட் பிரிவைச் சேர்ந்த சீன அமைச்சர் கய்சூவ்கா மற்றும் அவரின் குடும்பத்தினர் அரசின் அனுமதியின்றி, பைபிள் மற்றும், கிறிஸ்தவ புத்தகங்களை அச்சிட்டதாக கடந்தாண்டு செப்ரெம்பர் மாதம் கைதுசெய்யப்பட்டனர். இது தொடர்பான வழக்கு பெய்ஜிங்கில் உள்ள மக்கள் நடுவர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. இதில், அமைச்சர் கய்சூவ்காவிற்கு சட்டத்திற்குப் புறம்பான வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக, மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து, தீர்ப்பளிக்கப்பட்டது. இவரது மனைவி ஜியோயுன்பேவிற்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.

## வங்காலைப் பாடசாலையின் புதிய அதிபராக அருட்சகோதரர் விஜயா



வங்காலை மன்/ புனித ஆனாள் மத்திய மகாவித்தியாலயத்தின் புதிய அதிபராக டிலாசால் அருட்சகோதரர் எஸ். கிறிஸ்ரி விஜயதாசன் அவர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 30ம் திகதி நியமிக்கப்பட்டுள்ளார். இவர் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் கனிஸ்ர பிரிவு அதிபராக மூன்று வருடங்களும் (1999 -2001) இக்கல்லூரியின் பிரதி அதிபராக ஏழு வருடங்களும் (1993 - 1999, 2004 - 2005) கடமையாற்றிய அனுபவமுள்ளவர்.

இவர் இப்பாடசாலையின் கனிஸ்ர பிரிவு அதிபராக இருந்த வேளையில் சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஆய்வில் மாவட்ட மட்டத்தில் முதல் தரப் பாடசாலையாக தெரிவுசெய்யப்பட்டு பணப்பரிசினைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. இவர் கடந்த 13 வருடங்களாக 1992 - 2005) மன்னார் மாவட்ட சாரணர் சங்க உதவி ஆணையாளராகப் பணிபுரிந்து வருகின்றார். முற்போக்குச் சிந்தனையும் இளமைத் துடிப்பும் செயல் திறனும் கொண்ட சகோதரர் விஜயா தான் ஏற்றிருக்கும் புதிய பணியில் வெற்றிபெற மன்னா தனது செபம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது.

## கார்மேல் சபை ஸ்தாபகியின் நூற்றாண்டு விழா



அப்போஸ்தலிக்க கார்மேல் துறவற சபையின் ஸ்தாபகியாகிய அன்னை வெரோணிக்காவின் நூற்றாண்டு விழாவை (1906 – 2005 – 06) தொடக்கி வைக்கும் விழா 26.11.2005 அன்று கொழும்பு - 10 ஆனந்த ராஜகருண மாவத்தையில் உள்ள அப்போஸ்தலிக்க கார்மேல் சபையின் தலைமையகத்தில் கொண்டாடப் பட்டது. அன்றைய நாளில் கார்மேல் சபைக்கு இறைவன் செய்த அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறப்பட்டது.

## மன்னாருக்கு எட்டு புதிய திருத்தொண்டர்கள்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 8 அருட்சகோதரர்கள் கடந்த நவம்பர் மாதம் 24ம் திகதி திருத்தொண்டர்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர். மன்னார் செபஸ்ரியார் பேராலயத்தில் நடைபெற்ற இத்திருநிகழ்வை மன்னார் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தலைமை தாங்கி நிறைவேற்றி வைத்தார். திருநிலைப்படுத்தப்பட்ட திருத்தொண்டர்கள் விபரம் வருமாறு, அருட்சகோதரர்கள் யூட் ஞானராஜ் குரூஸ் - நேரு - (முள்ளிக்குளம்), எஸ். சவுல் நாதன் (அடம்பன், கன்னாட்டி) இ. செபமாலை (நெடுங்கண்டல்), எ. டெனி கலிஸ்ரஸ் (விடத்தல் தீவு), எஸ். லக்கோன்ஸ் பிகிறாடோ (பள்ளிமுனை), க. அ. அருள்ராஜ் குரூஸ் (பேசாலை), எஸ். டக்ளஸ் மில்ரன் லோகு (பேசாலை), ஏ. ஆரோக்கியம் (வட்டக்கண்டல்). இவர்கள் சில மாதங்கள் பங்குப் பணி அனுபவம் பெறுவதற்காக பங்குகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

## அகில இலங்கை ரீதியில் முதலாவது இடம்



மன்னார் அஞ்சல் அலுவலகத்தில் தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தராகக் கடமையாற்றும், திரு. எல். எல். அந்தோனிப்பிள்ளை அவர்கள் இவ்வாண்டு உலக அஞ்சல் தினத்தையொட்டி நடாத்தப்பட்ட போட்டியில், சிறந்த ஊழியராக அகில இலங்கை ரீதியில் தெரிவு செய்யப்பட்டு, 9.10.2005 அன்று, கண்டியில் நடைபெற்ற உலக அஞ்சல் தினவிழாவில் தொலைத்தொடர்புகள் அமைச்சர் தி.மு. ஜெயரத்தன அவர்களால் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## ‘தினகேசரி’ என்ற பெயரில் இலங்கையில் புதிய கிறிஸ்தவப் பத்திரிகை




இலங்கையில் கொழும்பை மையமாகக் கொண்டு, புதிய கிறிஸ்தவ செய்திப் பத்திரிகையொன்று கடந்த ஒக்ரோபர் மாதம் முதல் வெளியிடப்பட்டு வருகிறது. ‘தினகேசரி’ என்ற பெயரில் மாதப் பத்திரிகையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பத்திரிகை, எதிர்வரும் புதிய வருடத்திலிருந்து, வாரப் பத்திரிகையாக வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் இருக்கக்கூடிய, அனைத்துக் கிறிஸ்தவ சபைகளையும் இணைத்து, அனைத்துச் சபைகளுக்கும் பொதுவான ஒரு பத்திரிகையாக இது வெளிவருகிறது. இலங்கையில் ஏறக்குறைய 30 இலட்சம் கிறிஸ்தவர்கள் வாழ்கின்றனர். இவர்களின் குரலை ஒருமித்து, ஒலிக்கச் செய்வதும், கிறிஸ்தவ மக்களுக்கு எதிராக நடைபெறும் அநீதிகளையும், அடக்குமுறைகளையும் ஒருமித்து எதிர்ப்பதும் இதன் நோக்கங்கள் ஆகும்.

## வத்திக்கானின் தீபாவளி வாழ்த்துச் செய்தி

மதங்களுக்கிடையில் நல்லுரையாடலுக்கான வத்திக்கான் ஆணையத்தின் தலைவர் பேராயர் மைக்கேல் பிட்ஜெட்ரால், தீபாவளியை முன்னிட்டு, இந்திய இந்து சகோதரர்களுக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார். அந்த வாழ்த்துச் செய்தியில், “இந்த விழா இந்து சகோதரர்களின் முக்கியமான விழாவாகும். இவ்விழா பொய்மீது மெய்யும், இருள்மீது ஒளியும் வெற்றி கொண்டதைக் கொண்டாடும் விழா.

இயற்கைச் சீற்றமான சுனாமியால் மக்கள் பாதிக்கப்பட்டபோது, இந்து சகோதரர்கள் தாராளமாக மனித நேயத்துடன் உதவினர். எல்லா மதங்களுடனும் நல்லுறவுடன் வாழவே இந்து சகோதரர்கள் விரும்புகின்றனர். கிறிஸ்தவ மதமும், “மனிதர்கள் அனைவரும் இறைவனின் சாயல்கள்” என்ற உண்மையை உணர்ந்து, பிறமதத்தினருடன் நல்லுறவைக் கையாண்டு வருகிறது. உலகமனைத்திலும், மொத்தம் 811 மில்லியன் இந்துக்கள் உள்ளனர். இவர்களில் 81.5 சதவிகிதத்தினர் இந்தியாவில் உள்ளனர்.

உலக மக்கள் தொகையில் இந்துக்கள் 13.4 விழுக்காடு உள்ளனர். இவ்விழாவில் அடிப்படைவாதிகள், தீவிரவாதிகள், மதவாசிகளின் சூழ்ச்சிகளுக்கு மயங்காமல், “ஒளியின் மக்களாக அனைவரும் ஒற்றுமையாக வாழ வாழ்த்துகின்றோம்” என்று கூறியுள்ளார்.

## இறைவனின் இரக்கத்தாலும், புனித ஆட்சிப்பீடத்தின் ஆதரவாலும்,
## மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆகிய நான்
## மன்னார் மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும்

# மறைமாவட்ட வெள்ளி விழா பற்றிய திருமடல்

கிறிஸ்துவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே!

## முன்னுரை

எம் மீட்பர் கிறீஸ்து பிறந்த மாபெரும் விழாவைக் கொண்டாட இத்திருவருகைக் காலத்திலே நாம் நம்மைத் தயாரித்து வருகிறோம். இறைமகன் கிறீஸ்துவினுடைய இறையரசின் கனவுகளைத் தாங்கிச் செல்லும் அவருடைய சீடத்துவ வாழ்விற்கு நாம் பிறக்க வேண்டும் என மீண்டும் மீண்டும் எமக்கு அழைப்பு விடுவதாகவே இந்த விழா அமைகிறது.

நிலையற்ற இந்த உலகத்தோடு நம்மைக் கட்டி வைக்கக்கூடிய தளைகள் அனைத்திலுமிருந்தும் நாம் மனமாற்றம் பெற்று, இறையரசின் விழுமியங்களுக்கு எம்மை அர்ப்பணிக்கத் தூண்டி நிற்கும் இவ்விழாவை அர்த்தமுடன் கொண்டாட முன்வருவோமாக. இப்பெருவிழாவை அடுத்து நமது மறைமாவட்டம் உதயமாகிய வெள்ளி யூபிலி விழாவையும் நாம் கொண்டாட உள்ளோம். 2005ம் ஆண்டு தை மாதம் இடம்பெற்ற மேய்ப்புப்பணி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் இவ்வாண்டில் பங்கு ரீதியாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. “கிறீஸ்தவ சாட்சிய வாழ்வை ஆழமாக்க நற்கருணைச் சமூகங்களாக மாறுவோம்” எனும் இம்மாநாட்டின் மையப்பொருள், இவ் யூபிலி ஆண்டில் எமது பங்குகளில் இடம்பெற்ற பல்வேறு புதுப்பித்தல் ஆயத்த நிகழ்வுகளுக்கு அடித்தளமாய் அமைந்திருந்தது. தொடர்ந்தும் 2006ம் ஆண்டு தைத்திங்களில், எமக்கு முன்பே அறிமுகமான அகஸ்ரின் முண்டேகாட் அடிகளின் தலைமையில் மறைக்கோட்ட மட்டத்தில் விசுவாசப் புதுப்பித்தல் நிகழ்வுகள் இடம்பெறும்.

## மறைமாவட்டத்தின் வெள்ளி யூபிலி விழா

மன்னார் மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்டதன் 25ம் ஆண்டு வெள்ளி யூபிலி விழாவை வருகிற வருடம் தைத்திங்கள் 29ம் நாள் தோட்டவெளி வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயத்தில் கொண்டாட உள்ளோம். கடந்த 25 ஆண்டுகளாக இறைவன் நம்மை அற்புதமான வழிகளிலே வழிநடத்தி வந்துள்ளார். கொடூரமான போர், புலம்பெயர்வு, நிவாரண நிலைய வாழ்வு, பொருளாதாரச் சுமை, சமூகச் சீர்கேடுகள், போரோ சமாதானமோ அற்ற சூனிய சூழ்நிலை இவை ஒருபுறம் நம்மை அழுத்தினாலும் மறுபுறம் இறைவனின் அளப்பெரிய செயல்களை நாம் கண்டுகொண்டோம். எமது மறைமாவட்டக் குருக்கள் ஆயருடன் ஒன்றிணைந்து தலத்திருச்சபைக்காக தம்மைத் தாமே தற்கொடையாக கையளித்து கிறீஸ்து மேய்ப்பனின் இதயத்தைத் தாங்கி மறைமாவட்ட மக்களோடு பயணித்திருக்கிறார்கள். துறவியரும், ஏராளமான பொதுநிலைப் பணியாளரும் தன்னலம் மறந்து தமது அரிய பணியை மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்காக உவந்தளித்திருக்கிறார்கள்.

12 புதிய பங்குகளையும் 35 புதிய மறைமாவட்டக் குருக்களையும் பல்வேறு புதிய துறவற சபைகளின் பணி விரிவாக்கத்தையும் இக்காலகட்டத்தில் நாம் பெற்றுள்ளோம். கல்வியிலும், மனித வளத்தைப் பெருக்குவதிலும் பெருவளர்ச்சியைக் கண்டுள்ளோம். புதிய வகையில் திருச்சபையாக இருக்கும் அன்பிய வாழ்க்கை முறையால் விசுவாசம் ஆழப்படுத்தப்பட்டு சாட்சிய வாழ்வு வளர்ந்து வந்திருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக எமது ஒப்பற்ற செல்வமாகிய விசுவாசத்திற்கு, தொடக்க காலத்திலேயே தமது இரத்தத்தினால் வித்திட்ட 600ற்கும் மேற்பட்ட எமது மூதாதையரை எம் சொத்தெனக் கொண்டிருப்பது எமக்குக் கிடைத்துள்ள மேலான அருள்வளமாகும்.

## தோட்டவெளியில் விசுவாசத்திற்காகக் குருதி சிந்தி, உயிர்த்தியாகம் செய்த நம் முன்னோர்

இந்த யூபிலி ஆண்டிலே பெரும்பேறான ஒரு நிகழ்வாக பரிசுத்த தந்தை 16ம் ஆசீர்வாதப்பரை நான் சந்தித்தேன். அப்போது அவர் மன்னார் மறைமாவட்டத்தைப் பற்றியும், அதன் இறைமக்களைப் பற்றியும் கருத்தாகக் கேட்டறிந்தார். அந்த வேளையிலே 1544ம் ஆண்டு மார்கழி மாதத்தில் நமது மண்ணிலே விசுவாசத்திற்காய் குருதி சிந்தி உயிர்த்தியாகம் செய்த 600ற்கும் மேற்பட்ட நம் மூதாதையர்களைப் பற்றி நம் திருத்தந்தைக்கு விளக்கமளித்தேன். இந்த நம் முன்னோருக்கு ஞான உபதேசம் செய்து, ஞானத்தீட்சையளிக்க வழி செய்த, இந்தியாவின் தென் கரையோரத்திலே, அன்று பணி செய்து வந்த புனித பிரான்சிஸ்கு சவேரியார், இவ் அருள் நிகழ்வு பற்றி 27.01.1545 என்ற திகதியிட்டு எழுதிய கடிதத்திலே ஓரிடத்தில், “நாம் வாழும் இக்காலத்திலும் வேதசாட்சிகளுக்கு குறைவு இல்லை என்பதற்காக, நம் ஆண்டவராகிய தேவனுக்கு நன்றி உரித்தாகுக. அவர் தந்த மேலான பராமரிப்பினால், பூமியில் இழைக்கப்படும் கொடூர செயல்கள் ஊடாகவும், தேர்ந்தெடுக்கப்பட்டோரின் மாட்சி நிறை தொகையைப் பெருகச் செய்து வருகிறார்” என்று எழுதப்பட்டிருந்தது. இந்த வாசகத்தைப் பரிசுத்த தந்தைக்கு காட்டியபோது, அதை அவர், அது எழுதப்பட்ட ஸ்பானிய மொழியிலே கூர்ந்து வாசித்துப் பெருமகிழ்ச்சியடைந்தார்.

## மன்னார் வேதசாட்சிகளை புனிதர் நிலைக்கு உயர்த்தும் முயற்சி

“மன்னார் வேதசாட்சிகளைப்” புனிதர் நிலைக்கு உயர்த்தும் முகமாக வரலாற்றில் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. மன்னார் மறைமாவட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட முயற்சிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட, போர்க்காலச் சூழல் பெருந்தடையாக இருந்துள்ளது. எனினும் இப்புனித காரியத்தை, நாம் இந்த யூபிலி ஆண்டிலே, திருத்தந்தை அளித்த ஆசீரோடும், புனிதர்கள் பற்றிய விடயங்களைக் கையாளும் உரோமையில் உள்ள பேராயத்தின் வழிகாட்டலோடும், இலங்கை ஆயர் மன்றத்தினதும், எமது மறைமாவட்டக் குருக்களினதும் முழு ஈடுபாட்டுடனும், புதிதாக முன்னெடுக்கவுள்ளோம். மறைமாவட்டத்தின் வெள்ளி விழா அன்று தோட்டவெளியிலே, இறைமக்கள் முன்னிலையில் இந்த முயற்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். அன்று, தாம் பெற்ற விசுவாசத்தைக் காக்க தம் உயிரையே விலையாகக் கொடுத்து நம் அனைவரினதும் விசுவாசத்திற்கு வித்திட்ட நம் முன்னோரின் நன்முன்மாதிரிகையால் நாம் ஆட்கொள்ளப்படுவதே, இந்த நல்முயற்சியின் வெற்றிக்கு அடித்தளமாகும்.

## எம் மறைசாட்சிகளின் சீடர்களாக நாம் மாறவேண்டியதன் அவசியம்

எமது விசுவாசம், இறைவன்தாமே எமக்கு கொடுத்த ஒப்பற்ற செல்வம். இதை எத்தியாகம் செய்தும் பழுதின்றிக் காத்து அதற்குச் சாட்சியம் பகர்வது எமது தலையாய பொறுப்பு. அன்று விசுவாசம் எம் மண்ணில் துளிர்த்தபோது அதற்கு எதிராக வேதகலாபனை ஏற்பட்டது. இன்று எமது விசுவாசத்திற்கு எதிராக, இறைவனைத் தட்டிக் கழித்து, உலக மனிதத்தை மட்டும் மையமாகக் கொண்ட சிந்தனைப் போக்குகளும், அதே விசுவாசத்தைக் கலப்படம் செய்து வியாபாரப் பொருளாக்கும் முயற்சிகளும் எம்மத்தியில் மலிந்து கிடக்கின்றன. எமது நாட்டின் ஏனைய சமயங்களில் உள்ள



அடிப்படைவாதக் கொள்கையுடையோர், கிறீஸ்தவ மறைக்கு எதிராகச் செயற்பட்டு, அதன் அடிப்படை உரிமைகளைக் கூட சட்ட ரீதியாகப் பறித்தெடுக்கக் கட்டியம் கூறி நிற்கிறார்கள்.

இந்தச் சூழலிலே எம் மறை சாட்சிகளின் வழிநின்று நாம் செயற்பட வேண்டு மென்றால் நாம், அவர்கள்மீது கொண்ட பக்தியில் மூழ்கிய, சீடர்கள் ஆவது பெரும் தேவையாய் உள்ளது. இப்படிப்பட்டதோர் சீடத்துவத்தில் வேரூன்றி, நாம் கிறீஸ்து ஆண்டவரோடும், நம்முள் ஒருவர் ஒருவரோடும் தோழமையில் இணைந்து நற்கருணைச் சமூக, அன்பியச் சமூக வாழ்வை நம் குடும்பத்திலும், அயலிலும் வாழும்போது நாமும் நமது விசுவாசத்தைப் பழுதின்றிக் காத்து, பிறரும் அதைக் காக்க வழிசெய்ய முடியும். அன்பிய இலட்சிய வாழ்க்கை முறைக்கு எதிராக எழக்கூடிய மனித அடிப்படையிலான எதிரிடைகளை மேற்கொள்ள, பெரும் தியாகம் தேவைப்படுகின்றது என்பதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம்.

இப்படிப்பட்ட பெருந்தியாகத்தை நாம் உயரிய மனத்துடன் மேற்கொள்ள, தியாக சிகரங்களான “மன்னார் மறைசாட்சிகளின்”மீது நாம் கொள்ளும் உண்மையான பக்தி வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இறைவனுடைய சந்நிதானத்திலே இருந்து நமக்காகப் பரிந்து பேசும் இந்த நம் முன்னோர்கள் மேற்படி அருள்வரத்தையும், உங்கள் பல்வேறு தேவைகளையும் பெற்றுத்தர வல்லமையுள்ளவர்களாக இருக்கிறார்கள். இவர்களுடைய பரிந்துரையை நாம் நாடி இறைவனிடம் வேண்டுதல் செய்யும் பொருட்டு, செப அட்டைகள் உங்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வழங்கப்படும். இந்தச் செபம் “மன்னார் மறைசாட்சிகளை”ப் புனிதர்கள் எனத் திருச்சபை ஏற்று, இவர்களைப் பீடத்தின் மகிமைக்கு உயர்த்த வேண்டும் என்று இறைவனை வேண்டுவதாகவும் அமைந்திருக்கும். இந்தச் செபத்தைத் தினமும் ஒவ்வொரு வீட்டிலும், ஆலயங்களிலும் பக்தியுடன் செபிக்க முன்வருவோம்.

## யூபிலிக் கொண்டாட்டமும் மக்களின் பங்களிப்பும்

மறைமாவட்ட மக்கள் அனைவருமே, தகுந்த ஆயத்தத்துடன் யூபிலி விழாக்கொண்டாட்டத்தில் பங்குகொள்ள அன்போடு அழைப்பு விடுக்கின்றோம். மேலே முகவுரையில் குறிப்பிடப்பட்டதுபோல், யூபிலி விழாவிற்கான மறைமாவட்ட ரீதியான, அண்மித்த ஆன்மீக ஆயத்தம் இத்தைத்திங்களில் இடம்பெறும். மனமாற்றத்தையும், நற்கருணை வாழ்வையும் மையப்படுத்தி அருட்தந்தை அகஸ்ரின் முண்டேகாட் அவர்களால் நடாத்தப்படவுள்ள இந்த அருள் நிகழ்வுகளில், ஒவ்வொருவரும் தவறாது பங்குபற்ற முயற்சிக்கவேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மறைமாவட்டத்தின் நான்கு மறைக்கோட்டங்களிலும் தனித்தனி நான்கு தினங்களுக்கு இந்த அண்மித்த ஆயத்த நிகழ்வுகள் பாவசங்கீர்த்தன வசதிகளுடன் இடம்பெறும்.

விசுவாசிகளின் அன்னையும் வேதசாட்சிகளின் இராக்கினியுமாகிய எம் தாய் மரியா எம்மைத் தாயன்போடு பேணி எம் முயற்சிகளில் எல்லாம் அருகிருந்து வழிநடத்துவாராக. இந்தத் தாயினுடைய குன்றாத பராமரிப்பும் இறைவனின் நிறை ஆசீரும் என்றும் உங்களுடன் இருப்பதாக.

கிறீஸ்துவில் உங்கள் மேல் பற்றுள்ள
இராயப்பு யோசேப்பு,
மன்னார் ஆயர்,

# கொஞ்சமாச் சிரிங்க..!

பொலிஸ்: நீ இவன் வீட்டில் திருடினியா?
திருடன்: இல்லேங்க சேர். நான் அவர் வீட்டபோனது மட்டும்தான்
பொலிஸ்: சாட்சி எங்கே? சாட்சி : இங்க நிற்கிறேன் சேர்.
பொலிஸ்: இவன் உங்கள் வீட்டிற்கு வந்த நேரம் என்ன?
சாட்சி : மூன்றரைமணி இருக்குமையா.
பொலிஸ்: உன்னுடைய வீட்டுக்குள் புகுந்த நேரம் என்ன?
சாட்சி : மூன்றரைமணி இருக்குமையா
பொலிஸ்: உன்னுடைய பொருளை எடுத்த நேரம் என்ன?
சாட்சி: மூன்றரை மணி இருக்குமையா
பொலிஸ்: அப்ப என்னையா நடந்தது?
சாட்சி : என்னுடைய வோச் ஓடவில்லை ஐயா?

*சி. ஜெறிப் பிரியாந்தன், ஆலங்குளம், வட்டக்கண்டல்*

சுதன்: அறுக்கும் கருவிகள் எவை?
மாறன்: கத்தி, பிளேடு, வாள், ஆசிரியர்.

..................................



தந்தை: மகனே நீ என் பெயர் சொல்லும் அளவு வளர வேண்டும்.
மகன்: சரி, மாடசாமி.

..................................

1ம் நபர்: Fan போட்டதுமே நானும் என் மனைவியும் ஒருத்தரை ஒருத்தர் கன்னா பின்னா என்று திட்டித் தீர்ப்பம்.
2ம்நபர்: ஏன் அப்படி?
1ம் நபர்: “காற்றுள்ள போதே தூற்றிக்கொள்” என்பதை நீ கேள்விப்படவில்லையா?

*அ. நிரோசன் ரஜிவ் குரூஸ், தரம் - 8, பேசாலை.*



மனைவி: உங்க ஒவ்விஸ் குரூப் போட்டோவுல இரண்டு பேர் மட்டும் தூங்கின மாதிரியே இருக்காங்களே?

கணவன்: என்ன செய்றது! எவ்வளவு முயற்சி செய்தாலும் அவர்களை மட்டும் விழிக்க வைக்கவே முடியல்ல.

..................................

காதலன்: அந்தி மழை பொழிகிறது. ஒவ்வொரு துளியிலும் உன் முகம் தெரிகிறது.
காதலி: முதல்ல போய் உங்க கண்ண டாக்டர்கிட்ட காட்டுங்க.

*பி. சிந்து, ஆட்காட்டிவெளி, அடம்பன்.*

மனைவி : உப்பிட்டவரை உள்ளளவு அதாவது உயிர் உள்ள வரை மறக்கக்கூடாதுன்னு நம்ம மகளிடம் சொன்னது தப்பா போச்சு.
கணவன்: ஏன் என்ன ஆச்சு?
மனைவி: உப்பு வியாபாரியும் நம்ம மகளும் ஊரைவிட்டே ஓடிப் போயிற்றாங்க.

..................................

ஆசிரியர்: குடிசையே இல்லாத தேசம் எது?
மாணவன்: பங்களா தேசம் சார்.

*பி. திபிகரன், ஆட்காட்டிவெளி அடம்பன்.*

தாத்தா: செல்லக்குட்டி, சின்ன முள்ளும் பெரிய முள்ளும் எதுல இருக்குன்னு பாத்திட்டு வா.
பேத்தி: இரண்டுமே கடிகாரத்துக்குள்ளதான் இருக்கு தாத்தா.

வக்கில் : இதோட மூணாவதா கோட்டுக்கு வாறியே வெட்கமாயில்லை?
குற்றவாளி : இதுல என்ன ஐயா வெக்கம் இருக்கு. நீங்க தினமும் வாறிங்க நான் மூன்று தடவைதானே வந்திருக்கிறன்.

..................................

அரசன்: மந்திரியே என்ன தகவல்?
மந்திரி : நம்மட நாட்டில ஒரு இளைஞன் 8 அடிப் பாம்பை தூக்கி விட்டான்.
அரசன்: என்ன மந்திரியாரே, இதென்ன அதிசயம் .என்ர வீரம் நாட்டு மக்களுக்கு இருக்கத்தானே செய்யும்.
மந்திரி: அது செத்த பாம்பு அரசே.

*கி. செறின் சியாமா, குமனாயங்குளம், ஆட்காட்டிவெளி.*

## விபத்து ஆசை

அவனுக்கு நீண்ட நாட்களாக விபத்து ஒன்றைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை. ஒரு நாள் வீதி வழியாகப் போய்க்கொண்டிருந்தான். அந்த வீதியில் ஏதோ விபத்து நடந்து வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தது. யாரோ அடிபட்டுக் கிடக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டான். எப்படியாவது அந்தக் கூட்டத்தில் நுழைந்துகொண்டு விபத்தைப் பார்த்துவிட ஆசைப்பட்டான். ஆனால் கூட்டத்திற்குள் நுழைய முடியவில்லை. அவனுக்கு திடீர் என்று ஓர் ஐடியா வந்தது. “சற்று ஒதுங்குங்கள். ஒதுங்குங்கள். அந்த விபத்தில் அடிபட்டு இரத்தம் சொட்டச் சொட்டக் கிடப்பது என்ர தம்பி. அவனைக் காப்பாற்றுவதற்கு வழிவிடுங்கள்” என்று கத்தினான்.

அங்கே கூடிநின்ற கூட்டத்தினர் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தனர். ஆயினும் அவசரமாக வழிவிட்டனர். கூட்டத்தை விலக்கிக்கொண்டு பார்த்தவன் அதிர்ச்சி அடைந்தான். அங்கே அடிபட்டு இரத்தம் ஒழுகக் கிடந்தது ஒரு கழுதை.

*ப. திபிகரன், ஆட்காட்டிவெளி*

தமிழ் மறைமாவட்டங்களின் இதயம் எனக் கருதப்படும்

# யாழ். புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின்

# வெள்ளி விழா நிகழ்வுகள்

## வரலாற்றுத் தடம் பதிக்கும் நிகழ்வில் பலர் பங்கேற்றனர்

யாழ் மன்னார் மறை மாவட்டங்களிலுள்ள பல்வேறு பணித்தளங்களிலும், பல்வேறுபட்ட துறவற சபைகளிலும் இளமைத் துடிப்புடனும், ஆன்மீக ஆர்வத்துடனும், அயராது பணியாற்றும் அருட்பணியாளர்கள் பலரை உருவாக்கிய பெருமிதத்துடன் தலைநிமிர்ந்து நிற்கும் யாழ். புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி கடந்த டிசம்பர் மாதம் 2ம், 3ம் திகதிகளில் தனது வெள்ளி விழாவைக் கண்டுகளித்தது. அந்த அன்னை ஈன்றெடுத்த புத்திரர்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கித்திளைத்து, இறைவனுக்கு நன்றி கூறிநின்றனர். வரலாற்றில் தடம் பதித்துள்ள இந்நிகழ்வை இவர்கள் பல்வேறு வகைகளில் சிறப்பித்து நின்றனர். 2ம், 3ம் திகதிகளில் திருப்பலிக் கொண்டாட்டம், விசேட கலை நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள், விருந்துகள், நினைவுச் சின்னமான மர நடுகை போன்ற இன்னோரன்ன சிறப்பம்சங்கள் இடம்பெற்றன. பரிசுத்த தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதி பேராயர் மரியோ செனாறி அவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

நற்கருணை ஆண்டையொட்டி வவுனியா மறைக்கோட்ட திருப்பாலத்துவ சபை சிறுவர்களுக்கான

### போட்டி முடிவுகள்

### கட்டுரை

குழு – 1

1ம் இடம் - கி. நிருஜன் - வவுனியா
2ம் இடம் - ச. டனுசன் - இலுப்பைக்குளம்
3ம் இடம் - ர. ஆன்ரதினி - வவுனியா

குழு – 2

1ம் இடம் - அ. நிறோஜினி - இலுப்பைக்குளம்
2ம் இடம் - ம. துஷாறகா - வவுனியா
3ம் இடம் - ஜே.சா. கமிலஸ் - வவுனியா

குழு - 3

1ம் இடம் - ப. அன்ரனிற்றா - இலுப்பைக்குளம்
2ம் இடம் - மோ.சாலட் மரியா - வவுனியா
3ம் இடம் - தே. சுகீத்தன் - இலுப்பைக்குளம்

### சுவரொட்டி

குழு - 1

1ம் இடம் - வி.டயானா பிறின்சி - வவுனியா

குழு - 3

1ம் இடம் - ஜெ. ஜெனிவி - வவுனியா
2ம் இடம் - செ. சபீன் நிஷா - வவுனியா
3ம் இடம் - ஸ்ரீ. வைடூரி - வவுனியா

### சித்திரம்

குழு - 1

1ம் இடம் - ச.நியோமி - வவுனியா
2ம் இடம் - ர.பிரவிந்தன் - வவுனியா
3ம் இடம் - ர.ஆன்ரதினி - வவுனியா

குழு - 2

1ம் இடம் - அ. கிறிஸ்ரா சில்வா - வவுனியா
2ம் இடம் - ம. மெரலின் றொஷானி - வவுனியா
3ம் இடம் - கி. கிஷோக் - வவுனியா

குழு - 3

1ம் இடம் - செ. நிரோசினி - வவுனியா
2ம் இடம் - தே. சுகிந்தா - இலுப்பைக்குளம்
3ம் இடம் - ஸ்.றொகான்சி பீரிஸ் - வவுனியா.

*கிறிஸ்தவ நாகரீகத்தை அறிமுகம் செய்யக்கோரியும்*
*மறைக்கல்விப் பரீட்சைக்கு அங்கீகாரம் பெறக்கோரியும்*

### மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர்

# மன்னார் ஆயருக்கு கடிதம்



க.பொ.த. உயர்தர வகுப்புக் கலைத் திட்டத்தில் கிறிஸ்தவ பாடநெறி என்னும் பாடத்தை அறிமுகம் செய்வது தொடர்பாகவும் மறைக்கல்விப் பரீட்சைக்கு அரச அங்கீகாரம் பெற்றுத்தரக் கோரியும் மன்னார் வலயக் கல்விப்பணிப்பாளர் திரு. ஆபேல் றெவ்வல் அவர்கள் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிறிஸ்தவ நாகரீகம் எனும் பாடத்தை கலைத்திட்டத்தில் சேர்ப்பது தொடர்பாக அவர் எழுதிய கடிதத்தில்,

க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் சமய நெறியைப் பயிலும் மாணவர்களுக்காக 'சமய நாகரீகம்' என்னும் அந்தந்த சமய பாடநெறியும் கீழ்காணுமாறு நெடுங்காலமாக கற்பிக்கப்பட்டு வருகின்றது: இந்து சமய நெறியைப் பயிலும் மாணவர்களுக்கு 'இந்து சமயம்' 'இந்து சமய நாகரீகம்' என்னும் பாடங்களும் இஸ்லாமிய சமய நெறியைப் பயிலும் மாணவர்களுக்கு 'இஸ்லாம்', 'இஸ்லாமிய நாகரீகம்' என்னும் பாடங்களும், பௌத்த சமய நெறியைப் பயிலும் மாணவர்களுக்கு 'பௌத்தம்', 'பௌத்த நாகரீகம்' என்னும் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆனால் கிறிஸ்தவ மாணவர்களுக்கு மட்டும் '*கிறிஸ்தவம்*' என்ற பாடநெறி மட்டுமே கற்பிக்கப்படுகின்றது.

இப்பாட நெறியோடு மற்றுமொரு பாடமாக *கிறிஸ்தவ நாகரீகம்* என்ற பாடம் மாணவர்களுக்கு கற்பிக்கப்படவேண்டிய தேவை உள்ளது. எனவே *கிறிஸ்தவ நாகரீகம* எனும் இப்புதிய பாடத்தை அறிமுகம் செய்து கற்பிக்க இலங்கை ஆயர் பேரவையின் அங்கீகாரத்தைப் பெறுமாறும் கல்வியமைச்சின் அனுமதியைக் கோருமாறும் கேட்டுள்ளார். இவ்வாறு இருபாடங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் கிறிஸ்தவ மாணவர்கள் சராசரி Z புள்ளிகளைப் (Average Z Score) பெற்று அதிக பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் அவர்கள் மன்னார் ஆயருக்கு எழுதிய இன்னுமொரு கடிதத்தில் மறைக்கல்விப் பரீட்சைக்கு அரச அங்கீகாரம் பெற்றுத்தரும்படி கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் எழுதிய கடிதத்தில், எமது நாட்டு மக்களால் பின்பற்றப்படுகின்ற பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்கள்சார் அறநெறிப் பாடசாலைகளில், அவ்வவ் சமயபாட கலைத்திட்டம் பயிற்றப்பட்ட சமய ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன. இக்கலைத்திட்டம் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் கிறிஸ்தவம் தவிர்ந்த ஏனைய சமய நெறிகளுக்கான பொதுப்பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு பெறுபேறுகள் வெளியிடப்படுகின்றன. இதனால் மாணவர்களின் சமய அறிவு வளரக் கூடியதாக இருக்கின்றது.

இப்பரீட்சைகள் கீழ்வரும் பெயர்களில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் நடாத்தி வருகின்றது. தரம் 10 -11 இந்து சமய மாணவர்களுக்கு "அறநெறிப்பாடசாலை இறுதிப்பரீட்சை" எனும் பெயரிலும் தரம் 10 -11 இஸ்லாம் சமய மாணவர்களுக்கு "அகதியாப் பாடசாலை இறுதிப்பரீட்சை" எனும் பெயரிலும் பௌத்த சமய மாணவர்களுக்கு "பௌத்த தர்ம பாசல இறுதிப் பரீட்சை" என்ற பெயரிலும் இப்பரீட்சைகள் நடாத்தப்படுகின்றன.

இவ்வாறான கலைத்திட்டம் கத்தோலிக்க மறைக்கல்வி ஆசிரியர்களினால் நாடெங்கிலுமுள்ள தேவாலயங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இக்கலைத் திட்டத்தினை அங்கீகரித்து அதனை தழுவிய வருடாந்தப் பொதுப் பரீட்சையை பரீட்சைத் திணைக்களம் நடாத்தி பெறுபேற்றினை வெளியிட்டு ஊக்கப்படுத்துவதன் மூலம் கத்தோலிக்க மாணவர்களை திருமறையில் வலுவுள்ளவர்களாக்கலாம். மேலும்,

1. அறநெறிப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு அரசாங்கம் நிரந்தர நியமனங்கள் கொடுத்து உள்வாங்க உள்ளது. எனவே அதேபோல் எமது பாடமும் அங்கீகரிக்கப்படுமாகில் இவ்வகையாக எமது மறைக்கல்வி ஆசிரியர்களும் உள்வாங்கப்படலாம்.
2. கத்தோலிக்க ஆசிரியர் தெரிவிற்கு இது போன்ற பாடத்தை அரசாங்கம் மேலதிக தகைமையாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கவை.
3. மாணவர்களைக் கல்விக் கல்லூரிக்கு தெரிவு செய்யப்படும்போது இவ்வாறான பொதுப் பரீட்சைச் சான்றிதழ் தேவைப்படுவதால் கல்விக் கல்லூரிக்கு அதிக மாணவர் உள்வாங்கப்படச் சந்தர்ப்பம் உண்டு.

எனவே இவ்விடயத்தினை கத்தோலிக்க ஆயர் பேரவையில் அங்கீகரித்து அப்பேரவையினால் கல்வி அமைச்சுக்குத் தெரியப்படுத்தி, மறைக் கல்வியினை தரம் 10-11 வரையான மாணவர்களுக்கும் அத்தோடு க.பொ.த. சாதாரண தரம் தோற்றிய மாணவர்களுக்குமாக பொதுப்பரீட்சையை மும்மொழிகளிலும் வருடந்தோறும் பரீட்சைத் திணைக்களம் நடாத்த நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.


### சுவிஸ் நாட்டில் 1வது அகவை காணும் மறைக்கல்வி வகுப்பு

கடந்த வருடம் ஆசாரத்திற்குரிய அன்னை திரேசா அம்மையாரின் நினைவு நாளான 05.09.2004 ஞாயிறு தினம் அன்று Lausanne மாநிலத்தில் அமைந்துள்ள அன்னை திரேசா சகோதரிகளின் அன்புப் பணியாளர் சபை இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்ட மறைக்கல்வி வகுப்புக்கள் இவ்வாண்டு அதே தினம் ஓர் ஆண்டுப் பூர்த்தி விழாவைக் கொண்டாடியது. இவ்விழாவில் சுவிஸ் ஆன்மீகப் பணியக இயக்குனர் அருட்பணி. பீற்றர் மனோகரன் அடிகளார் கலந்து சிறப்பித்தார்.

இம்மறைக்கல்வி வகுப்புக்கள் மூலம் மாணவர்கள் மறையறிவைப் பெற்று முன்னேறி வருகின்றார்கள். இவ்வருடம் நற்கருணை ஆண்டை முன்னிட்டு, மறைக்கல்வி மாணவர்களிடையே பேச்சு, சித்திரப் போட்டிகளும் ஒழுங்குசெய்யப்பட்டன. இதில் பலர் ஆர்வத்துடன் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

*தகவல் : மறையாசிரியர்,*
*திரு. பி. அன்ரன் பொன்ராஜா.*

# நாவண்ணனின் இரண்டு நூல்கள் மன்னாரில் வெளியிடப்பட்டன!



கவிஞர் நாவண்ணன் அவர்கள் அண்மையில் *சுனாமிச் சுவடுகள* என்ற கவிதை நூலையும் *அக்கினிக் கரங்கள்* என்ற சம்பவத் தொகுப்பு நூலையும் வெளியிட்டுள்ளார். *சுனாமிச் சுவடுகள்* என்ற நூல் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் சோகக் கதைகளை நெஞ்சுருகும் விதத்தில் வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது. இந்நூலுக்கு முல்லைமணி ஏ. சுப்பரமணியம் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார்.

*அக்கினிக் கரங்கள்* என்ற நூல் இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் இலங்கைக்குள் வந்து புரிந்த அடாவடித்தனங்களின் தொகுப்பாக இருக்கின்றது. இந்நூலில் இந்திய இராணுவம் யாழ். போதனா வைத்தியசாலையில் மேற்கொண்ட படுகொலைகள், அருட்பணியாளர் நேசன் அவர்கள் குருமடத்தில் கல்வி கற்கும் காலத்தில் இந்திய இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட சம்பவம் மற்றும் இது போன்ற பல நிகழ்வுகள் இந்நூலில் பதிவு செய்யப்பட்டுள்ளன.







*சுனாமிச் சுவடுகள்* என்ற நூலின் வெளியீட்டு விழா கடந்த நவம்பர் 3ம் திகதி அன்று மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது. *அக்கினிக் கரங்கள* நூல் வெளியீட்டு விழா கடந்த நவம்பர் மாதம் 26ம் திகதி மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. பல நூல்களின் ஆசிரியரான நாவண்ணன் அவர்கள் இது போன்ற இன்னும் பல நூல்களை தமிழ்கூறும் நல்லுலகிற்கு வழங்கவேண்டும் என மன்னா வாழ்த்துகின்றது.

# சட்டத்தரணி அமரர் அன்ரனி அவர்களுக்கு வங்காலை மக்களின் கண்ணீர் அஞ்சலி

உண்மை நீதிக்கு என்றுமே குரல் கொடுத்த அன்பே உருவான அன்ரனி ஐயா சட்டத்தரணியே, எங்கு நீர் சென்றாலும் எம் வங்காலை மக்கள் நெஞ்சினிலே நினைவுச் சின்னமாய் என்றும் நிலைத்திடுவீர். கனடா சென்றாலும் எம் கண்ணீர் வெள்ளத்திலே கலந்துவிட்டீர். துன்பங்கள் ஆயிரம் சூழ்ந்திட்ட போதிலும் அஞ்சாது மன்னார் மாதோட்ட மக்கள் மாண்புடன் வாழ பண்போடு வித்திட்டு பரிந்துரைத்து வெற்றி கண்டீர். வங்காலைப்பாடு எனும் வண்மை நிறை சொத்தினை சொந்தமாக்கிட சட்டதிட்டத்தால் வழிகாட்டினீர். தன் மானங்காத்து தலைநிமிர்ந்து உண்மை உரிமைக்காய் உம்மை அர்ப்பணித்தீர். உன்னதரே உம்பருலகம் சென்றீரோ? அன்பு மகன் ஸ்ரனி அடிகள் அமலமரித்தியாகி உம்பணி தொடர எம்மிடை விட்டுச் சென்றீர். இன்னும் தொடரும் இன்னல்கள் எண்ணியே மன்னார் ம்றைமாவட்ட மக்களின் நம்பிக்கை ஒளி மலராக அவரை எமக்களித்துச் சென்றாயே! விண்ணுலகு கருணைக்கடலே அருள்நிறை அம்மையே ஆதரிப்பாயே. - வி. அ. லெம்பேட்.

### தாழ்வுபாடு புனித வளனார் றோ. க. த. பாடசாலையில் 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்றோர்



ஏ.த[illegible]ஸ்ரன் | ம.தேவராக்ஷன் | ஜெ. இளங்கோ | ச. பெ. லக்ஷினி | ச. அ[illegible]ள்மேரி

மன்/ புனித வளனார் றோ. க.த. வித்தியாலயத்தை சேர்ந்த 5 மாணவர்கள் இம்முறை மேற்படி புலமைப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. செல்வன். ம. தேவராக்ஷன் என்பவர் 142 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இப்பாடசாலையின் கல்வித் தரம் படிப்படியாக உயர்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பம் ஒரு கோவில்



## திருக்குடும்பம் - இன்றைய குடும்பங்கள் - திருக்குடும்ப சபை

அருட்சகோதரி கனிஷியஸ், (தி. கு) மன்னார்.

இறைவனின் உண்மையான சாயலை நமக்கு வெளிப்படுத்த இயேசு இவ்வுலகிற்கு வந்தார். இறைவனைப் பற்றி நாம் கொண்டுள்ள தவறான கருத்துக்களைக் களைந்து, புதியன நமக்குப் புகட்ட வந்தார். "கடவுளை யாரும் என்றுமே கண்டதில்லை. தந்தையின் நெஞ்சத்திற்கு நெருக்கமானவரும், கடவுள் தன்மை கொண்டவருமான ஒரே மகனே அவரை வெளிப்படுத்தியுள்ளார்". ( யோவா. 1:18) தந்தையின் அன்பை உலகிற்கு வெளிப்படுத்த வந்த இறைமகன், தான் இவ்வுலகில் பிறப்பெடுக்கத் தெரிந்துகொண்ட குடும்பம் தான் திருக்குடும்பம். இக்குடும்பத்தின் தலைவராக அழைக்கப்பட்ட யோசேப்பு இதற்காக முன்னரே ஆயத்தப்படுத்தப்பட்டார். மரியாளுக்கு மணஒப்பந்தம் செய்யப்பட்டார். மரியாள் கருவுற்றிருந்ததை அறிந்து, அவரை மறைவாக விலக்கிவிட எண்ணியிருந்தவேளை வானதூதரால் அறிவுறுத்தப்பட்டார். "யோசேப்பே! தாவீதின் மகனே! உம் மனைவி மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம். ஏனெனில் அவர் கருவுற்றிருப்பது தூயஆவியால்தான்." (மத்.1:20)

இறைமகனை வளர்த்தெடுக்கும் பொறுப்பான பணிக்கு அழைக்கப்பட்ட யோசேப்பைப் பற்றி நற்செய்தியில் இரு இடங்களிலேயே காண்கின்றோம். ஒன்று கொல்லத் தேடிய சந்தர்ப்பத்தின்போது: "நீர் எழுந்து குழந்தையையும், அதன் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குத் தப்பியோடிச் செல்லும். நான் உமக்குச் சொல்லும்வரை அங்கேயே இரும். ஏனெனில் குழந்தையை ஏரோது கொல்லுவதற்காகத் தேடப்போகிறான்". (மத்.2:13) "யோசேப்பு எழுந்து, குழந்தையையும் அதன் தாயையும் கூட்டிக்கொண்டு, இரவிலேயே எகிப்துக்குப் புறப்பட்டுச் சென்றார்" (மத்.2:14) சாதாரண ஒரு வளர்ப்புத் தந்தையாக அழைக்கப்பட்டவரின் பொறுப்புணர்வு, கீழ்ப்படிதல், தாழ்மை, தயார்நிலை, தீவிரம் எதற்கும் அஞ்சாதநிலை, கடமை தவறாநிலை இவை யாவும் யோசேப்புவில் காணப்பட்ட குணவியல்புகள். "பெற்ற பாசத்திலும் பார்க்க, வளர்த்த பாசம் மேல்" என்பார்கள். அதுதான் இதுவோ! வானதூதரின் வாழ்த்தொலி கேட்ட மரியாள், "இது எப்படி நிகழும், நான் கன்னி ஆயிற்றே" (லூக்.1:34). இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக்கியபோது, சிமியோனின் வார்த்தைகள் "உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவிப் பாயும்" (லூக் 2:3) "அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளை எல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார்." லூக்.2:51) இவை தவிர, மரியாளைப்பற்றி நற்செய்தியில் கூறப்பட்டவை – கானாவூர்க் கல்யாண வீட்டில், சிலுவையடியில் மரியாளின் இறைதிட்டத்திற்குப் பணிந்த மனநிலை, சவால்களுக்கு முகம் கொடுத்தல், தாழ்மை, துன்பத்தைத் தாங்குதல், பிறரன்பு, பொறுப்புணர்வு இதன் மூலம் வெளிப்படுகின்றது. இயேசுவின் 30 வருட வாழ்க்கையைப்பற்றி கூறப்பட்டுள்ள ஒரே வார்த்தை"குழந்தையும் வளர்ந்து வலிமைபெற்று ஞானத்தால் நிறைந்து, கடவுளுக்கு உகந்ததாயிருந்தது" (லூக் 2:40).

திருக்குடும்பத்தில் இயேசுவுடன் அன்றேல் இயேசுவுக்காக பல விடயங்கள் நிகழ்ந்திருக்கலாம். மரியாள் அனைத்தையும் உள்ளத்தில் தாங்கி நின்ற தாய் மட்டுமல்ல, யோசேப்பும் வெறும் வளர்ப்புத் தந்தை மட்டுமல்ல, தனது வேலையிலேயே அமிழ்ந்து போயிருந்த தொழிலாளியுமல்ல, இயேசுவும் கீழ்ப்படிதலுள்ள, ஞானத்திலும், அறிவிலும் வளர்ந்த ஒரு பிள்ளை மட்டுமல்ல. ஒவ்வொருவரிடமும் ஆழமான உள்ளரங்க வாழ்வு இருந்தது. பல விடயங்களை அவர்கள் ஒருமித்து, ஒழுங்குசெய்து, செயற்படுத்தியிருப்பார்கள். இயேசுவைப்பற்றி மரியாளும், யோசேப்பும் பலமுறை கலந்துரையாடியிருப்பார்கள். கானாவூரிலும், கல்வாரியிலும் இயேசுவும் மரியாளும் பேசிக்கொண்டதைவிடக் கூடுதலான கலந்துரையாடல்கள் அவர்கள் மத்தியில் இடம் பெற்றிருக்கும். இயேசுவும், யோசேப்பும் பல கலந்துரையாடல்களை நிகழ்த்தியிருப்பார்கள்.

அதுமட்டுமல்ல, நசரேத்தில் இவர்கள் மற்றவர்களிடமிருந்து ஒதுங்கி நிற்கவில்லை. அவர்களோடு உறவாடினார்கள், உரையாடினார்கள், தம்மிடமுள்ளவற்றை அவர்களுடன் பகிர்ந்துகொண்டார்கள்.

திருக்குடும்பம் ஐக்கியத்தின் சாயலைப் பிரதிபலிக்கின்றது. விதவித நிலையிலுள்ள மூவர், விதவித குணங்களைக்கொண்ட மூவர் ஒருவர் ஒருவருடன் ஐக்கியமாக வாழ்ந்தனர். உண்மையான குடும்ப வாழ்வின் அமைதியை வெளியிலிருந்து வரும் வாழ்வு எமக்கு எடுத்துக்காட்டுகிறது.

தாய், தந்தை, மற்றும் குழந்தைகள் இணைந்து உருவாக்குவதே குடும்பம். குடும்பம் எனும் அடிப்படை அமைப்பைச் சமுதாயத்தில் மாற்ற வேறெந்த அமைப்புமில்லை. ஒரு குடும்பத்தில் ஒருவர் ஒருவரில் தங்கியிருக்கிறார்கள். ஒருவர் ஒருவரைச் சார்ந்து வாழ்கிறார்கள். ஒருவர் ஒருவரை மதித்து, அன்பு செய்து, விட்டுக்கொடுத்து, மகிழ்ச்சிப்படுத்தி, தாங்கி, பொறுத்து, சகித்து வாழ்கிறார்கள். இவ்வாறான வாழ்வில் ஒருவர் ஒருவரின் தேவைக்குப் பொறுப்புணர்வுடன் பதிலிறுக்கும்போது, அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவது மட்டுமல்ல, இறைவனது அன்பின் உடன்படிக்கைக்குப் பதிலிறுக்கிறார்கள். இறைவனுக்கு மதிப்பளிப்பவர்களிடம் இயற்கையாகவே அன்பு, கரிசனை, ஒருவர் ஒருவர் மட்டில் மதிப்பு ஏற்படுகின்றது. ஒரு மனிதனுக்குக் கொடுக்கப்படும் மதிப்பே, மனித சமுதாயத்தின் மூலைக்கல்லாய் அமைகின்றது. எங்கெல்லாம் மனித சமுதாயத்திற்கு மதிப்பில்லையோ, அங்கெல்லாம் கொலை, கற்பழிப்பு, பலவந்தம், எல்லாவிதமான அடக்கு முறைகளும் தலைவிரித்தாடும். அன்று நசரேத்தில் பல குடும்பங்கள் வாழ்ந்தன. ஆனால் ஒரே ஒரு குடும்பம் மட்டும் "திருக்குடும்பம்" என அழைக்கப்பட்டது. காரணம் இயேசு அக்குடும்பத்தில் ஒருவராகத் திகழ்ந்தார். திருக்குடும்பம் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட குடும்பமாயினும், சமுதாயப் பிரச்சனைகள் மத்தியிலும் இறை குடும்பமாகவே இறுதிவரை திகழ்ந்தது.

செபம், பகிர்தல், தியாகம், விட்டுக்கொடுத்தல் ஆகிய விழுமியங்களில் நம் குடும்பங்களும் நிலைத்திருக்கும்போது, இவையும் திருக்குடும்பங்களாகிவிடும். உறவுகளைப் பரிமாறுகின்றவர்களாக, உரிமைகளைத் தெரிந்தவர்களாக, கடமைகளை நிறைவேற்றுபவர்களாக வாழ்ந்தால் நம் குடும்பங்களும் திருக்குடும்பமே.

திருக்குடும்ப சபை நிறுவுனரான பீற்றர் பியன்வெனு நோஜ அடிகளார் இசியிலுள்ள குருத்துவக் கல்லூரியில் பயிலும் காலத்தில் நசரேத் இல்லத்தைப் பிரதிபலித்த அங்குள்ள லொறற்றோ சிற்றாலயத்தில், திருக்குடும்பத்தின் மேலுள்ள பக்தி அதிகரித்தது. அங்குதான் இவர் இயேசு மனித உடல் எடுத்த மறைபொருளையும், மரியாளின் மாண்பையும், மகத்துவத்தையும் கண்டுகொண்டார். இச்சிற்றாலயத்தில் செபித்துக்கொண்டிருந்த போதுதான் ஒரு சபையை உருவாக்க வேண்டும் எனும் எண்ணம் அவர் மனதில் கருக்கொண்டது. அன்று அவரது எண்ணக் கருவில் உருப்பெற்ற சபை 1820இல் பிரான்ஸ் தேசத்தின் போர்டோ நகரில் செயலுருப் பெற்றது.

அன்று, 1820ம் ஆண்டு, வைகாசித் திங்கள் 28ம் நாள், மூவொரு இறைவனின் திருவிழாவன்று, மூன்று இளம் பெண்களுடன் அடித்தளமிடப்பட்டு, 1822ம் ஆண்டு, மாசித்திங்கள் 3ம் நாள் அளிக்கப்பட்ட அற்புத ஆசீரினால் உறுதிப்படுத்தப்பட்ட சபை பிரான்சியப் புரட்சியின் கோரப்பிடியில் சிக்கித் தவித்து, வாழ்விழந்த இளம் பெண்களுக்குக் கலங்கரை விளக்கமாய்த் திகழ்ந்தது. ஆதித்திருச்சபையின் வாழ்க்கை முறையைப் பின்பற்றி, நம்பிக்கையற்ற மக்கள் மத்தியில் ஒரே குடும்பத்தை அமைக்க அழைக்கப்பட்டனர் இச்சபையின் அங்கத்தவர்கள்.

"எல்லாச் சூழலிலும் விசுவாசத்தைப் பரப்பி, உறுதிப்படுத்தும்" எமது பணியானது இயேசு, மரி, யோசேப்புவினதும் ஆதிக் கிறிஸ்தவ குழுமங்களினதும் மாதிரிகளைப் பின்பற்றி, "குடும்பமாக இருந்து, குடும்பங்களை அமைக்கும்" எமது அருட்கொடைக்கு எம்மை அர்ப்பணிக்க அழைப்பு விடுக்கின்றது.

மனித குடும்பத்தைக் கட்டியெழுப்புதலும், திருச்சபையின் குடும்ப உறவை வெளிப்படுத்துதலும் என்னும் இறைவனின் மீட்புத்திட்டத்தில் பங்குகொள்ள நாம் உலகிற்கு அனுப்பப்பட்டுள்ளோம்.

---

அரச சேவையாளருக்கான போட்டியில்

## திரு. மாசிலாமணிக்கு சான்றிதழ்

கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமை அமைச்சு நடத்திய அரச சேவையாளருக்கான நிருமாண போட்டித் தொடரின் கவிதைப் போட்டியில் திரு செ. மாசிலாமணி அவர்கள் 2ம் இடத்தை வகித்து சான்றிதழ் பெற்றுள்ளார். சான்றிதழ் வழங்கும் வைபவம் கடந்த செப்ரம்பர் மாதம் 27ம் திகதி கொழும்பில் நடைபெற்றது.

சென்ற வருடம் சமாதான நீதவானாக நியமனம் பெற்ற இவர் மன்னார் மாவட்டத்தின் சிறந்த கலைஞர்களில் ஒருவராவார். பல நாடகங்களில் நடித்தவர் மட்டுமல்ல ப்ல நாடகங்களை எழுதி நெறியாழ்கை செய்தவருமாவார். மன்னார் பிரதேச நாட்டார் பாடல்களை பல மேடைகளில் இசையோடு பாடி மன்னாரின் நாட்டார் கலைகளை அழியவிடாமல் பாதுகாக்கும் கைங்கரியத்தை செய்துவருகின்றார்.

இயல்பாகவே கவிதை புனையும் ஆற்றல் பெற்ற இவர் மேற்படி கவிதைப் போட்டியில் சான்றிதழ் பெற்றமையை மன்னா மனதாரப் பாராட்டுகின்றது. இவர் முருங்கன் கலாபூசணம் கலைஞர் குழந்தை அவர்களின் சகோதரர் ஆவார்.




திரு மாசிலாமணி அவர்கள் கொழும்பில் கலாசார அலுவல்கள், தேசிய மரபுரிமை அமைச்சர் அவர்களிடமிருந்து சான்றிதழைப் பெறுகின்றார்.

---

*தேசிய ரீதியில் சான்றிதழ் பெற்ற கவிதை*

## வந்துவிடும் சமாதானம்

1. அழவேணாம் கண்ணே அழவேணாம்
ஆரை நினைத்து நீ அழுகின்றாய்
அன்பு சமாதானம் வந்துவிடும் - நீ
அழவேணாம் கண்ணே அழவேணாம்.

2. ஆண்டுகள் இருபதை அல்லலில் கழித்து
அண்ணன் தம்பி உறவுகளை அநியாயமாய் இழந்து
கண்களில் நீர் இல்லாமல் காய்ந்துமே போனாலும்
கடவுள் நம்மை கைவிடார் சமாதானம் வந்துவிடும்

3. சட்டி பொட்டி பானையெல்லாம் சண்டையிலே போச்சுது
மிச்சமுள்ள பொருட்களெல்லாம் மிதிவெடியில் கிடக்குது
பச்சமண்ணு இதை உனக்கு கூறிடவும் தயங்குறன்
வந்துவிடும் சமாதானம் தந்திடுவார் நம் இறைவன்

4. எருவான தறையெல்லாம் எருக்கலை காடாய்ப் போச்சு
எருமை புரண்ட குளங்களெல்லாம் மேடாய்ப் போச்சு
ஏனென்று கேட்டோ நீ அழுகின்றாய்?
அழவேணாம் அழவேணாம் வந்துவிடும் சமாதானம்

5. வேலைக்குச் சென்றவரை காணவில்லையென்று
ஈர்பத்து வருடங்களை எண்ணிக்கழித்து
இன்னலுறும் பெண்மனதை புரிந்தா அழுகின்றாய்?
அழவேணாம் அழவேணாம் வந்துவிடும் சமாதானம்.

6. கண்ணிவெடி மிதிவெடிகள் துப்பாக்கி வேட்டு பம்பர் அடி
கருவினில் இருந்து நீயும் கலங்கி உணர்ந்து கொண்டாய்
இனிச் சண்டை வந்திடாது அழவேணாம் கண்ணே
இறைவன் தரும் சமாதானம் விரைவிலே வந்துவிடும்

7. என்னிலே அன்பு வந்தால் தன்னிலே சமாதானம் வரும்
அயலிலே அன்பு வந்தால் ஊரிலே சமாதானம் வரும்
இனங்களில் அன்பு வந்தால் மதங்களில் சமாதானம் வரும்
எல்லோரும் அன்பு செய்தால் நாட்டில் சமாதானம் வரும்

8. கூறுவோர் யாவரும் அன்புறவை வளர்த்தால் - நாட்டை
கூறுபோடும் அனைவரும் அன்புறவை நினைப்பர்
கொண்ட கோலங்களை மறந்து கூட்டாகச் சேர்வர்
அழவேணாம் கண்ணே அன்பு சமாதானம் விரைவில் வந்துவிடும்.

செ. மாசிலாமணி,
கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (விசேடம்)
அரச கால்நடை வைத்தியர் பணிமனை,மன்னார்.

---

*புலமைப் பரிசில் பரீட்சையில்*

## மன்னார் மாவட்டத்தில்

புனித சவேரியார் பெண்கள் கல்லூரி

## சாதனை

2005ம் ஆண்டு நடைபெற்ற 5ம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் மன். புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலையைச் சேர்ந்த செல்வி மிதுஷா தனபால சிங்கம் 159 புள்ளிகள் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதல் நிலை மாணவியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார். செல்வி மிதுசா மன்னார் எழுத்தூரில் வசிக்கும் திரு. தனபாலன் திருமதி இரத்தினேஸ்வரி ஆகியோரின் புதல்வியாவார்.



முதல் நிலை பெற்ற செல்வி மிதுசா

இதே பாடசாலையைச் சேர்ந்த செல்வி மேரி சுரேஸ்கா அவர்கள் மன்னார் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. இவர் மன்னார் நகரைச் சேர்ந்த திரு. திருமதி ஞானதாஸ் (சிவம்) ஆகியோரின் புதல்வியாவார்.



இரண்டாம் நிலை பெற்ற செல்வி மேரி சுரேஸ்கா

இவர்களுக்கு மன்னா தனது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றது. மன்னார் மாவட்டத்தில் சாதனை படைத்த இம்மாணவிகளை பரீட்சைக்கு ஆயத்தம் செய்த ஆசிரியர் செல்வி மெற்றில்டா சுப்பிரமணியன் அவர்களையும் அவரோடு சேர்ந்து உழைத்த ஏனைய ஆசிரியர்களையும் மற்றும் அதிபர் ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம். இப்பாடசாலையில் இருந்து இப்பரீட்சைக்கு தோற்றியவர்களில் 13 மாணவிகள் சித்தியடைந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கும் எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

11 ஆவது உலக ஆயர்மன்றத் தீர்மானங்கள்

# அப்போஸ்தலிக்கத் திருமடலாக வெளியிடப்படும்

## திருத்தந்தை வெளியிட்டு வைப்பார்

11 ஆவது உலக ஆயர்மன்றத் தீர்மானங்கள் அப்போஸ்தலிக்க திருமடலாக வெளியிடப்படவுள்ளது. நற்கருணையானது, திருச்சபையின் வாழ்வுக்கும் பணிக்கும் ஊற்றும் சிகரமுமாய் இருக்கின்றது என்னும் கருப்பொருளில், 11ஆவது உலக ஆயர் மன்றத்தின் பொது அமர்வு திருத்தந்தை 16 ஆம் பெனடிக்ற் முன்னிலையில் ஒக்ரோபர் 4 ஆம் திகதி ஆரம்பமாகியது. கருதினால் குவானி இனிட்வே சாந்தோவாரின் தலைமையில், தொடங்கிய அமர்வில் மொஸ்கோ பேராயர் ததேயு கொந்தரே சேவியர் பேசுகையில், நற்கருணை திருவழிபாட்டுச் சடங்குகளை மீறும்பொழுது, பிற கிறிஸ்தவ சபைகளுடனான உறவுகளுக்கு பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது என்று குறிப்பிட்டார். திருப்பீட புனிதர் பேராயத் தலைவர் கருதினால் சரவோ மார்ட்டின் பேசுகையில், நற்கருணை மறைபொருளின் பல்வேறு கூறுகளைக் கோடிட்டுக் காட்டினார். திருப்பீட சமூகத்துறைத் தொடர்புத் தலைவர் பேராயர் ஜான் பொலே தொலைக்காட்சிகளில் திருப்பலிகள் ஒலிபரப்பப்படும்போது, மிகுந்த கவனத்துடன் செயற்பட வேண்டும் என எடுத்துரைத்தார். (தொடர்ச்சி 15ம் பக்கம்)

## சீனாவில் பணிசெய்ய அன்னை திரேசா சபைக்கு அனுமதி

### சகோதரி நிர்மலாவின் கோரிக்கைக்கு சீன அரசு சம்மதம்



சீனநாட்டுத் தலைநகர் பீஜிங்கில் அன்னை திரேசாவின் அன்பின் பணியாளர் சபை இல்லம் ஒன்றை ஆரம்பிக்க விரும்புவதாக சபையின் தற்போதைய தலைவி அருட்சகோதரி நிர்மலா சீன அரசுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். கடந்த ஏப்ரல் மாதம் சீன அரசிடம் சபையின் சார்பில் முன்வைக்கப்பட்ட இக்கோரிக்கைக்கு தற்போது அனுமதி கிடைத்துள்ளது. வத்திக்கானுக்கும் சீனாவுக்குமிடையே நல்ல உறவுகள் தற்போது நிலவவில்லை என்றாலும், அன்பின் பணியாளர் சபையை சீன அரசு அழைத்திருப்பது புதிய நம்பிக்கையைக் கொடுத்துள்ளது என்று அருட்சகோதரி நிர்மலா தெரிவித்துள்ளார். சீன அரசின் அடுத்த கட்ட நடவடிக்கையைத் தாம் எதிர்பார்த்திருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

## திருத்தந்தையின் பயணங்களைத் திட்டமிட முதன்முறையாக ஒரு பொதுநிலையினர்!

வத்திக்கான் ரேடியோவின் நிர்வாக இயக்குனராகவும், தற்காலிக தொழில்நுட்ப இயக்குனராகவும் பணியாற்றி வந்த, ஆல்பர்ட்டோ கஸ்பார் திருத்தந்தையின் பயணங்களைத் திட்டமிடும் மரியாதைக்குரிய பணிக்குத் திருத்தந்தையால் நியமிக்கப்பட்டுள்ளார். அக்டோபர் 14ஆம் திகதி, கர்தினால் ஆஞ்சலோ சொடானோ இச்செய்தியை வத்திக்கான் நிர்வாகத் துறைகளுக்கும், அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளார்.

இதுவரை திருத்தந்தையின் பயணத் திட்டங்களைக் கவனித்து வந்த ஆயர் ரெனாட்டோ பக்கோடா இப்பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார். திருத்தந்தையின் பயணத்திட்டத் துறையில் 1982 ஆம் ஆண்டு முதல் கர்தினால் ராபர்ட்டோ தூச்சிக்கும், ஆயர் பக்கார்டோவிற்கும் துணையாளராக ஆல்பர்ட்டோ கஸ்பார் பணிபுரிந்து வந்துள்ளார். இப்பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ள முதல் பொதுநிலையினரான ஆல்பர்ட்டோ கஸ்பார்தான் இனிமேல் திருத்தந்தையின் பயணங்களை தூதுவர்கள், ஆயர்களுடன் திட்டமிட்டு முடிவுசெய்வார். 2006 ஆம் ஆண்டு, யூன் மாதம் திருத்தந்தை பெனடிக்ட் போலந்திற்குப் போவார் என்றும், துருக்கி அரசு திருத்தந்தையை அழைத்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## வாழ்வியல் பயிற்சி நிறைவு விழா



விடத்தல்தீவில் இயேசு சபையினரின் வாழ்வியல் பயிற்சி நெறி நிறைவு நாளை முன்னிட்டு விடத்தல்தீவு புனித யாகப்பர் ஆலயத்தில் நவம்பர் மாதம் 14ந் திகதி விழா நடைபெற்றது. இதில் மன்னார் ஆயர், வாழ்வுதய இயக்குனர், அருட்பணியாளர் தேவறாஜா, மடு மறைக்கோட்ட முதல்வர் அருட்பணியாளர் ஏ. பிலிப், தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் திரு. எஸ். தங்கன், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டனர்.

## தயவுசெய்து கவனியுங்கள்

அடுத்த மன்னா மன்னார் மறைமாவட்ட யூபிலி சிறப்பு இதழாக வெளிவர உள்ளது. மன்னார் மறைமாவட்டம் பற்றிய உங்கள் ஆக்கங்களை எமக்கு எழுதி அனுப்புங்கள் தரம் கண்டு பிரசுரிப்போம். பதிப்பாசிரியர்.

## பொன்விழாக் காணும் பூனா குருமடம்

கண்டியில் இயங்கி வந்த, “பேப்பல் குருமடம்” 1955 ஆம் ஆண்டு, பூனா நகருக்கு மாற்றப்பட்டது. இந்த ஆண்டு, அதன் நினைவாக அக்டோபர் 25 இலிருந்து 27 ஆம் திகதி வரை பொன்விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இவ்விழாவில் 400க்கும் மேற்பட்ட குருக்கள், ஆயர்கள், பேராயர்கள் (முன்னாள் மாணவர்கள்) இந்தியா மற்றும் இலங்கையிலிருந்து கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

1893 ஆம் ஆண்டு, ஆசியாவில் இறையியல் வல்லுனர்களை உருவாக்கும் நோக்கில், ஆசியத்துணைக் கண்டத்தில், குருமடம் உருவாக்கப்பட திருத்தந்தை 13ஆம் லியோ விரும்பினார். 1926 ஆம் ஆண்டு, கண்டி போப்புவின் குருமடம் உரோமைப் பல்கலைக் கழகங்களுக்கு நிகராக உயர்வு பெற்றது. 1955 ஆம் ஆண்டு, பூனாவுக்கு இக்குருமடம் மாற்றப்பட்ட பின்பும் அநேக மறைமாவட்டங்களும், துறவற சபைகளும் தங்கள் மாணவர்களையும், சகோதரிகளையும் இறையியல் மற்றும், குருத்துவப் பயிற்சிக்காக இங்கு அனுப்பினர். இக்குருமடத்திலிருந்து 112 ஆண்டுகளில், 63 ஆயர்களும், (கர்தினால்களும் உட்பட) 6000 குருக்களும் பயிற்சி பெற்றுச் சென்றுள்ளனர்.

# பங்குத்தள சங்கதிகள்

## விடத்தல்தீவில் முதியோர் தினம்



விடத்தல்தீவுப் பங்கில் கடந்த 09.10.2005 அன்று, பங்குத்தந்தை அருட்பணி. பி. அருள்நாதன் அடிகளின் அனுசரணையில் முதியோர் தினம் நடைபெற்றது. மறைமாவட்ட முதியோர் சங்கங்களின் பொறுப்பாளர் அருட்பணி. விக்ரர் சோசை அடிகள் திருப்பலியை ஒப்புக்கொடுத்து, மறையுரையாற்றினார். அதில் இம்முதியவர்கள் இளமைக் காலத்தில் குடும்பத்தில், பங்கில், சமூகத்தில் ஆற்றிய பணிகளை நினைவுகூர்ந்து, அவர்களுக்கு மதிப்பளித்து, ஆதரிக்க வேண்டுமென்று கூறினார். தொடர்ந்து முதியோர் சங்கத் தலைவரும், இளைப்பாறிய பாடசாலை அதிபருமான, திரு. பி. இராயப்பு அவர்கள் தலைமையில், முதியோர்களுக்கான கலந்துரையாடல் நிகழ்வு இடம்பெற்றது.

அருட்தந்தை விக்டர் சோசை அடிகள் தமது செய்தியில் “நமது வந்தனைக்குரிய ஆயர் முதியோரில் மிகுந்த கரிசனையாக இருக்கிறார். அவரது நல்ல சிந்தனையில்தான் மறைமாவட்ட முதியோர் சேம நிதியம் சகல பங்குகளிலும் உருவாக்கப்பட்டு வருகிறது” என்று தெரிவித்தார். மறைமாவட்ட முதியோர் சங்கச் செயலாளர் திரு. அதிரியான் குரூஸ் (இளைப்பாறிய பாடசாலை அதிபர்) அவர்களின் உரையைத் தொடர்ந்து, பொருளாளர் திரு. ம.லோறன்ஸ் அவர்கள் நன்றியுரை வழங்கினார். காலையுணவு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து, முதியோருக்கான அன்பளிப்புக்களை பொறுப்பாளரான விக்ரர் சோசை அடிகள் வழங்கினார். அருட்தந்தையின் அருள் ஆசியுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன.




திருகோணமலையில் நடந்த விழாவில் மன்னார் கல்வி வலயத்தில் சிறந்த ஆசிரிய ஆலோசகராக திருமதி பெப்பி விக்ரர் லெம்பட் அவர்கள் சான்றிதழ் பெறுகின்றார்.



கடந்த ஒக்ரோபர் மாதம் 7ந் திகதி மன்னார் லசாலியன் ஆங்கில அக்கடமியினால் நடாத்தப்பட்ட உயர்தரப் பரீட்சை முடித்த மாணவர்களுக்கான ஆங்கில கற்கை நெறிச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தின்போது பிரதம அதிதியாக கலந்துகொண்ட மன்னா பத்திரிகை ஆசிரியரும் மறைக்கல்வி இயக்குனருமான அருட்பணி. நேசன் அவர்களுக்கு அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்களால் ஒரு அன்பளிப்பு வழங்கப்படுகிறது.

## தலைமன்னாரில் ஜே.ஆர்.எஸ். வீட்டுத் திட்டம்

கடந்த நவம்பர் 16ம் திகதி ஜே. ஆர்.எஸ். நிறுவனத்தினால் அமைக்கப்படவுள்ள வீட்டுத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் அடிக்கல்லை நாட்டியிருந்தார். இந்நிகழ்வை தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி. அந்தோனிதாஸ் டலிமா அவர்கள் தலைமன்னார் பங்கு மேய்ப்புப் பணிச்சபையினருடன் இணைந்து ஒழுங்குபடுத்தியிருந்தார்.

## மடு கல்வி வலயத்தில் இருந்து கௌரவிக்கப்பட்ட ஆசிரியப் பெருந்தகைகள்



அந்தோனிப்பிள்ளை | நிக்சன் | சற்குணசீலி | அன்ரனி சேவியர் | ஸ்ரெலா

வடகிழக்கு மாகாணத்திற்கு உட்பட்ட கல்வி வலயங்களில் சிறப்பாகக் கல்விப் பணிந்தோருக்கு விருது வழங்கும் வைபவம் கடந்த ஒக்ரோபர் 6ந் திகதி திருகோணமலையில் இடம்பெற்றது. இதில் மடுக் கல்வி வலயத்தில் இருந்து ஐந்து பேரும் மன்னார் கல்வி வலயத்தில் இருந்து ஏழு பேரும் இவ்விருதைப் பெறுவதற்கு தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

மடு வலயத்தில் இருந்து மன். வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை அதிபர் திரு.ஜி. அந்தோனிப்பிள்ளை, மன். வட்டக்கண்டல் அ.த.க.பாடசாலை ஆசிரியர் திரு. எம். மரியறாஜ் நிக்சன், மன். அடம்பன் ம.ம.வி ஆசிரியர் திருமதி. சற்குணசீலி குணசீலன், மன். பெரியபண்டிவிரிச்சான் ம.வி. ஆசிரியர் திருமதி. பி. எம். அன்ரனி சேவியர் குரூஸ், மன். ஆண்டாங்குளம் றோ.க.த.க.பா ஆசிரியர் திருமதி. பி. மெக்டலின் ஸ்ரெலா ஆகியோார் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர்.

## மன்னார் கல்வி வலயத்தில் இருந்து கௌரவிக்கப்பட்ட ஆசிரியப் பெருந்தகைகள்



பெப்பி | சறோ | அன்னமலர் | மெற்றில்டா | சகிலா




யோகானந்தன்

மன்னார் கல்வி வலயத்தில் இருந்து ஏழு பேரும் இவ்விருதைப் பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

சிறந்த ஆசிரிய ஆலோசகராக வங்காலையைச் சேர்ந்த திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களும், சிறந்த அதிபராக உயிலங்குளம் றோ.க.த. பாடசாலை அதிபர் திருமதி எஸ். சறோ அமலதாசன் அவர்களும், சிறந்த ஆசிரியர்களாக திருமதி அன்னமலர் இம்மானுவேல் (மன். தோட்டவெளி அ.த.க.பாடசாலை), செல்வி எஸ். மெற்றில்டா (மன். புனித சவேரியார் பெண்கள் தேசிய பாடசாலை), திருமதி. அசம்ரா திபூர்சியஸ் (மன். உயிலங்குளம் றோ.க.த. பாடசாலை), திரு. அன்ரனி யோகானந்தன் (சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை ஆசிரியரும், திருமதி சகிலா (மன்.பொன்தீவுகண்டல் றோ.க.த. பாடசாலை) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கு தங்கப்பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

கல்விப் பணியில் கௌரவிக்கப்பட்ட இந்த ஆசிரியப் பெருமக்களை மன்னார் மடு வலயக் கல்விப்பணிப்பாளர்களும் மற்றும் கல்விச் சமூகமும் மனதாரப் பாராட்டுகின்றனர். இவர்களை மன்னா பத்திரிகையும் மனதார மகிழ்ச்சியோடு பாராட்டுகின்றது.



# மறைக்கல்வி நிலையச் செய்தி மடல்

மன்னாா — மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகள் — Mannar

**மன்னார் மறைமாவட்டத்தில்**

விவிலிய வாரம் நவம்பர் 27 தொடக்கம் டிசம்பர் 4 வரை

## விவிலிய ஞாயிறு - டிசம்பர் 4 2005



"கடவுளுடைய வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது."

(எபிரேயர் 4:12)

**விவிலியத்தை வாங்குவோம், வாசிப்போம், பகிர்வோம்.**

மன்னார் மறைமாவட்டத்தில் கடந்த நவம்பர் மாதம் 27ம் திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 4ம் திகதி வரையிலான ஒரு வாரம் விவிலிய வாரமாகக் கொண்டாடப்பட்டது. விவிலிய வாரத்தை சிறப்பிக்க மறைக்கல்வி நிலையத்தினால் விவிலிய வாரத்தை விளக்கும் பெனர்கள், போஸ்டர்கள், விவிலியத்தை வாசிக்கவும், வாழவும், பகிரவும் தூண்டக் கூடிய இறைவார்த்தைத் துண்டுப் பிரசுரங்கள் விவிலிய வார விழாவை சிறப்பிக்கும் வழிமுறைகள், பரிந்துரைகள் அடங்கிய பட்டியல், விவிலிய ஞாயிறு வழிபாட்டைச் சிறப்பிக்கும் துண்டுப்பிரதிகள் ஆகியவை வழங்கப்பட்டன.

## மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்பட்ட வருடாந்த மறைக்கல்வித் தேர்வில்

### 95 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் விபரம்

| பங்கு | பாடசாலை | பெயர் | தரம் | புள்ளி |
|---|---|---|---|---|
| வவுனியா | வவு/ இறம்பைக்குளம். ம.ம.வி. | பு. ஜெனுக்ஷா | 08 | 95 |
| வவுனியா | வவு/ இறம்பைக்குளம். ம.ம.வி. | பா. நிருபா | 08 | 95 |
| வவுனியா | வவு/ பூந்தோட்டம். ம.வித் | ஜெ. ஜென்சன் | 04 | 95 |
| கோமரசங்குளம் | வவு/ பெரிய கோமரசங்குளம். ம.வி. | பி. பிறின்சி | 06 | 95 |
| கோமரசங்குளம் | வவு/ பெரிய கோமரசங்குளம். ம.வி. | த. தனோஜன் | 06 | 96 |
| கோமரசங்குளம் | வவு/ பெரிய கோமரசங்குளம். ம.வி. | அ. கொன்சலா | 06 | 99 |
| கோமரசங்குளம் | வவு/ ஸ்ரீ நாகராஜ வித்தியாலயம் | அ. றஞ்சித்குமார் | 04 | 95 |
| கோமரசங்குளம் | வவு/ ஸ்ரீ நாகராஜ வித்தியாலயம் | அ. அருள்யூட்சன் | 06 | 100 |
| கோமரசங்குளம் | வவு/ கல்நாட்டினகுளம் அ.த.க | கீ. பிரியதர்ஸ்சி | 04 | 96 |
| பம்பைமடு | வவு/ விபுலானந்தா கல்லூரி | ஜே. மொறிஸ்கான் | 04 | 96 |
| பம்பைமடு | வவு/ கூமாங்குளம் சித். விநா. வித் | பே. தனுஷா | 04 | 97 |
| பம்பைமடு | வவு/ கூமாங்குளம் சித். விநா. வித் | எ. எட்றிக்சன் | 04 | 99 |
| செட்டிகுளம் | வவு/ செட்டிகுளம் ம.வி. | கி. பவித்திரன் | 04 | 98 |
| இலுப்பைக் குளம் | வவு/ இலுப்பைக்குளம் றோ.க.த.க.பா. | சு. நிறோஜினி | 07 | 96 |
| இலுப்பைக் குளம் | வவு/ வீரபுரம் மணி வாசகர் ம.வி. | வி. விஜிதா | 06 | 96 |
| கற்கடந்த குளம் | மன்/ கட்டையடம்பன் றோ.க.த.க.பா. | ச. ரெறன்சியா | 06 | 99 |
| வஞ்சியங்குளம் | மன்/ வஞ்சியங்குளம் றோ.க.த.க.பா. | மோ. மேரி டெல்சிக்கா | 06 | 96 |
| வஞ்சியங்குளம் | மன்/ வஞ்சியங்குளம் றோ.க.த.க.பா. | றோ. செபநாயகி | 07 | 96 |
| உயிலங்குளம் | மன்/ உயிலங்குளம் றோ.க.த.க.பா | ச. நித்தியா | 06 | 99 |
| உயிலங்குளம் | மன்/ உயிலங்குளம் றோ.க.த.க.பா | சி. நித்தியா | 06 | 99 |
| உயிலங்குளம் | மன்/ உயிலங்குளம் றோ.க.த.க.பா | ச. சத்திய பிரியா | 08 | 97 |
| உயிலங்குளம் | மன்/ பறப்பாங்கண்டல் றோ.க.த.க.பா. | கி. நிறோஜன் ஜோர்ச் | 04 | 98 |
| உயிலங்குளம் | மன்/ பறப்பாங்கண்டல் றோ.க.த.க.பா. | மி. நிறோஜன் குரூஸ் | 04 | 98 |
| நானாட்டான் | மன்/ நானாட்டான் ம.வி | வே. றொட்சி | 06 | 98 |
| நானாட்டான் | மன்/ நானாட்டான் ம.வி | யோ. டொறின் யாழினி | 08 | 96 |
| நானாட்டான் | மன்/ நானாட்டான் ம.வி | ந. லக்மாலினி | 08 | 95 |
| வங்காலை | மன்/ புனித ஆனாள் ம.ம.வி. | க. மேரி அமென்ரா | 04 | 95 |
| வங்காலை | மன்/ புனித ஆனாள் ம.ம.வி. | உ. நிரோஷா | 04 | 95 |
| வங்காலை | மன்/ புனித ஆனாள் ம.ம.வி. | ம. பு. ஜொய்சி கூஞ்ஞ | 04 | 98 |
| தோட்டவெளி | மன்/ தோட்டவெளி அ.த.க.பா. | ஸ். சியாத் | 04 | 97 |
| தோட்டவெளி | மன்/ தோட்டவெளி அ.த.க.பா. | அ. பிறின்சி கிறிஸ்ரா | 04 | 95 |
| தோட்டவெளி | மன்/ தோட்டவெளி அ.த.க.பா. | எ. டினுசா சாளினி | 06 | 99 |
| பேசாலை | மன்/ சென் மேரிஸ் பெண் வி. | நி. சாமினி பர்ணாந்து | 06 | 98 |
| பேசாலை | மன்/ சென் மேரிஸ் பெண் வி. | றெ. டிலான்சி பீரிஸ் | 06 | 99 |
| மன்னார் | மன்/ சவேரியார் ஆண்கள் கல்லூரி | P. பெற்சன் மத்தியூ | 03 | 97 |
| மன்னார் | மன்/ சவேரியார் பெண்கள் கல்லூரி | Y. சுகனியா | 03 | 95 |
| மன்னார் | மன்/ சவேரியார் பெண்கள் கல்லூரி | R. சகாயமேரி | 04 | 97 |
| மன்னார் | மன்/ சவேரியார் பெண்கள் கல்லூரி | H.K. ஆன் பியந்தி | 04 | 99 |
| மன்னார் | மன்/ சவேரியார் பெண்கள் கல்லூரி | J. றம்மியா | 04 | 96 |
| மன்னார் | மன்/ சவேரியார் பெண்கள் கல்லூரி | M. செல்வினி | 05 | 95 |
| மன்னார் | மன்/ சவேரியார் பெண்கள் கல்லூரி | G. மேரி பெல்பினா | 08 | 97 |
| தலைமன்னார் | மன்/ சென் லோறன்ஸ் றோ.க.த.க.பா | பா. டிவைன்ஷன் | 04 | 95 |
| தலைமன்னார் | மன்/ சென் லோறன்ஸ் றோ.க.த.க.பா | அ. றெஜினோ கூஞ்ஞ | 04 | 95 |
| தலைமன்னார் | மன்/ சென் லோறன்ஸ் றோ.க.த.க.பா | ஞா. அமல பிறக்ஷன் | 06 | 99 |
| தலைமன்னார் | மன்/ தலைமன்னார். அ.த.க.பா. | கி. சகாய சங்கவி | 06 | 99 |
| தலைமன்னார் | மன்/ தலைமன்னார். அ.த.க.பாட. | ச. அன்ரனிலா | 06 | 98 |
| பள்ளிமுனை | மன்/ புனித லூசியா ம.வி. | ச. பிரகாசி பிகிறாடோ | 06 | 95 |
| தாழ்வுபாடு | மன்/ புனித வளனார் றோ.க.த.க.பா. | பெ.ஆ.பெனிற்றா குரூஸ் | 04 | 95 |
| தாழ்வுபாடு | மன்/ புனித வளனார் றோ.க.த.க.பா. | த. மேரி தயாழினி | 06 | 98 |
| தாழ்வுபாடு | மன்/ புனித வளனார் றோ.க.த.க.பா. | அ. யேசு சர்மிலன் | 06 | 96 |
| பண்டிவிரிச்சான் | மன்/ பெ. பண்டிவிரிச்சான்.ம.வி | ஜெ. மரினோ அருணன் | 04 | 97 |
| பண்டிவிரிச்சான் | மன்/ சி. பண்டிவிரிச்சான்.அ.த.க. பா. | அ. றெங்லின் நிதுஷா | 04 | 96 |
| ஆட்காட்டிவெளி | மன்/ ஆண்டாங்குளம். றோ.க.த.க.பா. | பீ. திவ்யா | 08 | 100 |
| ஆட்காட்டிவெளி | மன்/ ஆண்டாங்குளம். றோ.க.த.க.பா. | க. பிரசாந்தி | 08 | 95 |
| ஆட்காட்டிவெளி | மன்/ கருங்கண்டல் றோ.க.த.க. பா. | ம. ஸ்ரீபன் பென்ஜமின் | 06 | 96 |
| விடத்தல்தீவு | கோவிற்குளம் அ.த.க.பா. | ம. வின்சென்ற் | 04 | 97 |

## மன்னாரில் விவிலியக் கருத்தரங்கு

பங்குகளிலுள்ள பணியாளர்களுக்கு விவிலியப் பணியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவும், விவிலிய வாரத்தை அர்த்தமுள்ள முறையில் கொண்டாடத் தேவையான ஆலோசனைகளை வழங்கவும் கடந்த நவம்பர் மாதம் 14,15 ஆம் திகதிகளில் மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் விவிலியக் கருத்தமர்வு நடைபெற்றது. 14ம் திகதி, திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்குத் தொடங்கி, 15ம் திகதி, செவ்வாய்க்கிழமை மதியம் 1.00 மணிக்கு இக்கருத்தமர்வு நிறைவுபெற்றது. பங்குகளிலுள்ள தன்னார்வப் பணியாளர், மறையாசிரியர், கத்தோலிக்க ஆசிரியர், பங்கு மேய்ப்புப்பணிச் சபையினர், அருட்சகோதரிகள் ஆகிய குழுக்களிலிருந்து, தலா ஒருவர் இக்கருத்தமர்வில் பங்கேற்றனர்.

இறைவார்த்தையின் வல்லமை, ஆற்றல் என்பன குறித்து உரைகள் நிகழ்த்தப்பட்டன. இக்கருத்தமர்வை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை அவர்கள் ஆரம்பித்து வைத்தார். பொதுநிலையினர் பணியக இயக்குனர் அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளாரும், மன்னார் மறைமாவட்ட பொதுநிலையினர் பேரவைத் தலைவர் திரு. அந்தோனிமுத்து அவர்களும் ஆரம்ப நிகழ்வில் உரை நிகழ்த்தினர்.

## கொழும்பில் தேசிய மட்டத்தில்

### மறையாசிரியர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு

கடந்த ஒக்டோபர் மாதம் 28ம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலங்கையிலுள்ள மறையாசிரியர்களுக்கான சீருடை வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நாடு முழுவதிலுமுள்ள 10,500 மறையாசிரியர்களுக்கான 75 இலட்சம் ரூபா பெறுமதியான சீருடைகள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் 5 மறையாசிரியர்கள் இந்நிகழ்வில் பங்கெடுத்தனர். மன்னாரிலிருந்து அருட்சகோதரி பெனிக்னஸ், நிரந்தர மறையாசிரியர்கள் திரு. சவிரி, திரு. செபஸ்தியாம்பிள்ளை, திரு. மரிய செல்வம் ஆகியோரும், மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர் ஒன்றியத் தலைவர் திரு. ஜெபநேசன், செயலாளர் செல்வி திருமகள் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கெடுத்தனர்.



## மறைக்கல்வித் தேர்வு

### பன்னிரெண்டாயிரம் பேர் பங்கேற்பு 1755 பேர் சான்றிதழ்களைப் பெற்றனர்

பாடசாலை மாணவர்களுக்கான மறைக்கல்வித் தேர்வு கடந்த நவம்பர் மாதம் 05 ஆம் திகதி, சனிக்கிழமை நடைபெற்றது. இத்தேர்வில் தரம் 3 தொடக்கம் 11 வரையான மாணவர்கள் தோற்றினர். மன்னார், மடு, வவுனியா தெற்கு, வவுனியா வடக்கு ஆகிய நான்கு கல்வி வலயங்களுக்கு உட்பட்ட 140 பாடசாலைகளில் இத்தேர்வு நடாத்தப்பட்டது. இதில் ஏறக்குறைய 12,000 மாணவர்கள் பங்கேற்றனர். வருடாவருடம் மறைக்கல்வி நிலையத்தினால் நடாத்தப்படும் இத்தேர்வுப் புள்ளிகளே, பாடசாலைகளில் 3ம் தவணைக்குரிய கத்தோலிக்க சமய பாடப் புள்ளிகளாகக் கணிக்கப்படுகின்றன. 75 புள்ளிகளுக்கு மேல் பெறும் மாணவர்களுக்கு, மறைக்கல்வி நிலையத்தினால் சான்றிதழ்கள் வழங்கப்படும். இம்முறை ...... மாணவர்கள் 75 புள்ளிகளுக்கு மேல் பெற்று, சான்றிதழ்களைப் பெறுகின்றனர்.

## மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான வருடாந்த ஒன்றுகூடலும் சீருடை வழங்கல் நிகழ்வும்

மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர் அனைவருக்குமான வருடாந்த ஒன்றுகூடலும் சீருடை வழங்கல் நிகழ்வும் மறைக்கல்வி நிலையத்தில் இடம்பெற்றது. டிசம்பர் 14ம் திகதி (புதன்) மாலை 6.00 மணிக்கு தொடங்கி 15ம் திகதி (வியாழன் மதியம் 1.00 மணி வரை இந்நிகழ்வு நடைபெற்றது. இந்த ஒன்றுகூடலின்போது சிறப்புரைகளும் கலை நிகழ்வுகளும், இவ்வருடத்தில் நிறைவு செய்யப்பட்ட பணிகள் பற்றிய மீளாய்வும், 2006ம் ஆண்டுக்கான பணித்திட்டங்கள் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெற்றன. 2005ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் ஒவ்வொரு பங்கில் இருந்தும் அனுப்பப்பட்ட மறையாசிரியர் பெயர்ப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள மறையாசிரியர்களுக்கு குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளினால் சீருடைகள் வழங்கப்பட்டன.

## பணியாளர்களுக்கான வருட நிறைவு ஒன்றுகூடல்

மறைக்கல்வி நிலையத்தினாலும் மன்னா பத்திரிகைப் பணியகத்தினாலும் முன்னெடுக்கப்படும் பல்வேறு பணிகளில் வருடம் முழுவதும் எம்மோடு கரம்கோர்த்துச் செயலாற்றும் பணியாளர்களை வருட நிறைவில் ஒன்றுசேர்த்து அவர்களுக்கு நன்றி கூறும் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வு நன்றி விழாவாகவும், கிறிஸ்மஸ் ஒன்றுகூடலாகவும், கிறிஸ்மஸ் மகிழ்வில் அன்பளிப்புகளைப் பகிரும் விழாவாகவும் அமைந்திருந்தது. இந்நிகழ்வு டிசம்பர் 17ம் திகதி சனி காலை 10.30 மணி தொடக்கம் பகல் 1.00 மணிவரை நடைபெற்றது.



### தன்னார்வப்பணி மீளாய்வு ஒன்று கூடல்

கடந்த டிசம்பர் 16ந் திகதி வெள்ளி மாலை 6.00 மணி தொடக்கம் தன்னார்வப் பணியாளருக்கான ஒன்றுகூடல் இடம்பெற்றது. இவ் ஒன்றுகூடலின்போது செபவழிபாடும் இவ்வருட தன்னார்வப் பணிகள் பற்றிய மீளாய்வும் கருத்துப் பரிமாற்றமும் இடம்பெற்றது.

## தேசிய மறையாசிரியர் டிப்ளோமாத் தேர்வு

தேசிய மறையாசிரியர் டிப்ளோமா தேர்வு டிசம்பர் மாதம் 3ம் திகதி, சனிக்கிழமை நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான இத்தேர்வு மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியில் நடைபெற்றது. மறையாசிரியர் 1வது தேர்வில் 76 பேரும், 2வது தேர்வில் 77 பேரும், 3வது தேர்வில் 47பேரும் ஆக மொத்தம் 200 பேர் இத்தேர்வில் தோற்றினர்.

மறையாசிரியர் தேர்வு 1,2,3 ஆகிய தேர்வுகளில் தோற்றியவர்களுக்கான ஆயத்த வகுப்புக்கள் நவம்பர் மாதம் 11,12,13 ஆம் திகதிகளில், மன்னார் மறைக்கல்வி நிலையத்தில் நடைபெற்றது.

# கிறிஸ்மஸ் சிறப்புக் கவிதைகள்

## சமாதானம் தந்திடுவாய்!

மார்கழி மாதத்தினிலே
மங்கள வடிவினிலே
மரி அன்னையின் மடியினிலே
வந்துதித்த யேசையா
கட்டில் இல்லை மெத்தை இல்லை
பாலகனே படுத்துறங்க
கந்தைத்துணி கவசமென
கவலையின்றி ஏற்றுக் கொண்டீர்
ஏழைகளைத் தேடிவரும்
எம் பெருமான் யேசையா
ஏக்கத்துடன் வாழுகின்றோம்
சமாதானம் தந்திடுவாய்.

*தெ. சுபாஜினி, பட்டித்தோட்டம், மன்னார்.*

## இருண்ட சமூகத்தில் ஒளி பிறந்தது

மலர்ந்துள்ள மார்கழி மாதத்தில்
பனிகொட்டும் வேளையில்
மாமரி மடியினிலே சூசையின் துணையினில்
தவழ்கின்றார் புனிதன் யேசு.
ஏழ்மையின் கோலத்திலே பிறப்பு
தாயின் மடியினிலே தாலாட்டு
உலகினிலே ஆர்ப்பரிப்பு
எம் உள்ளங்களிலே வரவேற்பு.
மனிதம் மலர்ந்திடவே
ஒற்றுமை பிறந்திடவே
பாவங்கள் பறந்திடவே
அமைதி ஊற்றெடுக்கவே
அன்பு தேவன் வையகத்தில் உதித்தார்
சிந்தனை செய் மனிதா! - இன்றே
புதுயுகம் தொடரப் புறப்படு தோழா
புனிதனவன் புனிதச் சுவடுகளைப் பின்பற்ற
மறவாதே மனிதா!

*S. லதா, உமனகரி, நானாட்டான்.*

## பூத்துவா புத்தாண்டே

சருகு வெண் மலராய் மாற
சண்டியன் சாதுவாக
வெரு கரும் புனுகாய் மாற
வேடனும் சீடனாக
தரு அரும் தறியாய் மாற
தாழ்ந்தவர் தக்கோராக
செரு அரும் சேயாய் மாற
பூத்துவா மலர்ப்புத்தாண்டே
ஊர்விட்டு உற்றார் விட்டு
உடமைகள் யாவும் விட்டு
சீர்கெட்டு சிறப்பும் கெட்டு
சித்திர வதைக்குட்பட்டு
மார்பொட்டும் மனைவி மானம்
மாற்றானின் கைக்குட்பட்டு
கூர் பட்டு தவிக்கும் எமக்கு
ஒளி விளக்காய் வா புத்தாண்டே

*அ. மரிய திரேசா, தரம் -10, எழுத்தூர், மன்னார்.*

## எங்கள் திருக்குழந்தை பிறந்துவிட்டது

ஒரு விடிவெள்ளி எழுந்து விட்டது
எங்கள் திருக்குழந்தை பிறந்து விட்டது
தேவதாயின் தாலாட்டு தொடங்கிவிட்டது
அந்த வைக்கோலின் மேல்
எங்கள் தேவ மகன் துயில்கிறான்
பாசத்துக்கு ருசியான பாலகா
உன்னை வரவேற்ற ஐந்தறிவு ஜீவன்கள்
மகிழ்ச்சியால் துள்ளுகிறதா?
எழுத முடியவில்லை என்னால் எழுத முடியவில்லை.
ஆனந்தக் கண்ணீரின் கனம் தாங்காமல்
வார்த்தைகள் நொண்டுகின்றன!
எத்தனை மாடமாளிகைகள் இருந்தென்ன
மாடடைக் குடிலில் உன்பிறப்பு நிகழ்ந்து விட்டதே!
மாணிக்கத் தொட்டிலுக்கு வாய்க்காத பெருமையெல்லாம்
வைக்கோல் தொட்டிக்கு வழங்கப்பட்டு விட்டதே!
ஆகாயப் பந்தலில் ஆயிரம் பேர்
சுற்றி வந்து உனை வணங்குகிறார்களே!
ஓ மாட்டுத் தொழுவமே!
நீ கண்ட பிறப்பின் மகிமையைக் கூறிவிடு!
மாரியிலே மழைபொழிந்து மக்களினம் வாழ வைக்கும்
காரியம்போல் உன் தந்தை காலத்தில் அனுப்பினார்.
மனதில் மகிழ்ச்சி இருதயத்தில் இரட்டிப்புத் துடிப்பு!
நீ படுத்திருக்கும் வைக்கோல் மெத்தை
பஞ்சு மெத்தையாய் மாறிவிடும் பாலகா!
உன்னையே உற்றுப் பார்க்கும்
பசுக் கன்றுகளெல்லாம் தனதன்பை வெளிப்படுத்த
தவிக்குது பாலகா!

*பி. சந்திரன், வாழ்க்கைப்பெற்றான் கண்டல், முருங்கன்.*

## இயேசு பிறந்தார்

உத்தமர் யேசு பிறந்தார்
உலகின் ஒளியாய் வந்தார்
நித்தமும் அவரது நிழலிலே
நிச்சயம் நிம்மதி வாழ்விலே!
பாவம் போக்க வேண்டினார்
பகைவனை நேசி என்றார்
நேயம் வாழ எண்ணியே
தெய்வ யேசு பிறந்தார்!
அன்பும் பண்பும் கொள்ளவே
அனுதினம் ஆண்டவர் அருளினார்
துன்பம் பலவும் ஏற்றுமே
தூய சிலுவை சுமந்தார்!
மனித நேயம் மலரவே
மலையில் உரையை வழங்கினார்
கனிவும் பணிவும் வாழ்வெனக்
கர்த்தர் யேசு கூறினார்!
அற்புதச் செயல்கள் செய்தார்
அனைவரும் சமமே என்றார்
பொற்பாதம் வணங்கி மகிழுவோம்
புனிதன் அருளைப் பெறுவோம்!

*த. ஜினேஸ் பெர்னாண்டோ, சின்னக்கடை, மன்னார்.*

## அக இருள் அகற்றும் பாலகன் இயேசு

காலமெல்லாம் காத்திருக்க கவிதையாய் பூத்திருக்க
பாலகன் யேசுவே வருக!
தித்திக்கும் பூவாய் திருத்தீபம் ஏற்றிட
பாலகன் யேசுவே வருக!
காரிருள் மறைந்து கதிரொளி உதித்திட
பாலகன் யேசுவே வருக!
கனத்த இதயங்கள் கனிவாக மாறிட
பாலகன் யேசுவே வருக!
கண்ணீரும் கம்பலையும் கரைந்து போய்விட
பாலகன் யேசுவே வருக!
பலாத்காரம் ஒளிந்து பாசம் பெருகிட
பாலகன் யேசுவே வருக!
பகைமைகள் மறைந்து பரிவுகள் பிறக்க
பாலகன் யேசுவே வருக!
பழையன கழிந்து புதியன பிறந்திட
பாலகன் யேசுவே வருக!
சண்டைகள் ஓய்ந்து சாந்தி பிறந்திட
பாலகன் யேசுவே வருக!
சச்சரவு மறைந்து சமரசம் ஓங்கிட
பாலகன் யேசுவே வருக.

*ஏ. சகாயராஜ் பீரிஸ், முத்தரிப்புத்துறை.*

## பாலகன்

மார்கழிக் குளிரினிலே
வைக்கோலின் நடுவினிலே
வைரமாய் மின்னினான் நம் பாலன்.
தூதர்கள் பாட கீதங்கள் முழங்க
தூய மகனாய் அவதரித்தான்
பாவிகளைத் தேடி பாவங்களை போக்க
பாரினில் வந்துதித்தான்
பரலோக ராஜனாய் நம் பாலன்.

*வி. ஷாமிலி குரூஸ், தலைமன்னார் மேற்கு.*

## வாருங்கள் அவரை வணங்குவோம்

வண்ண வண்ண மலர்கள் விண்ணில் பறக்கும் பறவைகள்
நீந்தித் திரியும் மீன்கள் துள்ளி ஓடும் விலங்குகள்
உண்பதற்கு இனிக்கும் கனிகள் கண்ணைப் பறிக்கும் சூரியன்
குளிர்ச்சி தரும் சந்திரன் கண்ணைச் சிமிட்டும் விண்மீன்கள்
அன்பைப் பொழியும் பெற்றோர் இன்னும் எத்தனை எத்தனை
இவற்றை எமக்கு தந்த இறைவனை நாமும் வணங்குவோம்.

*ச. நித்தியா, வேதசாட்சிகளின் கோயிலடி, தோட்டவெளி.*

## பாலனைப் புகழ்ந்திடுவோம்

மார்கழி மாதம் மாகுளிர் தனிலே
மனுமகன் பிறந்த சேதியச் சொல்ல
மானிடர் கூடிப் பாட வந்தோமே
குழந்தையாய் யேசு பிறந்து விட்டாரு
குவலயம் வாழ வந்து விட்டாரு
பாவியைக் காக்க பிறந்து விட்டாரு
பாலனைப் போற்றி வணங்கிடுவோமே
ஏழைக்கோலமாய் வந்து விட்டாரு
மாடடைக் குடிலில் பிறந்து விட்டாரு
கந்தல் துணியால் மூடப்பட்டாரு
கடவுளின் மகனாய் பிறந்து விட்டாரு.

*பா. புஸ்பம், இத்திக்கண்டல், அடம்பன்*

## மண்ணில் இயேசு

மார்கழிக் குளிரில் மாடடைக் குடியில்
மாமரி மகனாய் இயேசு வந்தார்.
காரிருள் போக்கியே கதிரவன் ஒளியாய்
காவலன் இயேசு விரைந்து வந்தார்.

ஆயிரமாயிரம் ஆண்டுகள் போயினும்
ஆண்டவன் யேசுவின் அற்புத வருகை
அவனியில் எங்கும் அழியா வரவாய்
ஆகிட வேண்டி மண்ணில் உதித்தார்.

சாதிக் கொடுமை இனமொழி பேதம்
சண்டைகள் பிணக்கு வேரோடழிந்து
சமதர்ம சமுதாய சமாதானம் நிலவிட
சத்தியன் யேசு சரித்திரம் படைத்தார்.

*எஸ். பெனிற்றா, மறைப்பணியாளர், விடத்தல்தீவு.*

## உதித்தான் பாலன்

பனி உறையும் நேரத்திலே
விண்மீன்கள் வெளிச்சத்திலே
மாட்டுத் தொழுவினிலே
வைக்கோலின் நடுவினிலே
வெளிச்சப் புள்ளியாய் வந்தார் யேசு.
அன்னையின் மைந்தனாய்
அனைத்துலக அரசராய்
மணிமுடி தரித்தார் இயேசு.
அவனியில் அமைதி காண
உள்ளத்தில் நிறைவுகாண
நம் உள்ளத்தில் வந்துதித்தார்
தூய பாலகன்.

*எஸ். ரி. பெனிலஸ் தற்குரூஸ், புனித லோறன்சியார் ஆலயம், தலைமன்னார்.*

## நீ கண்ணுறங்கு

இனவாத விஷமழையில் குருதி வெள்ளம்
வேற்றுமை போதையில் மனித சுவாசம்
மயானத்தை நோக்குகின்றது.
சுதந்திரம் சோகமாய்க் கிடக்க
எங்கள் உரிமைகள் உருத்தெரியாமல் அழியும்
எங்கள் சந்தோஷம் ஓட்டை விழுந்த படகாக
வாழ்க்கைக் கடலை நோக்குகிறது.
குண்டுகளின் கீறல்களிலும்
செல்களின் சிதறல்களிலும்
கிராமங்கள் கசாப்புக் கடையாக மாறுகிறது
மானிடம் அன்பில் விழத் தவறியதால்
வாழ்க்கை நதி நீண்ட வேதனை சுமந்து
நரகத்தை நோக்குகின்றது.
உயிரை மரியாதைப்படுத்த
இந்த தேசம் தயாராகும் வரை
சமாதானமே நீ கண்ணுறங்கு.

*வை. றொசாந்தன், பிடாரிகுளம், முருங்கன்.*

## பாலக யேசுவின் பிறப்பின் அதிசயம்

பெத்லேகம் மாநகரில் பெருமை தரும் மாமரியாள்
பெற்றெடுத்தாள் மரிசுதனை பெருமை தரும் மானிலத்தில்
மேகங்கள் முழங்கினவே மேற்குத்திசை அமைதி கொள்ள
பார்தனிலே பரமசுதன் பாலகனாய் வந்துதித்தார்.

மந்தைகள் மகிழ்வுடனே மங்களங்கள் சொல்லிவர
மரியன்னை தன் மகனை மானிலத்தில் பெற்றெடுத்தாள்.
வால் வெள்ளி தோன்றிடவே வானமெங்கும் பூத்திடவே
இடையர்கள் மகிழ்ந்திடவே இன்னிசை பாடிடவே
மூவிராசாக்கள் வந்துமக்கு முத்திகள் செய்திடவே
மரியன்னை தன் மகனை மாநிலத்தில் பெற்றெடுத்தாள்.

*பேதுரு ஜேக்கப், பட்டிதோட்டம், மன்னார்.*

## வருக வருக பாலகனே

வருக வருக வருக
பாலன் யேசுவே வருக
அன்புடன் அழைக்கின்றோம் வருக
சிறுவர் எமக்கு ஆசீர் தருக
உமது அன்பைப் பொழிய வருக.

சமாதானத்தை எமது நாட்டுக்குத் தருக
அமைதியின் சூழலைத் தருக
ஏழ்மை எம்மில் குடிகொள்ள
என்றும் ஒற்றுமையாக வாழ
வருக வருக வருக
பாலன் யேசுவே வருக.

*செ. செஸ்லி, பெரியகோமரசன்குளம், வவுனியா*

# வாழ்வுதயம்

VALVUTHAYAM (Caritas - Mannar)

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

VALVUTHAYAM (Caritas - Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பி. ஜெசுராஜா.


Mannar Diocesan Centre For Justice, Peace And Human Development - Valvuthayam (Caritas - mannar), No. 17, Main Street, Mannar - Sri Lanka T.P: 023 - 2232140, Fax: 023-2232893, E-mail: valvum@slthet.lk

## எனக்கே ஆச்சரியமாயிருக்கே!

### பன்னைவேலைத் தொழில் பயிலுனர் கூறுகின்றார்!



மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய நிறுவனத்தினால் பெண்களின் வருமானத்தை ஊக்குவிக்கவும் உருவாக்கவும் ஒழுங்குசெய்யப்பட்ட பன்னைவேலைத் தொழில் பயிற்சியானது மன்னார்த்தீவில் தரவன் கோட்டை என்ற கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டது. 25 க்கும் மேற்பட்ட பெண்கள் இப்பயிற்சியில் பங்கெடுக்க முன்வந்தனர். பல வர்ணங்கள் கொண்ட சிறு பெட்டிகள் செய்யும் பயிற்சி இவர்களுக்கு ஆசிரியையினால் வழங்கப்பட்டது. ஆசிரியையின் நுட்பம் நிறைந்த கவர்ச்சிகரமான கற்பித்தல் முறையானது பயிலுனரைக் கவர்ந்ததுமல்லாமல் மிக இலகுவாக கற்றுக்கொள்ளவும் வாய்ப்பளித்தது.

இப்பயிலுனர்களின் செயற்பாட்டினைப் பார்வையிடுவதற்காக தரவன்கோட்டைப் பயிற்சி நிலையத்திற்குச் சென்றிருந்த வாழ்வுதயஇயக்குனர் அருட்திரு. பி. யேசுராஜா அவர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட பயிலுனர்கள் தம்மையே நம்பமுடியாத அளவிற்குத் தமது திறமைகள் வெளிக்கொணரப்பட்டன என்று பகிர்ந்துகொண்டனர். பயிற்சி பெற்றவர்களில் ஒரு யுவதி "என்னால் இந்த அளவிற்குச் செய்யமுடியுமாவென நினைக்கும் பொழுது எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது" என்றார். இப்பயிற்சியினை ஒழுங்கமைத்து மேற்பார்வை செய்தவர் வாழ்வுதயத்தின் கிராமிய விழிப்பூட்டல் பிரிவின் மன்னார் தீவுப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ஜெயதாஸ் ஆவார். இப்பயிற்சிக்கான ஆசிரியையும் கொடுத்து ஆசிரியைக்கான மாதாந்த கொடுப்பனவையும் வழங்கியது மன்னார் பனம் பொருள் அபிவிருத்திச் சங்கம் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதற்கான நிதி உதவிகளை முருங்கன் டொன் பொஸ்கோ சபை முதல்வர் அருட்பணியாளர் டிக்சன் அடிகளார் வழங்கியிருந்தார்.

## எமது பலத்தில் நம்பிக்கை கொண்டுள்ளோம்

### கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் குரல்

நாம் எமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை கொண்டுள்ளோம். நாம் சமூக, பொருளாதார, கலாச்சார, ஆன்மீகத் துறைகளில் வாழ்வுதய நிறுவனம் ஊடாக உயிர்ப்பூட்டல் பெற்று படிப்படியாக முன்னேற்றப் பாதையில் எம்மை நகர்த்தி செல்கின்றோம். இவ்வாறு அண்மையில் மன்னார், வவுனியா மாவட்டங்களில் பிரதேச வாரியாக நடைபெற்று வரும் மக்களமைப்பு ஒன்றுகூடல்களின்போது கிராமிய விழிப்பூட்டல் குழுக்களின் உறுப்பினர்கள் தெரிவித்தனர். (தொடர்ச்சி 12ம் பக்கம்)

## உறவுப்பால நிகழ்வு

### சிலாபக் குழுவினர் மன்னார் வருகை

கடந்த இருபது வருட கால போரானது, யுத்த நிறுத்தம் என்ற வகையில் சற்று தேக்க நிலையை அடைந்திருப்பினும் அதை நிரந்தரமாக அமைக்கும் வகையில் இன,மத பேதமின்றி பொதுமக்களின் உள்ளங்களில் இருந்து எழும் உணர்வுகள் சிங்கள, தமிழ் மக்களின் ஒன்றுகூடல்கள் மூலம் வெளிக்கொணரப்படுகின்றன.

இதை மனதிற்கொண்டு மன்னார் வாழ்வுதயமும் சிலாப மறைமாவட்ட செடெக்கும் ஒழுங்கு செய்த மூன்று நாட்கள் கொண்ட உறவுப்பால நிகழ்வு ஒன்று மன்னாரில் நடைபெற்றது. 45 பேர் அடங்கிய சிலாப இளைஞர்களும், 40 பேர் கொண்ட மன்னார் உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து 1/2 நாள் கலந்துரையாடல் ஒன்றை வாழ்வுதய கேட்போர் கூடத்தில் நடாத்தினர். மொழிப்பிரச்சினை இருந்த போதிலும் ஒருவரையொருவர் நன்கு புரிந்துகொள்ள இது வாய்ப்பளித்தது. மற்றும் சிலாபக் குழு மடுத்திருப்பதி, திருக்கேதீஸ்வரம் கோயில், தலைமன்னார் போன்ற இடங்களையும் தரிசித்தனர். நாம் தொடர்ந்து ஒருவரை ஒருவர் பகைத்துக்கொண்டு வாழமுடியாது. எமக்கு வேண்டியது நீதியோடு கூடிய நிரந்தர சமாதானம். தமிழ் மக்களின் உரிமைகளை அவர்களுக்கு அளித்து அவர்களும் இந்நாட்டின் சமமான பிரஜைகள் என்ற உணர்வை ஏற்படுத்தி எல்லோரும் சமாதானமாக வாழ வேண்டுமென்ற உண்மையை சிலாபக் குழுவினரின் மன்னார் வருகையும் நிகழ்வுகளும் எடுத்துக்காட்டின.

## முள்ளிக்குளத்தில் 120 வீடுகள் கட்டத் திட்டம்

கடந்த பதினைந்து வருடங்களுக்கு மேலாக யுத்தம் காரணமாக இந்தியா, மடு, பேசாலை, நீலமடு, மன்னார் போன்ற இடங்களில் அகதி வாழ்க்கை வாழ்ந்த முள்ளிக்குள மக்களில் பெரும்பாலானோர் தற்போது தமது சொந்தக் கிராமங்களில் குடியேறி இயல்பு வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர். தற்காலிக குடிசைகளில் வாழ்ந்துகொண்டு தமது பாரம்பரியத் தொழில்களான மீன்பிடித் தொழில் மற்றும் விவசாயத்தில் ஈடுபடத் தொடங்கியுள்ள நிலையில் இவர்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுக்க மன்னார் ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை முன்வந்துள்ளார். கூடுதலான குடும்பங்கள் மறைமாவட்டத்திற்குச் சொந்தமான காணியிலும் ஏனையோர் அரச காணியிலும் கடந்த காலத்தில் வாழ்ந்து வந்தனர். இக்கிராமத்தை நவீனமயப்படுத்தும் நோக்கோடு ஆயரின் பணிப்புரையின் பேரில் காணிகள் பிரிக்கப்பட்டு புதிய வீதிகளுக்கென இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் வீடுகள் நிர்மாணப் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. அரசாங்கத்தினால் கட்டப்படும் 23 வீடுகளின் நிர்மாணப்பணிகள் நடைபெறும் இவ்வேளையில் 120 வீடுகளைக் கட்ட திட்டமிட்டுள்ள வாழ்வுதயம், ஆரம்பக்கட்டமாக பத்து வீடுகளைக் கட்டத் தொடங்கியுள்ளது. ஒவ்வொன்றும் இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் ரூபா பெறுமதியில் அமைக்கப்படவுள்ள வீடுகள், உரிமையாளர் பங்களிப்போடு ரூபா மூன்று இலட்சம் பெறுமதி மிக்கதாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கான நிதியுதவி கொழும்பு செடெக் (கறிற்றாஸ் - சிறிலங்கா) நிறுவனத்திடமிருந்து வாழ்வுதயத்திற்கு (கறிற்றாஸ் - மன்னார்) கிடைத்துள்ளது.

## சமாதானத்தின் தூதுவர்களாவோம்

### வளர்ந்தோருக்கான சமாதானம் பற்றிய கருத்தமர்வு



வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மேற்படி கருத்தமர்வில் அருட்பணியாளர் விக்ரர் சோசை அடிகளார் கருத்துரை வழங்குகின்றார்.

## வாழ்வுதயப் பணியாளர்களுக்கான பயிற்சி

வாழ்வுதயப் பணியாளர்கள் 33 பேருக்கான பயிற்சிப் பட்டறையானது தொடர்ச்சியாக மூன்று தினங்கள் வாழ்வுதயக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. கனேடிய பிரசையும், அமெரிக்காவின் கத்தோலிக்க புனர்வாழ்வுப் பணிகள் நிறுவனத்தின் பணியாளராக தற்பொழுது கறிற்றாஸ் இலங்கை - செடெக் நிறுவனத்தில் பணியாற்றிக்கொண்டிருப்பவருமான திரு. ஜெவ்றி அவர்கள் இந்நிகழ்வை நடாத்தினார். செயற்பாடுகளை எந்தெந்த வகையில் முன்னெடுத்துச் செல்வது என்பது பற்றியதான பாசறையாக இது அமைந்தது.

இப்பயிற்சியில் வாழ்வுதய பணியாளர்களுடைய செயற்பாடுகளின் மதிப்பீடும் வெவ்வேறு கலந்துரையாடல்கள் மூலமாக வெளிக்கொணரப்பட்டது. அத்தோடு வாழ்வுதயப் பணியின் பலம் அதன் அர்ப்பணிப்பு போன்றவைகளும் தரமான திட்டமிடலும், வழிகாட்டலும் சிறப்புற்று விளங்குவதாகவும், மக்களை ஆளுமை நிறைந்த மக்கள் சக்தியாக உருவாக்குவதில் வாழ்வுதயப் பணியாளர்கள் வலுப்பெற்று இருப்பதாகவும் வளத்துணையாளர் திருவாளர் ஜெவ்றி அவர்கள் கூறினார். இப்பயிற்சிப் பாசறை இன்னும் பல மடங்கு வாழ்வுதயப் பணிகளை விஸ்தரிப்பதற்கும் உதவியாக அமைந்தது.

## சுய தொழில் வாய்ப்பு அபிவிருத்தி தொடர்பான 12 நாள் வதிவிடப் பயிற்சி

மன்னார் மறைமாவட்ட வாழ்வுதய நிறுவனத்தின் மற்றுமொரு பிரிவு கிராமிய விழிப்பூட்டல் பிரிவாகும். இப்பிரிவின்கீழ் 126 கிராமிய குழுக்கள் இயங்கி வருகின்றன. இவர்களின் சுயதொழில் வாய்பை பெருக்கும் நோக்கில் சுயதொழில் அபிவிருத்தி தொடர்பான 12 நாள் வதிவிடப்பயிற்சி வாழ்வுதய நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்பயிற்சியை பதுளை மாவட்டத்தில் இருந்து வருகை தந்த திரு. விமால், மன்னாரைச் சேர்ந்த திரு. டனேஸ், வவுனியாவைச் சேர்ந்த திரு. கணேஸ் ஆகிய மூன்று வளவாளர்களும் மிகவும் சிறப்பாக நடாத்தி முடித்துள்ளனர். இப்பயிற்சியை வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை P. ஜேசுராஜா அடிகளார் நல்ல முறையில் ஒழுங்குபடுத்தியிருந்தார். இப்பயிற்சியின் ஆரம்ப நிகழ்வில் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை ஜேசுராஜா அடிகளார் உரையாற்றும்போது, எமது மறைமாவட்டத்தைப் பொறுத்தவரையில் பல இயற்கை வளங்கள் ஆங்காங்கே பரவலாக உள்ளன. இருந்தும் எமது மறைமாவட்டம் பொருளாதார வளத்தில் பின்தங்கியே காணப்படுகின்றது. நாம் நமது பொருளாதார வளத்தை மேம்படுத்தி வாழ்க்கையில் உயர வேண்டும் என்றால் எமது சுயமுயற்சியில் நம்பிக்கை கொண்டவர்களாக சுயமாக தொழில் செய்து எமது பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்று கூறினார். தொடர்ந்து வளவாளர்கள் மற்றும் வாழ்வுதயப் பணியாளர் ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

## வீரபுரத்தில் முன்பள்ளிக் கட்டிடம்

கல்விக்கென்று பிரத்தியேகமானதொரு கட்டிடத் தொகுதி இருக்கும் பொழுதுதான் கல்வியானது இலகுவாகவும் முழுமையாகவும் வழங்கப்படும். தெளிவாக பெறப்படும். இதை மனதில் கொண்டு வாழ்வுதய நிறுவனத்தினால் செட்டிகுளப் பிரதேசத்தின் இலுப்பைக்குளப் பங்கிற்குட்பட்ட வீரபுரத்தில் முன்பள்ளிக்கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு பாலர்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது. ரூபா மூன்று இலட்சம் பெறுமதியில் அமைக்கப்பட்டுள்ள இக்கட்டிடமானது கண்ணைக்கவரும் வகையில் காட்சியளிக்கின்றது. எமக்கென சொந்தமாக ஒரு கட்டிடம் உண்டு என்று ஆசிரியர்களும் பாலர்களும் பெருமிதம் அடைகின்றனர்.

## 1000 வெற்றுக் கேன்கள் அன்பளிப்பு

ஒவ்வொன்றும் பத்து லீற்றர் கொள்ளக்கூடிய 1000 வெற்றுக் கேன்கள் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் தேவன்பிட்டி, மூன்றாம் பிட்டி, அந்தோனியார் புரம், இலுப்பைக்கடவை, கத்தாளம் பிட்டி, விடத்தல்தீவு போன்ற கிராமங்களிலும் முசலிப் பிரதேச செயலர் பிரிவில் பொற்கேணி, சிலாவத்துறை, கொக்குப்புடையான், முள்ளிக்குளம் போன்ற கிராமங்களிலும் வாழ்வுதயத்தினால் வழங்கப்பட்டன. இக்கேன்கள் அனைத்தும் UNICEF நிறுவனத்தின் அன்பளிப்பாகும். வாழ்வுதயத்தின் செயற்பாடுகள் சிலவற்றிற்கு UNICEF நிறுவனமானது நிதியுதவி வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது.



வாழ்வுதயம் நடாத்திய சுயதொழில் அபிவிருத்தி தொடர்பான 12 நாள் வதிவிடப் பயிற்சியில் யுவதிகளின் நிகழ்வுகள்.

கிறிஸ்து பிறப்பு சிறப்புப் பொழிவு.... கிறிஸ்து பிறப்பு சிறப்புப் பொழிவு.... கிறிஸ்து பிறப்பு

# கிறிஸ்மஸ் சிறுகதைகள்

## ஒரு மனைவியின் தாராள மனப்பான்மை

அருட்சகோதரர் கலாநிதி பப்ரிஸ் குருஸ்

அது ஓர் அழகான சிற்றூர். அங்கே றோசி என்ற சிறிய பெண் இருந்தாள். அவள் 10 வயதாக இருக்கும்போது, தந்தை அவளது தாயைப் பிரிந்து சென்று வேறு திருமணம் செய்துகொண்டார். றோசி தாயுடன் வாழ்ந்து வருகையில், குடும்பத்தில் பல்வேறு கஸ்ரங்கள் ஏற்பட்டன. அத்துடன் வறுமையும் தாண்டவமாடியது.

றோசியும் அவளது இரு சிறிய சகோதரர்களும், தாய்க்கு மிகவும் ஆதரவாய் இருந்தார்கள். கஷ்டங்களுக்கும் மனக்கவலைகளுக்கும் மத்தியில், தாய் வெவ்வேறு இடங்களுக்குச் சென்று பணம் சம்பாதித்து குடும்பத்தைத் தைரியத்துடனும், இறைபக்தியுடனும் நடாத்தி வந்தாள்.

றோசி மனதில் அழிக்க முடியாத தந்தையின் பிரிவைப் பற்றி எண்ணி எண்ணி மனம் நொந்தாள். அவளின் தந்தை வீட்டைவிட்டு வெளியே சென்றது அவளுக்கு மிகவும் தெளிவாக ஞாபகம் இருக்கிறது. ஆனால் றோசி அவளது தந்தைமேல் வெறுப்புக் கொள்ளவில்லை. மாறாக மரியாதையும், அன்புமே வைத்திருந்தாள். தனது தந்தை மீண்டும் ஒரு திருமணம் செய்துகொண்டது அவளுக்கு மிகவும் துக்கமாகவே இருந்தது.

றோசி, இளமையில் ஏற்பட்ட கசப்பான அனுபவத்தினால், மிகவும் வேதனைப்பட்டாள். ஆனால் அவளின் அன்பார்ந்த அன்னையோ மிகவும் துணிவுடனும், தைரியமான மனத்துடனும் குடும்பக் கஷ்டங்களையெல்லாம் ஏற்று, பிரச்சனைகளைத் தீர்க்க உரிய தீர்மானத்தை எடுத்து தகுந்த நடவடிக்கைகளையும் கையாண்டாள். அவள் ஆன்ம சக்தியுடன் சுறுசுறுப்பாகக் குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள். றோசிக்கு 20 வயது இருக்கும்போது, அவள்



ஒரு துறவற சபையில் சேரத் தீர்மானித்தாள். தனது குடும்பப் பிரச்சனைகளையும், கசப்பான அனுபவங்களையும், உணர்வுகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு அவள் துறவற சபைக்குள் தன்னை இணைத்துக்கொண்டாள்.

அந்தக் கன்னியர் இல்லத்தில் ஒவ்வொரு அருட்சகோதரிக்கும் வேலைகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. ஒருவர் படுக்கையறையையும், மற்றொருவர் சாப்பாட்டறையையும், இன்னுமொருவர் படிப்பறையையும் பொறுப்பேற்றுக் கொண்டனர். இவ்வாறு றோசிக்கும் ஒரு வேலை கொடுக்கப்பட்டது. அந்த அறையானது அருட்சகோதரிகளைச் சந்திக்க வரும் விருந்தினர்களையும், பெற்றோர்களையும், நண்பர்களையும் உபசரிக்கும் ஒரு அறையாக இருந்தது.

நத்தார் வருவதற்கு முன்னர், அங்கிருந்த சகோதரிகள் அனைவரும் மடத்தை அலங்கரிப்பதில் ஆர்வம் காட்டினர். அவ்வாறே அருட்சகோதரி றோசிக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவள் தனக்குக் கொடுக்கப்பட்ட அறையைத் துப்பரவாக்கி, சோடனை செய்தாள். நத்தாருக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர், ஒரு நாள் தனது இரவு உணவின் பின்னர் யாரோ சந்திப்பு அறையின் மணியை அடித்தார்கள். அப்பொழுது, அருட்சகோதரி றோசி, கதவைத் திறந்து பார்த்தார். அங்கு ஒரு வயது முதிர்ந்தவரைக் கண்டாள்.

அவர் பார்ப்பதற்கு ஒரு பிச்சைக்காரனைப்போல், கிழிந்த உடையுடன், தலைமுடி குலைந்த நிலையில் தாடி வழிக்காத நிலையில் அழுக்கான பாத அணியுடன் காணப்பட்டார். மேலும் அவர் தலையிலிருந்து கால் வரை நடுங்கிக் கொண்டேயிருந்தார். அருட்சகோதரி றோசி அவரை யார் என்று அடையாளம் காண முடியாத நிலையில் தடுமாறி நின்றாள். அவர் ஒரு பிச்சைக்காரன் அல்லது அறிமுகமற்றவர் என்று எண்ணிக்கொண்டாள்.

சற்று நேரத்தின்பின் அருட்சகோதரி றோசி, அவரின் மன்னிப்பும், இரக்கமும் கோரும் கண்களை உற்று நோக்கியபின், அவரை அடையாளம் கண்டு கொண்டாள்.

அவர்தான் தன்னையும், தனது அன்புத் தாயையும் பல வருடங்களுக்கு முன் விட்டுச்சென்ற தனது சொந்தத் தந்தை என்று அடையாளம் கண்டுகொண்டாள். அங்கு அவளின் கண்களில் கண்ணீர் ததும்ப, மன்னிப்பும் கருணையும் வழிந்தோடும் ஒரு அற்புத உலகத்தைக் கண்டாள். அவர்களின் கண்கள் ஒன்று சேர, சில வினாடிகள் மௌனம் நிலவியது. பின் அருட்சகோதரி றோசி தனது தந்தையை ஆரத் தழுவி அணைத்துக்கொண்டாள்.

விண்ணகமும் மண்ணகமும் ஒன்று சேர்ந்தன. அந்த அரவணைப்பில், அன்பு வெள்ளம் பாய்ந்தது. கசப்பான சம்பவங்கள், காயப்படுத்தப்பட்ட உணர்வுகள், துக்கமான அனுபவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு, ஆழ்ந்த கடலைப்போல் அமைதியான அன்பு ததும்பியது.

“றோசி, என்னை மன்னித்துவிடு. நான் ஒரு பாவி. உனது அன்னைக்குப் பெரும் துரோகம் செய்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு றோசி, என்னை மன்னித்துவிடு.” என்று தந்தை மிகவும் தாழ்மையுடன் மன்னிப்புக் கோரினார். அவ்வாறு அவர் மன்னிப்புக் கேட்கும்போது, அவரது கண்களிலிருந்து கட்டுக்கடங்காத கண்ணீர் வழிந்தோடியது. “அப்பா, நான் உங்களை மனப்பூர்வமாக மன்னிக்கிறேன், தயவுசெய்து உள்ளே வாருங்கள்” என்று அருட்சகோதரி றோசி, ஆறுதல் வார்த்தைகளைக்கூறி தன் தந்தையை கதிரையில் அமரச் செய்தாள். பின் அவர் சாப்பிடுவதற்கு ஒரு தட்டில் பலகாரங்களையும், பழங்களையும், கோப்பியையும் எடுத்து வந்தாள். உடனே தந்தை, “றோசி, எனக்கு உன் அம்மாவைப பார்க்க மிகவும் ஆசையாய் இருக்கிறது. தயவுசெய்து என்னை உன் அம்மாவிடம் கூட்டிச்செல். எனக்கு இப்பொழுது வீடுவாசலில்லை. எனது மனைவியும் பிள்ளைகளும் என்னைக் கைவிட்டுவிட்டார்கள். தாறுமாறாகப் பேசி, வீட்டைவிட்டு விரட்டி விட்டார்கள். நான் உன் அம்மாவை இப்பொழுதே பார்க்க வேண்டும். அவள் தூயவள். அவள் ஒரு புண்ணியவதி. அவளின் பாதங்களில் விழுந்து நான் மன்னிப்புக் கேட்க வேண்டும். தயவுசெய்து, என்னை உன் அம்மாவிடம் கூட்டிச்செல்.” என்று இதயம் நொந்து கூறினார்.

உடனே அருட்சகோதரி றோசி தந்தையின் நிலையைத் தெளிவாகப் புரிந்துகொண்டாள். ஏனெனில் அவர் தனது தாயை விட்டு விட்டு வேறொரு பெண்ணை திருமணம் செய்து கொண்டார். அப்பெண் மூலம் பிள்ளைகளையும் பெற்றெடுத்துவிட்டார். ஆகையினால் தற்பொழுது, வீடு செல்வது சாத்தியமான காரியம் இல்லை என றோசி எண்ணினாள். ஆனால் அந்த முதிர்ந்த மனிதன் கட்டாயப்படுத்தி, திரும்பவும் திரும்பவும் மன்னிப்புக்கோரி வற்புறுத்திக்கொண்டே இருந்தார். அருட்சகோதரி றோசி கூறினாள், “அப்பா, நீங்கள் என்னோடு சிறிது காலம் இம்மடத்திலேயே இருங்கள். பின்பு நானே உங்களை அம்மாவிடம் கூட்டிச் செல்கிறேன்”

அந்த மடத்தின் தலைமைச் சகோதரியிடம் சென்று உரையாடினாள். அவரை அம்மடத்தில் தங்க வைப்பதற்கு அனுமதியும் பெற்றுக்கொண்டாள்.

அந்தத் தந்தைக்கு அம்மடத்தில் ஒரு அறையும் வழங்கப்பட்டது. அருட்சகோதரி றோசி தனது வீட்டிற்குச் சென்று, தன் தந்தையின் நிலையைப் பற்றி தனது தாயிடம் கலந்தாலோசித்தாள். அவளுடைய தாயார் ஒரு உத்தமி. உயர்ந்த உள்ளம் கொண்டவள். மன்னிக்கும் மனப்பான்மையைக் கடைப்பிடிப்பவள். திருச்சபையின் பொதுச்சட்டங்களுக்கமைய, தன் கணவனுடைய தவறை மன்னிக்க உத்தேசித்தாலும், அவர் மறுதிருமணம் செய்தபடியால் திரும்பவும் கணவனாக ஏற்றுக் கொள்ள முடியாத நிலையிலிருந்தாள். அப்படி இருந்தபோதும், புனித நத்தார் தினத்தன்று, அவர்கள் ஒருவரையொருவர் சந்தித்தனர். அந்த வேளை அவர்களின் கண்ணீர் நீரோட்டம்போல் கன்னங்களில் வழிந்தோடியது.

பின் அமைதியான முறையில் அவர்கள் உரையாடினார்கள். தாராள மனப்பான்மையுடைய அந்தத் தாய், வீடு தேடி வந்த அந்த மனிதனை, மனப்பூர்வமாக மன்னித்து, ஒரு நண்பனாக ஏற்றுக்கொண்டாள். அவர் சுகவீனமாக இருப்பதை அறிந்து, அவரை அன்பு செய்யவும், பராமரிக்கவும் முயன்றாள். தான் கஷ்டப்பட்டு சம்பாதித்த செல்வங்களையெல்லாம் அவருடைய உடல் நலனுக்காக செலவழித்தாள். பல நாட்களுக்குப் பின், அந்த முதிர்ந்த மனிதன் நெஞ்சுவலியினால் பீடிக்கப்பட்டு இவ்வுலகைவிட்டே பிரிந்தார்.

*நத்தார் ஒரு பரிசுத்தமான நாள். ஒரு சந்தோஷகரமான நாள். குற்றம் செய்தவர்களை மன்னித்து மகிழும் நாள். சமாதானத்திற்கும் நல்லுறவுக்கும் ஒரு சந்தர்ப்பமாக அமையும் நாள்.*

## ஏங்கும் இதயம்

*இ. டக்ஷினி,*
*உப்புக்குளம், மன்னார்.*

டாங்.. டாங்... டாங்.... கோவில் மணி சத்தம் கேட்டு, முதியோர் இல்லத்தில் இருக்கும் அன்னம்மா திடுக்கிட்டு கண் விழித்தாள். பொழுது புலர்ந்து விட்டதே என அவசரமாக எழும்பியிருந்தவளின் பார்வை ஜன்னலை நோக்கி ஏறிட்டது. நேற்று சிஸ்டர் ஜென்சி சொன்னது நினைவில் வந்தது. “அம்மா நாளைக்கு நான் நேரத்தோட கோவில் சோடிக்க போவன்..... என்னைத் தேட வேண்டாம். யாராவது கேட்டா சொல்லுங்கோ” என்று சொல்லி இருந்தார். ஜன்னலுக்கு அப்பால் உள்ள பூந்தோட்டத்தில் சிஸ்டர் பூக்களைப் பறிப்பதைப் பார்த்தாள்

“ம்...ம்.. சிஸ்டர் நாளைக்கு நிண்டு வரவிருக்கும் நத்தாருக்கு கோவில் சோடிக்கப் போறா.. நத்தாரா... போன நத்தார்.... ம் போன நத்தார்....நான் என்ர சொந்த வீட்டில இருந்த நேரம்... என்ர.. மகன்..”

எதையெல்லாம் மீண்டும் நினைக்கக் கூடாது என்று மனதின் அடி ஆழத்தில் பூட்டி வைத்தாளோ அந்த எண்ண அலைகள், பூட்டியிருந்த இதய மடையைத் திறந்து கட்டுக்கடங்காத வெள்ளம் போல கரைபுரண்டோடியது.

போன வருடம் இதே நாள்.... “அம்மா, போயிற்று வாறன்” என்று அன்னம்மாவின் மகன் ஜோண் கூறி புறப்பட ஆயத்தமானான். அன்னம்மா, “என்ன மகன் அவசரம்... இப்பதானே ஏழு மணி. வா வந்து சாப்பிட்டுட்டுப் போவன். வா தம்பி, என்ர செல்லமல்லே” “அம்மா நேற்றே சொல்லிப் போட்டன்.. இன்றைக்கு காலையே பாதர் வரச் சொன்னவர்.. கடற்கரையிலே பெரிய மேடையெல்லாம் போட்டு இந்தமுறை ஒளிவிழாவை சிறப்பாகப் பெரிசாச் செய்யப் போறமம்மா.. இண்டைக்கு பின்னேரம் 6.00 மணிக்கு நிகழ்ச்சிகள் நடக்கும். இப்ப நான் சாப்பிட நேரமில்லை. மதியம் வையுங்கம்மா” என்றவன் தாயின் பதிலை எதிர்பாராமலே தனது சைக்கிளை வேகமாக மிதித்தான்.

மகன் போன திசையையே கண்கொட்டாமல் நின்று பார்த்தவண்ணம் இருந்தாள் அன்னம்மா. அவள் அநாதை என்ற முத்திரை குத்தப்படாமல் இருப்பதற்குக் காரணம் ஜோண்தான். சிறுவயதிலே தாய் - தந்தையை இழந்த அன்னம்மா, சித்தியின் பாதுகாப்பில் வளர்ந்து – கரம் பற்றியவன்தான் ஜேம்ஸ். திருமணமாகி ஒரு வருடம் கழிந்த நிலையில், திருமணத்திற்கு அத்தாட்சியாகவும், அவளை தனியே விட்டுப்போக மனதில்லாமலும் அவளுக்குத் துணையாக ஆழ்கடலிலே விட்டுச் சென்ற துடுப்புத்தான் அவனது மகன் ஜோண். ஜோண் இவ்வுலகத்தை முத்தமிட்டபோது அவனது தந்தையை கடல் நேவி காவு கொண்டு 2 மாதங்கள் ஆகியிருந்தது.

இவ்வாறு தனித்த நிலையிலே அன்னம்மா தனது வீட்டையே தொழில் புரியும் இடமாகப் பயன்படுத்தி உழைத்தாள். பிற இடங்களிலிருந்து வருகை தந்திருந்த ஆஸ்பத்திரி, மற்றும் பாடசாலையில் கடமையாற்றும் பணியாளருக்கு சாப்பாடு செய்து கொடுத்து அதிலிருந்து வரும் வருவாயைக் கொண்டு கண்ணின் மணியென தனது அருமை மகனை வளர்த்து வந்தாள். “போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து” அவளுக்கு அது போதுமானதாக இருந்தது.

இப்பொழுது மகன் 18 வயது நிரம்பியவன்...... வாலிபன். வழக்கம்போல் அன்னம்மா சமையல் வேலைகள் முடிய மகனுக்காக காத்திருந்தபோது ஜோண் கையில் ஒரு பார்சலுடன் திரும்பி வந்தான். “அம்மா பசிக்குது” என்ற அவனது பசியைப் போக்கிய தாய் மகனின் கையில் இருந்த பார்சலைப் பார்த்து, ‘என்ன மகன் எனக்கா கொண்டு வந்தனி காட்டு பார்ப்பம்” என்று கேட்டாள். “அம்மா மறந்துட்டன். இது வடிவான சாறியா என்று பாருங்க” “ஏன் தம்பி வேண்டினி” என்ற தாயை இடை மறித்து, “அம்மா இது நான் உண்டியல் போட்ட காசில வேண்டினன். இது எங்கட கோயிலுக்குப் பக்கத்தில இருக்கிற



முதியோர் மடத்தில் இருக்கும் அம்மாவுக்கு வேண்டின நான். பள்ளிக்கூடம் முடிய ஒவ்வொரு நாளும் அந்த அம்மாவிடம் சுகம் விசாரிப்பது தெரியும்தானே....” ‘எனக்கென்று யாரிருக்கிறா!’ என்று கவலைப்பட்டா.”

“அம்மா கோவியாதயுங்க... இந்த சித்திரை வந்தா நான் ஏ.எல். எடுத்திருவன். பிறகென்ன, நீங்க இப்படி அடுப்பில கிடந்து நெருப்பில வேகத் தேவையில்ல. நான் உழைக்கத் தொடங்கிடுவன். அப்ப ஒரு சாறியல்ல 10 சாறி வாங்கித் தருவன்” என்ற மகன் தாயை கட்டியணைத்து தாயின் கண்களிலிருந்து வடிந்த கண்ணிரைத் துடைத்தான்.

பாவம் மகன் ... படிக்கிற வயசிலேயே இவ்வளவு பெரிய சிந்தனைகள்... என அன்னம்மா தனது மகனை பெருமிதமாக நோக்கினாள். அவள் பெருமைப்பட்டதற்கு இணங்க மகன் ஜோண் கிறிஸ்மஸ் காலையிலேயே பூசை முடிய அங்கிருந்த யாருமற்ற கைவிடப்பட்டவர்களைக் கவனிக்கும் முதியோர் இல்லத்திற்கு சென்று அங்கு தங்கியிருந்த ஒவ்வொரு உள்ளங்களினதும் வேதனைகளைக் கேட்டு ஆறுதல் கூறினான்.

கிறிஸ்மஸ்க்கு அடுத்த நாள் வழமை போலவே விடிந்தது. ஆனால் ஜோணுக்கு? ஏன், ஜோணோடு போனவர்களுக்கும் அந்த நாள் விடியாமல் இருந்திருந்தால் நலமாயிருந்திருக்கும்.

டிசம்பர் 26! விடியவே எழும்பியவன் “ஒளிவிழா நடந்து முடிந்த இடம் அப்படியே கிடக்குதம்மா. பாதர் இன்றைக்கு வரச் சொன்னவர். பூசை முடிய வந்து என்னைத் தேடாதீங்கோ... நான் வர லேட்டாகும்” என்று வழமையான வேகத்துடன் போனவன்தான் ஜோண்.

அங்கு அவன் அந்த கடற்கரை வெளியில் அமைந்திருந்த அந்த இடத்தை துப்பரவு செய்து கொண்டிருந்த வேளையில்தானா இயற்கையும் சீற்றம் கொள்ள வேண்டும்?

அவனை இழந்த அந்த ஆன்மாவின் கண்ணீர் துளியை விடவா, அந்த அலையின் கோரம் பெரிது! அந்தத் தாயுள்ளம் - மகனின் வரவை எதிர்பார்த்திருக்க, அந்தக் கடல் அன்னை எதிர்பாராமலே வந்து இவனை அழைத்துச் சென்றுவிட்டாள். ஆண்டவன் அருளால் தப்பிய பாதர் வந்து சொன்ன வார்த்தைகள் அன்னம்மாவின் காதுகளில் எதிரொலித்தது. “பாதர், அம்மா தனிச்சிடுவா.. அவ ஏங்குவா.... அவவக் காப்பாற்றுங்க” பாதரின் துணையோடு வந்த அன்னமாவை வரவேற்றது முதியோர் இல்லம்.

பழைய நினைவுகளில் மூழ்கிய அன்னம்மா.. கண்விழித்தபோது, பொழுது புலர்ந்திருந்தது. இந்த கிறிஸ்மஸ்சுக்காவது, என்னை பார்க்க, எனது உள்ளப் பாரத்தை இறக்கி எனது வேதனையைப் பகிர்ந்துகொள்ள, ஒரு இதயம்...! துடிப்புள்ள பாசமான ஒரு இதயம் வருமா? ஜோண் சொன்னதுபோல நல்லிதயம் கொண்ட அந்த முதியோர் இல்ல ஆதரவாளர்களால் 10 சாறிகள் வந்தன. ஆனால் அன்பான ஒரு வார்த்தை...? காத்திருக்கிறாள் அன்னம்மா கசிந்த விழிகளுடன்.

மன்னா பணியகத்தின் சிறப்புப் பகுதி, மன்னா பணியகத்தின் சிறப்புப் பகுதி, மன்னா பணியகத்தின் சிறப்புப் பகுதி

# மன்னா பணியக செய்தி மடல்

# உள்நாட்டு – வெளிநாட்டு மன்னா விநியோக விபரம்

## மன்னார் மறைமாவட்ட பங்குகளில்

| பங்குகள் | குடும்ப எண்ணிகை | விநியோக எண்ணிக்கை | விநியோக சதவீதம் |
|---|---|---|---|
| மடு | 27 | 20 | 74% |
| உயிலங்குளம் | 340 | 190 | 56% |
| தலைமன்னார் | 500 | 258 | 52% |
| பம்பைமடு | 413 | 175 | 42% |
| வங்காலை | 770 | 320 | 41% |
| அரிப்பு / சிலா. | 617 | 225 | 36% |
| பண்டிவிரிச்சான் | 301 | 110 | 36% |
| ஓமந்தை | 71 | 25 | 35% |
| அளவக்கை | 538 | 171 | 32% |
| பேசாலை | 1325 | 430 | 32% |
| அடம்பன் | 216 | 70 | 32% |
| விடத்தல்தீவு | 224 | 70 | 31% |
| தோட்டவெளி | 380 | 117 | 31% |
| நானாட்டான் | 903 | 285 | 31% |
| கற்கடந்தகுளம் | 365 | 108 | 29% |
| ஆட்காட்டிவெளி | 670 | 197 | 29% |
| செட்டிகுளம் | 374 | 100 | 27% |
| இலுப்பைக்குளம் | 390 | 100 | 26% |
| கோமரசன்குளம் | 170 | 40 | 24% |
| பள்ளிமுனை | 793 | 180 | 23% |
| தட்சனாமருதமடு | 107 | 25 | 23% |
| மன்னார் | 2150 | 483 | 22% |
| முருங்கன் | 470 | 100 | 21% |
| தாழ்வுபாடு | 498 | 100 | 20% |
| கீளியன்குடியிருப்பு | 330 | 50 | 15% |
| தேவன்பிட்டி | 406 | 50 | 12% |
| வவுனியா | 1883 | 218 | 12% |

### உள்நாட்டு
சந்தாதாரர் பிரதிகள் (Subscription copies)

| இடம் | தொகை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 150 |
| மலையகம் | 98 |
| கொழும்பு | 85 |
| புத்தளம் | 80 |
| வன்னி | 50 |
| மன்னார் | 48 |
| மட்டக்களப்பு | 18 |
| கற்பிட்டி | 16 |
| திருகோணமலை | 12 |
| கல்கமுவ | 10 |
| கம்பஹா | 10 |
| பொல்காவல | 08 |
| சிலாபம் | 05 |
| மாத்தளை | 04 |
| கல்முனை | 04 |
| அநுராதபுரம் | 02 |
| ஏனைய இடங்கள் | 02 |
| மொத்தம் - | 602 |

### உள்நாட்டு
அன்பளிப்பு பிரதிகள் (Compliments Copies)

| இடம் | தொகை |
|---|---|
| மன்னார் | 11 |
| யாழ்ப்பாணம் | 10 |
| கொழும்பு | 08 |
| மட்டக்களப்பு | 06 |
| மலையகம் | 06 |
| பதுளை | 03 |
| அநுராதபுரம் | 02 |
| வன்னி | 02 |
| திருமலை | 01 |
| சிலாபம் | 01 |
| இரத்தினபுரி | 01 |
| காலி | 01 |
| குருநாகல் | 01 |
| புத்தளம் | 01 |
| மொத்தம் - | 54 |

### வெளிநாட்டு
சந்தாதாரர் பிரதிகள் (Subscription copies)

| இடம் | தொகை |
|---|---|
| ஜேர்மனி | 97 |
| பிரான்ஸ் | 78 |
| சுவிஸ்லாந்து | 40 |
| கனடா | 30 |
| லண்டன் | 27 |
| டென்மார்க் | 20 |
| அமெரிக்கா | 15 |
| நோர்வே | 05 |
| கொலண்ட் | 05 |
| இந்தியா | 05 |
| உரோம் | 04 |
| நியூசிலாந்து | 04 |
| அவுஸ்ரேலியா | 02 |
| பிலிப்பைன்ஸ் | 02 |
| பெல்ஜியம் | 01 |
| மொத்தம் - | 335 |

### வெளிநாட்டு
அன்பளிப்பு பிரதிகள் (Compliments Copies

| இடம் | தொகை |
|---|---|
| இந்தியா | 04 |
| பிரான்ஸ் | 01 |
| டென்மார்க் | 01 |
| அமெரிக்கா | 01 |
| லண்டன் | 01 |
| | 08 |

### ஒரே பார்வையில்

| | |
|---|---|
| பங்குகள் | 4217 |
| உள்நாட்டு சந்தா | 602 |
| உள்நாட்டு அன்பளிப்பு | 54 |
| வெளிநாட்டு சந்தா | 335 |
| வெளிநாட்டு அன்பளிப்பு | 08 |
| மொத்தம் | 5216 |

## உங்கள் கவனத்திற்கு

இறந்துபோன உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகள், யூபிலி மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றை மன்னாவில் பிரசுரிக்க வேண்டுமாயின் அந்நினைவுகள் எந்த மாதத்தில் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள். இத்திகதிக்கு பின்னர் வரும் எந்த விடயங்களும் அக்குறிப்பிட்ட மாதத்தில் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதை தெளிவாக அறியத்தருகின்றோம். நீங்காத நினைவுப் பகுதியில் இடம்பெறும் மரண அறிவித்தலுக்கான கட்டணமாக ரூபா 1000 அறவிடப்படும். - பதிப்பாசிரியர்

## மனம் திறந்து உங்களோடு!
### ஆழமான சிந்தனைக்கும் செயற்பாட்டிற்கும்

பங்குகளுக்கிடையேயான மன்னா விநியோக விபரத்தை தந்துள்ளோம். இது உங்களுடைய ஆழமான சிந்தனைக்கும் ஆக்கபூர்வமான செயற்பாட்டிற்காகவுமே தரப்படுகிறது. ஒவ்வொரு பங்கிலும் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கையோடு அந்தப் பங்கில் விநியோகிக்கப்படும் பத்திரிகையின் எண்ணிக்கையை ஒப்பிடும் போது ஒவ்வொரு பங்கிலும் எத்தனை வீதமான குடும்பங்கள் மன்னாவைப் பெறுகின்றன என்ற விபரம் இங்கே தெளிவாகின்றது.. ஒவ்வொரு பங்கிலும் உள்ள இறைமக்கள் இத்தரவுகளை ஆழமாகப் படித்து சிந்தித்து செயற்பட வேண்டுமென மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறோம். ஆகக்குறைந்தது ஒவ்வொரு பங்கிலும் 50 வீதமான குடும்பங்கள் மன்னாவைப் பெற்று பயனடையும் வண்ணம் ஒவ்வொரு பங்குத்தந்தையும் பங்கு மக்களும் இணைந்து முயற்சி செய்ய வேண்டும். புதிய வருடத்தில் முயற்சிப்போமா? (பதிப்பாசிரியர்)

## எமது வெளிநாட்டு மன்னா முகவர்கள்

ஜேர்மனி
MR. M. GABRIEL
ANRFELDER STR. 16
59929 BRILON
GERMANY
TEL .NO. 004929611894

பிரான்ஸ்
MR. N.M. JEUARATNAM
110, AVE PDT WILSON
93100 MONTREUIL
FRANCE
TE . NO. 0142875711

சுவிஸ்லாந்து
MR. S. GANESAN
GIEBENACHER STR. 53
CH 4133 PRATTELN
SWITZERLAND
TEL .NO : 0041618215385

இங்கிலாந்து
REV. FR. SAVERIN EUGENE FRANCIS
304, GARRARR LANE
EARLSFIELD
LONDON
SW 18 4 EH

டென்மார்க்
MR. THOMAS RAJANAYAGAM
PROVST DRESLERSVEJ 28, 3TH
DK 9900 FREDERIKSHAVAN
DENMARK

கனடா
MRS. CARMEL ALOYSIUS
301 WASHBURN WAY UNIT # 17
SCARBOROUGH, MIB – 1K4
ONT. CANADA

REV. SR. MARY SOPHIA
HOLY FAMILY SISTERS
79, GRANGE ROAD
ALLERTON
BRADFORD BD 15 – 7RS
YORKSHIRA
U.K
TEL NO : 01274498843

## *மன்னா விநியோகஸ்தர்கள்*
## *கவனத்திற்கு*

நாம் எவ்வளவு விரைவாக மன்னாவை அச்சிட்டு பங்குகளில் உள்ள விநியோகஸ்தர்கள் கையில் கொடுத்தாலும் அவர்களில் சிலர் உரிய நேரத்தில் அவற்றை வாசகர்களுக்கு கொடுக்காமல் காலம் தாழ்த்திக் கொடுப்பதாக நாம் அறிய வருகின்றோம்.

எனவே தயவுசெய்து மன்னா விநியோகஸ்தர்கள் உங்கள் கைகளில் மன்னா பத்திரிகை கிடைத்ததும் அவற்றை மிக விரைவாக - கூடிய விரைவில் வாசகர்கள் கைகளில் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம். - *பதிப்பாசிரியர்*

## எமது நன்றிகள்

*பங்குகளில் மன்னா விநியோகத்திற்கு பொறுப்பாக இருந்து அளப்பரிய பணிபுரியும் எம் அன்புக்குரிய பங்குத் தந்தையர், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.*

*மன்னா பத்திரிகைப் பணியகத்தில் தமது அயராத சேவையினால் மன்னா பொலிவுறப் பொழியப்பட அயராது உழைக்கும் எமது அன்புக்குரிய மன்னா பணியாளர்களுக்கும் அன்போடு நினைந்து நன்றி கூறுகின்றோம்.*

மேலே நாம் குறிப்பிட்ட இறைபணியாளர்கள் தாம் வசிக்கும் நாடுகளில் தமது அன்றாட வேலைப்பழுக்கள் மத்தியிலும் மன்னாவை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்கள். மன்னாவை விநியோகம் செய்கிறார்கள். சந்தாதாரர்களை சேர்த்து அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்று எமக்கு அனுப்புகிறார்கள். இந்த நல்லுள்ளம் படைத்த இறைபணியாளர்களை நன்றியோடு நினைத்துப் பாராட்டுகின்றோம். இறையாசீர் வேண்டுகின்றோம்.

வெளிநாட்டில் உள்ளவர்கள் மேலே உள்ள முகவர்களோடு தொடர்புகொண்டு மன்னா பற்றிய விபரங்களை அறிந்துகொள்ளலாம்.

## யாழ். புனித சவேரியார் ......

5ம் பக்கத் தொடர்ச்சி

1980ம் ஆண்டை அண்டிய காலப்பகுதியில் நாட்டில் ஏற்பட்ட இனப்பாகுபாடு, வன்செயல்கள் போன்றவற்றாலும் அமைப்பு முறைகள், பண்பாட்டு மயமாக்கல் போன்றவற்றின் தேவை உணரப்பட்டமையினாலும், 1980ம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 3ம் நாள் இக்குருத்துவக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

வெள்ளிவிழாவில் தடம்பதித்துள்ள இக்குருத்துவக் கல்லூரி தனது கால் நூற்றாண்டுகால நீரோட்டத்தில் 179 அருட்பணியாளர்களை ஈன்றெடுத்துள்ளது என்பதில் உளம் பூரித்து நிற்கின்றது. இன்னும் 29 திருத் தொண்டர்கள் குருத்துவ திருநிலைப்படுத்தலை எதிர்நோக்கி நிற்கின்றனர். மற்றும் யாழ், மன்னார் மறைமாவட்டங்கள், ஐந்து துறவற சபைகள், திருவுளப்பணியாளர்சபை ஆகியவற்றை சேர்ந்த 78 அருட்சகோதரர்கள் குருத்துவப் பயிற்சி பெறுகின்றனர்.

இக்குருத்துவக் கல்லூரியின் ஆரம்பகால அதிபராயிருந்து பல்வேறு துறைகளிலும் இதன் வளர்ச்சிக்கு வித்திட்ட பெருமை அமரர் அருட்பணி. பிலிப் பொன்னையா அடிகளாரையே சாரும். இவரைத் தொடர்ந்து இதன் வளர்ச்சிப் பாதையில் படிக்கற்களாக இருந்து தலைமைத்துவப் பொறுப்புக்களை ஏற்று இதனைக் கட்டியெழுப்பியவர்கள் அருட்பணி சீ. யோ. இம்மானுவல் அடிகளார், அருட்பணி. யே. நீக்கிலஸ் அடிகளார் ஆகியோராவர். இன்று அருட்பணி வி.ப.மங்களராஜா அடிகளாரின் நெறியாள்கையில் இக்குருத்துவக் கல்லூரியானது பல்வேறுபட்ட பயிற்சிகளையும் அருட்சகோதரர்களுக்கு அளித்து நிற்கின்றது.

வெள்ளிவிழாவைக் கண்டுகளிக்கும் இக்குருத்துவக் கல்லூரியானது தன்வளர்ச்சிப் பாதையில் பொன், வைர, பவள, நூற்றாண்டு விழாக்களைக் கண்டு களிக்கவும், துறவற குருத்துவ அழைத்தல்கள் பெருகவும் இறையருள் வேண்டி மன்னார் மறைமாவட்டம் சார்பாக யூபிலி வாழ்த்துக்கூறி நிற்கின்றோம்.

## எமது சொந்தப் பலத்தில்.....

வாழ்வுதயமானது கடந்த 2000மாம் ஆண்டு தொடக்கம் வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களில் மிகவும் பின்தங்கிய கிராமப் புறங்களை நாடிச் சென்று ஊக்குவிப்பு செயற்றிட்டம் என்ற பெயருடன் சில கிராமங்களில் 15-20 நபர்கள் அடங்கலாக ஊக்குவிப்பு குழுக்களை அமைத்து அவர்களுக்கு சமூக, பொருளாதார, கலாச்சார, ஆன்மீகம் தொடர்பான விழிப்புணர்வைக் கொடுத்து அவர்களின், சொந்தப் பலம் பற்றிய அறிவூட்டலை வழங்கி வந்துள்ளது.

தற்பொழுது இக்குழுக்கள் மன்னார், வவுனியா போன்ற மாவட்டங்களில் 7 பிரதேச அமைப்புக்களாக பிரிக்கப்பட்டு இக்குழுக்கள் பரவலாக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன. 2000மாம் ஆண்டு ஓரிரு குழுக்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டமானது தற்பொழுது 126 குழுக்களாக அமைக்கப்பட்டு இக்குழுக்கள் 2005ம் ஆண்டு தொடக்கம் பெயர் மாற்றம் செய்யப்பட்டு "*வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள்*" என்ற பெயருடன் இயங்கி வருகின்றன.

இக்குழுக்களின் உறுப்பினர்கள் தற்பொழுது விழிப்பூட்டம் பெற்று தமது சொந்தப் பலத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக செயற்பட்டு வருகின்றனர்.

இச்செயற்பாடுகளை மன்னார் வாழ்வுதய நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை பி. ஜேசுராஜா அடிகளாரின் திட்டமிடலுடனும் வழிகாட்டுதலுடனும் இணைப்பாளர் திரு. S. அன்ரன் ராஜகாரியர் (ராஜன்) அவர்களின் ஒருங்கிணைப்புடனும் ஊக்குவிப்பாளர்களான மன்னார்த்தீவு பிரதேசப் பொறுப்பாளர் திரு. C.M.A ஜெயதாஸ், அடம்பன் பிரதேசப் பொறுப்பாளர் திரு. A. ஜோர்ச் குரூஸ், நானாட்டான் பிரதேசப் பொறுப்பாளர் திரு. S. பூட்டோ பெரேரா, மடுப்பிரதேசப் பொறுப்பாளர் திரு. A. ஜோன், முசலிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. S. R. ராஜேஸ்வரன்,

10ம் பக்கத் தொடர்ச்சி

வவுனியா பிரதேசப் பொறுப்பாளர் திரு. A. விமலநாதன், செட்டிகுளம் பிரதேசப் பொறுப்பாளர் திரு. A. அமல்ராஜ் ஆகியோரும் பொறுப்பாக இருந்து மிகவும் சிறப்பாக வழிநடத்தி வருகின்றனர்.

இக்கிராமிய விழிப்பூட்டல் பிரிவின் செயற்பாடுகளின் ஊடாக அமைக்கப்பட்ட குழுக்கள் சமூக செயற்பாடாக தமது கிராமங்களின் அத்தியாவசியமான அடிப்படைத் தேவைகளை பெற்றுக்கொள்வதற்கு அயராது உழைத்து வருகின்றனர்.

குறிப்பாக பஸ் போக்குவரத்து ஒழுங்கு செய்தல், மின்சாரவசதி ஏற்படுத்துதல், பஸ்தரிப்பிடம் அமைத்தல், அடிப்படை நீர்வசதி, சுகாதார வசதி, பொதுக்கட்டிட தேவைகள், பாலர் பாடசாலை கட்டிடத் தேவைகள், மற்றும் சிரமதான நிகழ்வுகள், வேலைவாய்ப்பு பெற்றுக்கொடுத்தல், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக்கொடுத்தல் போன்ற சமூக காரியங்களை அந்தந்த கிராமங்களில் இயங்கும் இவ்விழிப்பூட்டல் குழுக்கள் இவை சார்ந்த திணைக்களங்கள் ஊடாக பெற்றுக்கொள்கின்றனர்.

இவர்களுக்கான சமூக அடிப்படை உரிமைகள் பற்றிய விழிப்பூட்டல் கருத்தமர்வுகள் மற்றும் கலை நிகழ்வுகள் ஊடாக பிரதேசவாரியாக வாழ்வுதயம் இவர்களுக்கு விழிப்புணர்வைக் கொடுத்து வருகின்றது.

இவைகள் மட்டும் அல்லாது பொருளாதார செயற்பாட்டை வலுப்படுத்தும் நோக்கில் இக்குழுக்களுக்கான சிறு சேமிப்புத்திட்டத்தை வாழ்வுதயம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இவ்வாறாக இவ்விழிப்பூட்டல் குழுக்கள் மிகவும் சிறப்பாக இயங்கி சமூகத்தில் தமது பலத்தில் நம்பிக்கை கொண்டவர்களாக உயிரூட்டம் பெற்று செயற்பட்டு வருவது வரவேற்கத்தக்க தொன்றாகும்.

# குடும்பக் குவலயம்

## காதலிக்க நேரமில்லையா?

காதல் என்ற சொற்பதம் சிலருக்கு விரும்பப்படாத சொற்பதமாக இருக்கலாம். "காதல்" என்பது ஓர் பருவமடைந்த ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே உள்ள உறவு மட்டும் என்று சிலர் தவறாக எண்ணக்கூடும். ஆனால் இங்கு நாம் திருமணம் முடித்த ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே உள்ள ஆழமான அன்புறவை காதல் எனப்பெயர்மாற்றி உங்களோடு உரையாடுகின்றோம்.
திருமணம் முடித்த ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் ஆழமாக அன்பு செய்யவேண்டும். காதலிக்க வேண்டும். சிலர் திருமணத்துக்கு முன்பே காதலித்து திருமண பந்தத்துள் நுழைந்திருக்கக்கூடும். இன்னும் சிலர் பெற்றோரால் ஒழுங்குபடுத்தப்பட்ட திருமண ஒப்பந்தத்தினூடு திருமண பந்தத்துள் நுழைந்திருக்கக்கூடும். யாராயிருந்தாலும் திருமணத்தின் பிற்பாடு ஒருவரையொருவர் ஆழமாக காதலிக்க வேண்டும். காதல் அல்லது அன்பு என்கிறபோது ஒருவரையொருவர் நன்கு விளங்கிக் கொள்வதும், அவரவரை அப்படியே ஏற்றுக்கொள்வதும் ஒருவருக்கொருவர் உற்றதுணையாக இருப்பதுமேயாகும்.
ஆனால் நம்முள் பலர் இவ் அன்புறவை தெளிவாக விளங்காமல் ஒருவருக்கொருவர் ஏமாற்று வேலைகளில் ஈடுபடுவதும் கோபத்தோடு சண்டையிடுவதும் வன்முறையான சொற்களைக் கையாள்வதும் திருமண பந்தத்துக்கு ஒவ்வாத காரணிகளில் ஈடுபடுவதும் கவலைக்குரிய விடயங்களாகும்.

### அன்புறவான காதலுக்கு சில வழிகள்

### கொஞ்ச நேரம் பேசலாமா?

கணவன் மனைவிக்கிடையே தொடர்பாடல் அல்லது உரையாடல் குறைகிறபோது அன்பு பற்றிய கேள்வி எழுகிறது. மிதமிஞ்சிய வேலை, நேரமின்மை, உளவியல் நெருக்கீடுகள், தூர இடங்களில் வேலை செய்தல், பிள்ளைகளின் குறுக்கீடு இப்படிப் பல காரணங்கள் கணவன் மனைவிக்கிடையே உரையாடலைக் குறைக்கக்கூடும். எது எப்படியிருப்பினும் கணவன் மனைவியரே நேரமொதுக்கி உங்களைப்பற்றி உங்கள் சந்தோஷம், கவலை, சோகங்கள், எதிர்பார்ப்புக்கள் பற்றி அடிக்கடி உரையாடுங்கள். உங்கள் முதல்தர நண்பர் உங்கள் கணவன், அல்லது மனைவியாக இருந்தால் உங்கள் வாழ்வு பிரகாசிக்கும்.

### திருமணமான பெண்களே!

வேலைக்குச் சென்று திரும்புகின்ற உங்கள் கணவரை இன்முகத்தோடு அழையுங்கள். சிலவேளை அவர் உடல்

சினேகமுடன்
விமல் (அ.ம.தி)



சோர்வோடோ, அல்லது அலுவலகத்தில் ஏதோ பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தோ அல்லது யாருடனோ வாக்குவாதப்பட்டோ வித்தியாசமான உணர்வுகளோடு திரும்பக்கூடும். அவரை அன்போடு ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் கணவர் வீடு திரும்பும்போது நீங்கள் வீட்டில் இல்லாமலோ அல்லது திரைப்படத்திலோ தொலைக்காட்சி நாடகத்திலோ அல்லது அவரது வருகைபற்றி அலட்சியமாக இருப்பின் ஆரோக்கியமற்ற உரையாடல்கள் ஆரம்பித்து உங்கள் உறவே கேள்விக்குறியாகிவிடும். சிலவேளை உங்கள் கணவர் தான் வீட்டுக்கு வரும்போது வீடு சுத்தமாக இருக்கவேண்டும் என்று நினைப்பவராக இருக்கக்கூடும். ஆகவே நீங்களும் வீடை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் உங்கள் துணைவரின் நன்மதிப்பை பெறமுடியும்.
கணவர் வந்து சேர்ந்ததும் உங்கள் முறைப்பாடுகளை அடுக்கிக் கொண்டே போகாதீர்கள். உங்கள் பிரச்சினைகளை பட்டியலிட்டு உங்களுக்கு மட்டும்தான் பிரச்சனைகள் உண்டு என்பதுபோல கொட்டித்தீர்க்காதீர்கள். இருவரும் ஆறுதலாக அமர்ந்து நல்ல சந்தர்ப்பத்தில் ஆரோக்கியமான உரையாடலினால் உங்கள் கருத்துக்களை உங்கள் கணவருக்கு சொல்லுங்கள்.

### திருமணமான ஆண்களே..!

நீங்கள் மட்டும்தான் உழைக்கிறீர்கள் அல்லது வேலை செய்கிறீர்கள் என்று தவறாக எண்ண வேண்டாம். உங்களைப்போல உங்கள் மனைவியும் 24 மணி நேரம் உழைத்துக்கொண்டேயிருக்கிறாள். சமைத்தல், பிள்ளைகளைக் கவனித்தல், வீடை ஒழுங்குபடுத்தல் என தொடர்ந்து தியாகத்தோடு உங்களுக்காக வேலை செய்துகொண்டேயிருக்கிறாள்.
அவள் உங்களுக்காக வேலை செய்வதற்காகக் கொண்டுவரப்பட்ட அடிமையோ, பிள்ளை பெறும் இயந்திரமோ அல்லது பாலியல் உணர்வுகளை தீர்க்கும் சடப்பொருளோ அல்ல. மாறாக அவளுக்கும் உணர்வுகள், ஆசைகள், விருப்பு வெறுப்புக்கள் நிறையவே உண்டு. அவள் உங்களுக்காக எத்தனையோ தியாகங்களை செய்துகொண்டேயிருக்கிறாள். அவளை மதித்து அன்போடு ஏற்றுக்கொள்ளுங்கள். அவள் செய்யும் ஒவ்வொன்றிலும் குற்றம் காண்பதை வழக்கமாக கொள்ளாதீர்கள். அவள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் இருக்கிற நன்மைத்தனங்களை எடுத்துச் சொல்லி அவளைப் பாராட்டுங்கள். நிச்சயமாக அவள் தொடர்ந்து நல்ல செயல்களைச் செய்து கொண்டேயிருப்பாள். அவளுடைய திறமைகளை கண்டுபிடித்து தட்டிக்கொடுங்கள். உங்கள் மனைவி தையல் வேலை, கைவினைப் பொருட்கள், அலங்காரப் பொருட்கள் சிற்றுண்டி வகைகளைச் செய்தல் போன்ற கைத்தொழில் செய்வதில் ஆர்வம் காட்டினால் அவளுக்கு ஊக்கம் காட்டுங்கள். உங்கள் மனைவி தனது திறமைகளை பயன்படுத்துவதோடு உங்கள் குடும்பத்திற்கான சிறு பகுதி வருவாயை பெருக்கக்கூடும். உங்கள் மனைவி எடுக்கும் ஒவ்வொரு முயற்சியினையும் பாராட்டுங்கள்.

## திருமணநாள் பிறந்த நாள் எப்போது?

உங்கள் வாழ்க்கைத் துணைவரின் பிறந்த நாளையோ அல்லது உங்கள் திருமண நாளையோ தயவுசெய்து மறக்க வேண்டாம். அன்றைய நாளில் சிறப்பாக பிறந்த நாளாக இருப்பின் உங்கள் துணைவருக்காக சிறப்பாக மன்றாடுங்கள். குடும்ப செபமாலையில் சிறப்பாக செபிப்பது அல்லது ஆலயத்தில் ஒன்றாக சேர்ந்து செபிப்பது வரவேற்கத்தக்கது. தூர இடங்களில் உங்கள் துணைவர் இருப்பின் பிறந்த நாள் மடல் அனுப்புவதோ அல்லது தொலைபேசியில் கதைப்பதோ ஆரோக்கியமானது. சிறிய அன்பளிப்புக்கள் கொடுப்பதும் வரவேற்கத்தக்கது.
உங்கள் திருமண நாளில் தயவுசெய்து இருவரும் ஒன்றாக ஆலயம் சென்று செபிப்பது, பங்குத்தந்தையிடம் ஆசீர் பெறுதல், செபமாலையை ஒன்றாகச் சேர்ந்து ஒப்புக்கொடுத்தல் ஆரோக்கியமானதாகும். பிள்ளைகள் தங்கள் பெற்றோரை அன்றைய நாளில் சந்தோஷப்படுத்த என்ன செய்யலாம் என்று சிந்திப்பது வரவேற்கத்தக்கது. ஆடம்பரமற்ற முறையில் தங்கள் பொருளாதார வருவாய்க்கு ஏற்ப எளிமையாக நினைவுகூருவது சிறிய அன்பளிப்புக்களை வழங்குவது ஆரோக்கியமானதாகும்.
இத்தகைய செயற்பாடுகள் ஆழமான காதலுறவுக்கு உங்களை அழைத்துச் செல்லும் என்பதில் ஐயமேயில்லை.

## சமைப்போம்! சுவைப்போம்!

தொகுத்துத் தருவது
- ஜே. றீதா, உடுவில், யாழ்ப்பாணம்.

### ரவா போளி



**தேவையான பொருட்கள்**

ரவ்வை - ¼ Kg
கடலைமாவு - ¼ Kg, சீனி - ¼ Kg
கஜு - 100g. பிளம்ஸ் - 100g
ஏலப்பொடி- 2 தே.க
அப்பச் சோடா - ½ தே.க
தேங்காய் எண்ணெய் - 1 போத்தல்
தண்ணீர் - அளவாக

**செய்முறை :**

ரவ்வை, கடலைமாவு என்பவற்றைப் பாத்திரத்தில் இட்டு கலந்து கொண்டபின் சீனி, கஜு, பிளம்ஸ், ஏலப்பொடி, அப்பச்சோடா என்பவற்றையிட்டு மீண்டும் நன்றாகக் கலந்து அளவிற்குத் தண்ணீர் விட்டு இட்டலிமாப் பதத்திற்குக் கரைத்து ½ மணி நேரத்திற்கு மூடி புளிக்க வைத்துக்கொள்ளவும்.
எண்ணெய்யைக் கொதிக்க வைத்து நன்றாக கொதித்தபின் மாக்கரைசலைக் கரண்டியில் அள்ளியெடுத்து எண்ணெயுள் வார்த்துப் பொன்னிறமாகப் பொரியவிட்டு எடுத்துக்கொள்ளவும். ஆறிய பின்பு பரிமாறவும்.

# கதையும் கருத்துக் களமும்

அருட்பணியாளர் செ. அன்புராசா (அ.ம.தி)



அத்தேனே என்ற அறிஞரிடம் இளையோர் பலர் சென்று, அறிவுரைகளைக் கேட்டு, நல்வாழ்வு பெற்று வந்தார்கள். இந்த அறிஞரை, அவமதிப்புக்குள்ளாக்க நினைத்த இளைஞன் ஒருவன் அவரிடத்தில் சென்று, சவால் ஒன்றை விடுத்தான். உள்ளங் கைக்குள் ஒரு வண்ணத்துப்பூச்சியை பொத்தி வைத்துக்கொண்டு, "நீங்கள் ஒரு பெரிய மேதை. என் உள்ளங்கைக்குள் இருக்கும் வண்ணத்துப்பூச்சி உயிரோடு உள்ளதா? அல்லது இறந்துவிட்டதா என்பதை, உங்கள் அறிவைப் பயன்படுத்திக் கூறுங்கள் பார்க்கலாம்!" எனக் கேட்டான். அத்தேனே, அவ் இளைஞனைப் பார்த்து, புன்னகை பூத்தார். "இறந்துவிட்டது என்றால், உயிரோடு இருக்கும் வண்ணத்துப் பூச்சியைக் காட்டுவான். உயிரோடு இருக்கிறது என்றால், உயிரோடு இருக்கும் வண்ணத்துப்பூச்சியை அழுத்தி நசித்துக் கொன்றுவிட்டு, இறந்துவிட்டது என்பான்!" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டார். பின் அவ் இளைஞனைப் பார்த்து, "இவ் வண்ணத்துப் பூச்சியின் வாழ்வும் சாவும் உன் கையில்தான் இருக்கிறது" என்றார். அறிஞரின் பதிலில் மலைத்துப்போன இளைஞன் கையை விட்டான். வண்ணத்துப் பூச்சி பறந்து போனது.
அறிஞர் அவனை நோக்கி, "நண்பா, வண்ணத்துப் பூச்சியின் வாழ்வும் சாவும் எப்படி உன் கையில் இருந்ததோ, அப்படியேதான், உன் வாழ்வின் உயர்வும், தாழ்வும் உன் கையில் உள்ளது" என்றார். தன் சிறுமையை உணர்ந்தவனாக அன்றே அவ் இளைஞன் அத்தேனேயின் சீடரானானாம்.
இளையோர் துடிப்புள்ளவர்கள், துணிவுள்ளவர்கள், ஆற்றல் மிக்கவர்கள், எதையும் சாதிக்கும் மனவலிமை படைத்தவர்கள், புதுமை விரும்பிகள், தாராள உள்ளம் கொண்டவர்கள், நல்லவர்கள், நாணயமானவர்கள் என்பனவே இளையோரைப் பற்றிச் சிந்திக்கின்றபோது, எம் எண்ணங்களில், எழுகின்ற நேர்மறையான சிந்தனைகள் ஆகும்.
இளையோரின் இத்தகைய குணநலன்களால்தான், "ஒளி படைத்த கண்ணினாய் வா வா வா, உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா" என்று இளையோரை வாழ்த்தி, சமுதாயத்திற்கு வரவேற்றுப் பாடினான் மகாகவி பாரதி. *ஒரு சமுதாயத்தின் தூண் போன்றவர்கள் இளையோர்* என்று இவர்களின் சக்தியில் நம்பிக்கை வைத்தார் தத்துவஞானி சோக்கிரட்டீஸ். தன்னிடம் 100 உருப்படியான இளைஞர்களைத் தந்தால், முழு இந்திய நாட்டையும் உருப்படியாக உருவாக்க முடியும் என இளையோரின் ஆற்றலை இனம் கண்டு புதிய, உயர்ந்த, சிறந்த சமுதாயத்தைப் படைக்க முடியும் என்பதில் உறுதி பூண்டார் விவேகானந்த சுவாமிகள். மறைந்த முன்னாள் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர், "இளையோர் திருச்சபையின் வசந்த காலம்" என்றார். இளையோர் நாளைய நம்பிக்கை நட்சத்திரங்கள் மட்டுமல்ல, இன்றைய சமுதாயத்தை இயக்கும் இதயத் துடிப்புக்கள் எனலாம்.
இத்தகைய ஆற்றலும் சக்தியும் கொண்ட இளையோர் எத்தகைய செயல்களில் இன்று ஈடுபடுகிறார்கள் என்றால் கவலை தரக்கூடிய விடயங்களும் விபரங்களுமே காத்திருக்கின்றன.
அதற்கு நம்முடைய பிரதேசங்களையும், நாம் வாழுகின்ற பகுதிகளையும் கவனத்திற்குக் எடுத்துக்கொள்ளலாம். மிகவும் குறைந்த விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையினர் ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்கள். இது பாராட்டப்பட வேண்டியதும், உற்சாகப்படுத்தப்பட வேண்டியதுமாகும். இவர்கள் தம் சமுதாயத்திற்காக வாழ்ந்துகொண்டும் வாழ்வு கொடுத்துக் கொண்டும் இருக்கிறார்கள்.
ஆனால் எம் இளையோரின் பெரும் எண்ணிக்கையினர் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. போதைப் பொருட்களைப் பாவித்தல், துன்புறுத்தல்கள், துஸ்பிரயோகங்கள், சேட்டைகள் புரிதல், தனி - பொது சொத்துக்களை நாசமாக்குதல், கட்டடங்களை உடைத்தல், வாகனங்களை எரித்தல், கல் எறிதல், கோஸ்டி மோதல்களில் ஈடுபடுதல், மிரட்டல்கள் விடுத்தல், களவு எடுத்தல், கொள்ளையடித்தல், கொலை செய்தல் போன்ற அடாவடித்தனங்களில் தாராளமாக இறங்கியிருப்பதைக் காணக் கூடியதாக இருக்கிறது. இவையெல்லாம் ஊனமுற்ற ஆளுமையின் வெளிப்பாடாகவே கொள்ளவேண்டியிருக்கிறது. இவற்றுக்குக் காரணம் என்னவென்றால், தீமையின் கிருமியை உள்ளே வைத்துக் கொண்டு உலகம் இருமிக்கொண்டிருக்கிறது என்றே எண்ணத் தோன்றுகிறது.
இப்படியான தீமைகளுக்கு சாதகமாக அமைந்தவை புது மழைக்குத் தோன்றிய புற்றீசல்கள் போன்ற போலியான, பொய்யான கொள்கைகளும், சினிமாவின் சில்லறைத் தனங்களுமே ஆகும்.
இன்று சுதந்திரம் என்ற பெயரில் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து, தம்மையும் அழித்து, பிறரையும் கெடுக்கிறார்கள். இதனைத்தான் "Wild Ass Freedom" என்கிறார்கள். இதனை யாம் "காட்டுக் கழுதைச் சுதந்திரம்" என மொழி பெயர்ப்புச் செய்திருக்கிறோம். எதையும் செய்யலாம் என்பது காட்டுக் கழுதைச் சுதந்திரம் வைத்திருக்கும் பொறி. இதில் சிக்குண்டு அழிந்து போனவர்கள் ஆயிரமாயிரம் எனினும் இதிலிருந்து இன்றைய நம் இளையோர் பாடம் கற்றுக்கொள்கிறார்களா?
இக்காலத்தில் இன்னுமொரு பண்பாடு உதயமாயிருக்கிறது. "Use And Throw" அல்லது "Crush After Use" Culture என்பதாகும். பாவித்துவிட்டு எறியும் பண்பாடு அல்லது பாவித்துவிட்டு மிதிக்கும் பண்பாடு எனச் சொல்லலாம். அதாவது எப்படி இன்றைய கொண்டாட்டங்களுக்கு 'பேப்பர் பிளேட்ஸ்' (Paper Plates), 'பிளாஸ்ரிக் கப்ஸ்' (Plastic Cups), 'நப் கின்ஸ்' (Napkins) எனப் பல வகைப்பட்ட பொருட்களை ஒரு தடவை பாவித்துவிட்டு எறிந்துவிடுகிறோமோ, அதேபோல மனிதர்களையும் நடத்துகிறோம். எதுவரை இவன்/ள் எமக்குப் பயன்பாடுள்ளவர்களாக, பிரயோசனம் உள்ளவர்களாக இருக்கிறார்களோ அதுவரை அவர்களுடன் உறவாயிருப்போம். அலுவல் முடிந்ததும் வேண்டாத பொருட்களையோ அல்லது கழிவுப் பொருட்களையோ தூக்கி வீசியெறிவதுபோல உறவுகளை உதறிவிடுகிறோம்.
ஓர் ஆங்கில எழுத்தாளர் 'பதினொராவது கட்டளை' (The Eleventh Commandment) என்ற நூலை எழுதியிருக்கிறார். நாம் வாழும் சமூகத்தை இந்நூலில் ஆய்வு செய்கிறார். விவிலியத்தில் கூறப்படும் 10 கட்டளைகள் மரபில் இக்காலத்து மக்கள் உருவாக்கியிருக்கும் 11வது கட்டளை பற்றி விபரிக்கிறார்.

1. ஒரே கடவுளை ஆராதிப்பாயாக
2. திருநாட்களை அனுசரிக்க மறவாதிருப்பாயாக
3. திருப்பெயரை வீணாகச் சொல்லாதிருப்பாயாக
4. பிதா மாதாவை போற்றி நடப்பாயாக
5. கொலை செய்யாதிருப்பாயாக
6. விபச்சாரம் செய்யாதிருப்பாயாக
7. களவு செய்யாதிருப்பாயாக
8. பொய் சொல்லாதிருப்பாயாக
9. பிறர் தாரத்தை விரும்பாதிருப்பாயாக
10. பிறர் உடமையை விரும்பாதிருப்பாயாக
11. எதிலும் அகப்படாதிருப்பாயாக

அதாவது எதையும் செய்யலாம், எப்படியும் வாழலாம் என்ற பொய்யான ஒரு வாழ்க்கைப் போக்கை உருவாக்கியிருக்கிறார்கள். எதிலும் அகப்பட்டுக்கொண்டால்தானே கெட்டவன், பொல்லாதவன், குற்றமிழைத்தவன், தவறிழைத்தவன் என்ற பெயரும், தண்டனையும் பெற வேண்டும்! எச்செயலையும் செய்து அகப்படாமல் இருந்தால் சரி என்ற நிலையில் பலர் வாழ்வதை ஒரு பொருட்டாகக்கூடக் கருதாமல் இருப்பதுதான் ஆச்சரியம்.
கண் போன போக்கிலும், கால் போன போக்கிலும் சென்ற இளம் சமுதாயத்தை "எழில் மிகு ஏத்தன்ஸ் நகரத்து ஏற்ற மிகு காளைகளே நாற்றமெடுக்கும் சமுதாயத்தை நறுமணமாக்கப் புறப்படுவீர்கள்!" என்று, சோக்கிரட்டீஸ் அழைப்பு விடுத்தார். இளமைப் பருவத்தில் உன்னைப் படைத்தவரை மறந்து விடாதே என்கிறது சபையுரையாளர் நூல். ஒரு தடவை பெரியவர் ஒருவர் பஸ் வண்டியில் தன் அருகே அமர்ந்திருந்த இளைஞன் ஒருவரைப் பார்த்து, "தம்பி ராசா நீங்க என்ன செய்து கொண்டிருக்கிறீங்க?" எனக் கேட்டார். அவனும், "வீட்டில் அப்பாவுக்கு உதவி ஒத்தாசையாக இருக்கிறன்" என மிக 'சீரியஸாக' பதில் சொன்னான். இந்த நூற்றாண்டில் இப்படி ஒரு இளைஞன் இருக்கிறானே என மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தார் பெரியவர். வாட்ட சாட்டமாக இருந்த அவனை ஏனைய இளையோருக்கு முன்னுதாரணமாகச் சொல்ல வேண்டுமே, என எண்ணிக் கொண்டு, மிகுந்த ஆர்வத்தோடு, "அப்பா என்ன செய்கிறார்" என அடுத்த கேள்வியைக் கேட்டார். அவன், "அப்பா வீட்டில் சும்மா இருக்கிறார்" என்றான் மிகவும் சாதாரணமாக. வீட்டில் வேலைவெட்டி இல்லாமல் சும்மா இருக்கும் இந்த வீட்டுக்கார அம்மா பரிதாபத்துக்குரியவள்!

*நண்பனே, நண்பியே சும்மா இருந்து சோம்பித் திரியாதே.*
*காட்டுச் சுதந்திரத்திலுன் காலத்தை இழக்காதே*
*பாவித்துவிட்டு எறியும் பண்பாட்டில் வளராதே*
*உறுதியாய் முன்னேறு நல்வாழ்வு உனதாகும்.*

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

**விறு விறுப்புத் தொடர் 23**

*எழுத்துருவாக்கம்*
*சொல்லின் செல்வர்*
*அமுது*

## சாந்தி நகர்

அன்பை அறுத்துக்கொண்டு தெருவீதியில் தள்ளிவிட அவர்கள் பஞ்சானார்கள். அணைத்த மார்பில் ஆணியடித்து அகற்றிவிட வீட்டுக்கு அவர்கள் நஞ்சானார்கள். வாழ்க்கையை நொந்து கொண்டே, மரங்களின் அடியில் சாய்ந்தார்கள். பட்டினியில், பசியில், துன்பத்தில், வேதனையில் கவலையில் தோய்ந்தார்கள். தசைத்திரியைக் கருகவிட்டுத் தள்ளாடும் உயிர் விளக்குகள் தொழுநோயாளர். இவர்கள் வாழ்க்கையின் இருட்டில் ஒளியேற்றப் புறப்பட்டார் அன்னை திரேசா. தித்தாக்கர் என்ற இடம் கல்கத்தாவுக்கு சிறிது தூரம் வெளியேயுள்ளது. தொழுநோயாளருக்கு அங்கே ஒரு கிராமத்தை அமைத்துவிடலாம் என்று, அன்னையின் மனதில் எண்ணங்கள் பூத்தன. ஆன் பிளாய்க் அம்மையார் அன்னைக்கு ஊன்றுகோல்போல உதவினார். நோய்க்கு வைத்தியம் செய்வதோடு அமையாது ஏதாவது தொழில் வாய்ப்பையும் அவர்கள் கண்டுகொள்ள வேண்டும். வெளியாரின் கையை எதிர்பாராமல், வருவாய் பெற்று வாழ வழிசெய்ய வேண்டும். செருப்புச் செய்தல், சப்பாத்துக்கள் பொருத்துதல், நெசவு செய்தல், தையல் தொழில் என்பன மூலம் தொழுநோயாளருக்கு வசந்த காலம் வரும்.

யாசகம் செய்வதே அவர்கள் தெருவின் திருவிழா. இதற்கு மூடுவிழாக் காணவேண்டிய கனவு பலித்தது. காலப்போக்கில் இந்தியாவின் எல்லாப் பக்கங்களிலுமிருந்து தொழுநோயாளர்களைக் கவர்ந்துகொண்டது தித்தாக்கர். பழமை என்ற செருப்புத் தூக்கி வீசப்பட்டது.

ஒரு ஆண்டு காலத்தில் 15000 வெளிநோயாளர் அங்கு மருந்து பெற்றுக்கொள்ள வந்தனர். இதனால் நோய் பரவுவதற்கு கால்கட்டுப் போடப்பட்டதாயிற்று. 1962இல் அன்னை திரேசாவின் அரும்பணியைக் கண்டு பரவசம் அடைந்த கூட்டுறவு மன்றத்தினர் 35 ஏக்கர் வளமுள்ள நிலத்தைக் கொடுத்தனர். இந்த இடம் கல்கத்தாவிலிருந்து 200 மைல் தொலைவிலுள்ளது. அதற்குச் சாந்தி நகரம் (The Place of Peace) என்று பெயர். அதனை *அமைதியின் அரங்கம்* என நாம் இனி அழைப்போம். 400 குடும்பங்கள் அங்கே ஒன்றாய் வாழ்ந்தனர். ஒன்றாய் வேலை செய்தனர். முதலில் வந்தவர்கள் செங்கற்கள் அறுப்பதைக் கற்று அதனையே தொழிலாகச் செய்து வந்தனர். பின்னர் வெள்ளையடித்த தட்டிகளைப் பொருத்தி இல்லங்களாக்கினர். புதிதாக வந்தவர்களுக்கு அந்த இல்லங்கள் மங்கள விளக்காயின. அங்கேயே நெல் பயிரிட்டனர். கூடைகள் பின்னி விற்பனை செய்தனர். ஆடுமாடுகளை வளர்த்துப் பாற்பண்ணைகள் அமைத்தனர். அச்சுக்கூடம் ஒன்றும் அங்கு கண் திறந்தது. சின்ன வைத்தியசாலை ஒன்று மாசற்ற வனப்புடன் கண்ணைக் கவர்ந்தது. முற்றிய நோயாளர் அங்கே தங்கினர். வெளிநோயாளர் பரிசோதனை செய்தபின் மருந்துகள் எடுத்துச் சென்றனர். அன்புப் பணியாளர் சபைக் கன்னியர்கள் வெண்புறாக்களாகப் பறந்தனர். சாந்திநகரில் பிறக்கும் குழந்தைகளுக்கு நோயின் விதை தோன்றாதவாறு கவனித்தனர். சமுதாயத்தின் முன்னேற்றப்படிகளில் அவர்கள் கைவீசிவர அன்னையவர்கள் செய்த பணி காலமும், காற்றும், மழையும், கடலும் அழிக்க முடியாதவை.

## பத்து வயது

கடந்த பத்து வருடங்களாக கல்கத்தாவுக்கு ஒளி கொடுத்தவை மூன்று. ஒன்று சூரியன், மற்றது சந்திரன், இன்னொன்று அன்னை திரேசா. நூறு சரித்திரப் புத்தகங்கள் ஏற்படுத்துகிற மனக்கிளர்ச்சியை குனிந்த தலைநிமிராமல் அன்னை சொல்லுகின்ற ஒரு செபம் ஏற்படுத்தி விடுகிறது. குடை பிடித்தாலும், அடைமழை நனைத்து விடுகிறது. அன்னையின் தாவாரங்களில் தங்கியவர்கள் அன்பினால் ஒரு பக்கம் நனைந்தே போனார்கள்.



1958இல் அன்புப் பணியாளர் சபைக்கு வயது பத்து. கல்கத்தாவின் ஆன்மாவில் அன்னை திரேசாவின் பணிகள் அங்கீகாரம் பெற்று மக்கள் உள்ளத்திலும் அவருக்கு ஆசனம் கிடைத்தது. நூறு கன்னியர்களுக்கு மேல் சேர்ந்துகொண்டதால் சபை வீறுகொண்டது. பல பக்கங்களிலிருந்தும் தொண்டு செய்ய வருமாறு இருகையையும் நீட்டி அழைத்தார்கள். தனது சகோதரிகள் இந்தியாவின் ஏனைய இடங்களுக்கும் தொண்டு செய்ய வேண்டுமென்ற அவா அன்னை திரேசாவின் உள்ளத்தில் அலையடித்தது. அயல் மாகாணங்களிலுள்ள சேரிகளில் படிந்திருக்கும் வறுமை அழுக்கைக் கொஞ்சம் சலவை செய்ய வேண்டுமென விரும்பினார். கல்கத்தாவின் பேராயர் பேரியர், பத்து ஆண்டுகளுக்கு அன்புப் பணியாளர் சபை அங்கேயே ஊழியம் புரிய வேண்டுமென்பதில் உறுதியாயிருந்தார். 1959இல் அன்னையவர்கள் சில சகோதரிகளையும் உடன்கொண்டு இராஞ்சி (Ranchi) என்ற பீகார் மாகாணத்தின் சேரிப்புறத்துக்குப் பயணமானார்.

சகோதரிகளின் துறவு வாழ்வின் பாதையிலும் ஒரு சில மாற்றங்கள் புகுந்தன. அவர்களுடைய இரண்டு சேலைகள், ஒருசோடிச் செருப்பு, சின்ன மரச்சிலுவை, வாளி என்பவற்றோடு, தகரத்தாலான ஒரு பீங்கானும், கரண்டியும் வறியவர்கள் சார்பில் சேர்ந்துகொண்டன. பணிபுரியச் செல்லும் வேளையில் இருவர் ஒன்றாகச் செல்வது வழக்கம். அவர்களுடைய தோளில் பசுமை நிறமான பையொன்று தொங்கும். அதனுள்ளே பழைய கண்ணாடிப் போத்தல் ஒன்றில் பச்சைத் தண்ணீர் இருக்கும். அந்தப் போத்தல்கள் சமையல் எண்ணெய் வந்த வெற்றுப் போத்தல்கள். கடைகளில் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். உணவுப் பொருட்கள் கொடுத்தால் என்ன செய்யவேண்டும் என்பதையிட்டு அன்னை அவர்களுக்குத் தெளிவான விளக்கம் கொடுத்துள்ளார். ஏழைகள் ஒரு கோப்பைத் தேனீரை அன்பாகக் கொடுக்க ஆசைப்படுகிறார்கள். இன்னும் சிலர் இனிப்புப் பண்டம் ஒன்றையும் கடையில் வேண்டி ஆவலுடன் வைத்திருப்பார்கள். கொஞ்சம் வரிசை உயர்ந்தோர் சகோதரிமாரை அழைத்து உபசரிக்க விரும்புவார்கள். இவற்றுக்கு இலகுவான விடை "நாங்கள் வறியவர்களிடமோ, தனவந்தரிடமோ எந்த உபசரிப்பையும் ஏற்றுக்கொள்வது கிடையாது" என்பதே! இதனால் எவருக்கும் மனத்தாக்கம் உண்டாக இடமில்லை. வறியவர்களைப் போல வாழவும் இது வாய்ப்பானது. பணத்தைப் பெற்றுக் கொள்வதிலும் அன்னை மிகவும் கண்டிப்பானவர். வறியவர்களுக்கு உணவு, உடை, மருந்துகள், தங்குமிடம்.... இப்படி நூற்றுக்கணக்கான தேவைகள் உண்டு. இவற்றுக்குப் பணம் தேவை என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் சிலர் பணத்தைப் பலவழிகளாலும் திரட்டி, எங்களுக்கு அனுப்பி வைப்பதில் திருப்தியடைகிறார்கள்.

கடந்த 10 வருடங்களாக இந்தியாவிலுள்ள மாணவர்கள், சேரிகளிலுள்ள பிள்ளைகளுக்குப் பாண் அனுப்பி வைக்கிறார்கள். இங்கிலாந்துப் பிள்ளைகள் பால் அனுப்புகிறார்கள்.

*(கங்கை தொடர்ந்து பாயும்)*

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் பகுதி இல.31

இம்மாதத்திற்கான எமது வினாக்கள் ஒக்டோபர் மாத மன்னாவிலிருந்து வருகிறது.

1. "மதச் சுதந்திரம் இல்லாமல் நாங்கள் வேதகலாபனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றோம். எங்களை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்" இது திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்களுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோள் யாரால் விடுக்கப்பட்டது?
2. இந்திய நாட்டில் இசைத்துறையில் முதல்முதலாக ஒரு அருட்சகோதரி (Ph..D) பி.எச்.டி பட்டத்தைப் பெற்றுள்ளார் அவர் பெயர் என்ன?
3. வங்காலைப் பங்கு தந்த செல்வம் 75வது அகவை காணும் அருட்தந்தை அ. விக்டர் குரூஸ் குருவாக எங்கு? எப்போது? திருநிலைப்படுத்தப்பட்டார்?
4. "நான் உங்களுக்குப் புதியதோர் கட்டளையைக் கொடுக்கின்றேன் நீங்கள் ஒருவருக்கு ஒருவர் அன்புசெய்யுங்கள்" கிறிஸ்துவின் இந்த வாக்கியம் யோவான் நற்செய்தியில் எங்கு காணப்படுகிறது?
5. கத்தோலிக்க தமிழ் ஊடகத்துறையில் நீண்டகால வரலாற்றைக் கொண்டது யாழ் மறைமாவட்டத்திலிருந்து வெளியாகும் 'பாதுகாவலன்' பத்திரிகையாகும். இது எத்தனை வருடங்களாக வெளிவருகின்றது?
6. மறையாசிரியர்களுக்கான டிப்ளோமா தேர்வின் மூன்று பிரிவுகளுக்கும் மொத்தமாக 306 மறையாசிரியர்கள் விண்ணப்பித்து இருக்கின்றனர். இப் பரீட்சை எப்போது நடைபெறும்?
7. கிறீஸ்தவத்தை இனங்காட்டும் அடையாளங்களாகத் திகழ வேண்டியவை?
அ) வானளாவ உயர்ந்து நிற்கும் ஆலயங்கள்
ஆ) தெருவோரங்களில் எழுப்பப்படும் புனிதர்களின் சுருபங்கள்
இ) உருக்கமான பக்தி முயற்சிகளும் வழிபாட்டு முறைகளும்
ஈ) திருச்சபையின் கட்டுக்குலையாத அமைப்பு முறைகளும் ஆகும்.
இக்கூற்று சரியா? தவறா?
8. பதினேழு வயதே நிரம்பிய ஹில்லறி பஸ்ரீனா 17 கவிதைகள் கொண்ட கவிதை நூல் ஒன்றை 25.07.2005ல் வெளியிட்டுள்ளார். அக்கவிதை நூலின் பெயர் என்ன?
9. சலேசியன் குருக்கள் மன்னார் மறைமாவட்டத்தில் கால்பதித்து ஒருவருடம் பூர்த்தியாகின்றது. இவர்களின் பணி முருங்கன் பங்கிலே பரந்து விரிகின்றது. சலேசியன் குருக்கள் சபையின் ஸ்தாபகர் யார்?
10. இயேசு சபையின் ஸ்தாபகரான புனித இஞ்ஞாசியாரைப்பற்றிய கவிதை நூல் "இன்னாசியார் காவியம்" கிழக்கிலங்கையில் படைக்கப்பட்டுள்ளது. இதைப் படைத்தவர் யார்?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 29இற்கு 29 பேர் விடையனுப்பியிருந்தார்கள். அவர்களில் அனைத்துக்கும் சரியான விடையளித்து பரிசுக்குரியவராக தெரிவுசெய்யப்படுபவர்,

**மரின், 34/A, கற்குழி, வவுனியா**

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 34 இதற்கான சரியான விடைகளை அனுப்பியவர்களில் 10 அதிஸ்ரசாலிகள்

1. அ. பெ. டயஸி, இல. 851, ஆஸ்பத்திரிவீதி, மன்னார்.
2. ப. யசோதினி, எழுத்தூர், மன்னார்.
3. க. பொலின், 13 வர்த்தகம், மன்.சவே.பெண்.கல்லூரி, மன்னார்.
4. எஸ். லிபோண்சா பிகிறாடோ, வேளாங்கன்னி வீதி, பள்ளிமுனை.
5. திருமதி. அன்ரன் பொன்ராஜ், ஜெயந்தி, சுவிசர்லாண்ட்.
6. ஆர். மிதுளா டலிமா, 3ம் வட்டாரம், வங்காலை.
7. ஏ. பிரியங்கா குரூஸ், 5ம் வட்டாரம், வங்காலை.
8. பீ. கொன்சலா, இல - 01, பத்திரிசியார் வீதி, யாழ்ப்பாணம்.
9. செல்வி. கயசிந் இனசன்ர் றோசி, தோமஸ்புரி, வங்காலை.
10. மு. புவனமோகன் (நித்தியன்), நெடுங்கண்டல், அடம்பன்.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

### 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 08 - 03 - 1950



உதிர்வு 04 - 12 - 2002

**பெ. நீக்கிலாப்பிள்ளை (அரியம்)**
**சூரியகட்டைக்காடு**

எங்கள் உணர்வுக்குள் உறைந்து இருக்கும் எம் தந்தையே! ஏணியாய் இருந்து எம்மை ஏற்றத்தில் ஏற்றிவிட்டு எங்கப்பா சென்றீர்கள்? பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் திருவுருவாய் அமைதியின் உறைவிடமாய் நேர்மையின் சிகரமாய் குடும்பத்தின் ஒளி விளக்காய் வாழ்வின் வழிகாட்டியாய் அனைவருக்கும் உத்தமராய் எமை வளர்த்தெடுத்து நல்வழி காட்டிய எம் அருமைத் தந்தையே நீங்கள் எங்களைவிட்டு பிரிந்து மூன்று ஆண்டுகள் அல்ல எத்தனை ஆண்டுகள் சென்றாலும் மறையாது உங்கள் நினைவுகள் எங்களை விட்டு என்றும் மறையாது.
இவரின் பிரிவால் துயருறும்.
*அன்பு மனைவி,பிள்ளைகள்,உற்றார், உறவினர்கள்.*

### 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 30 - 08 - 1961



உதிர்வு 02 - 12 - 2003

**திரு.பி.ஸ். நீக்லஸ் லெம்பேட்**
**(ஜீவா - வங்காலை)**

அன்பொழுகும் உன் வதனம் என்று இனிக் காண்போம் ஐயா, எங்கள் நெஞ்சத்தின் தங்க விளக்கே, விண்ணகத் தந்தையுடன் இணைந்தாயே, நீர் மறைந்து ஈராண்டு ஆனாலும் நீங்கா உம் நினைவுகள் எம் நெஞ்சில் நிழலாடுதே!
எம் தந்தையே, நீரில்லா வாழ்வில் சிறப்பேது? எம் செயல்களிலும் வெற்றி கிட்டாதே. இறையருள் வேண்டி நிற்கும் எமக்கு இறையாசி வேண்டியளிப்பாய். எம்மவர்க்கு நீர் புரிந்த நன்மைகள் எம்மைவிட்டு நீங்கா நிற்கின்றனவே.
*இவரின் பிரிவால் துயருறும், அன்பு மனைவி, தாய், பிள்ளைகள் சகோதர சகோதரிகள், மைத்துனர், மைத்துனிமார், உற்றார் உறவினர், நண்பர்கள்*

### 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 01 - 09 - 1987



உதிர்வு 16 - 12 - 2003

**செல்வி. பிரின்சிஸ் மெக்ரலின்**
**(எழுத்தூர், மன்னார்)**

எங்கள் அருமைச் செல்லமே - எம்மை மீளாத் துயரில் ஆழ்த்திவிட்டு - நீ மறைந்ததென் மாயமென்ன? விதி உன்னோடு விளையாடி எம்மோடு இருந்து உன்னை பிரித்ததேனோ? நீ சொல்லாமல் பிரிந்திட்ட சோகத்தை பல்லாண்டு சென்றாலும் மறப்போமோ? புன்னகை சிந்திட்ட உம் வதனமும் அன்புடன் பேசிட்ட வார்த்தைகளும் இன்பமாய் இருந்திட்ட நாட்களும் என்றுமே எம்மைவிட்டு நீங்கிடுமோ ஈராண்டுகளானால் என்ன? இருபது ஆண்டுகள் சென்றாலும் உன்னை மறவோமோ? உன் பிரிவால் கல்லாகி நிற்கின்றோம் கண்ணீருடன். விண்ணக வாழ்வு பெற வேண்டுகின்றோம்.
*என்றும் பிரிவில் துயருறும்*
*அன்பு அம்மா, அப்பா, சகோதரங்கள்.*

### 17ம் ஆண்டு நினைவு

மலர்வு 12 - 09 - 1969



உதிர்வு 22 - 12 - 1988

**A. ஜோன்சன் (சிறில்)**
**(கட்டுக்காரன் குடியிருப்பு - தலைமன்னார்)**

அன்புத் தம்பி!
நீ மரணித்து 17 ஆண்டுகள் சென்றுவிட்ட போதிலும் நேற்றைய நிகழ்வாகவே எம் முன் நிற்குதப்பா. உன் அன்பு அம்மா, சகோதரங்கள் உற்றார் நண்பர்கள் அன்று அழுத கண்ணீர் இன்றும் தொடருதப்பா.
நீ மறைந்த அன்று தொடக்கம் இன்று வரை எங்கள் வாழ்வு இருண்டதாய் இருக்குதப்பா! மரணங்கள் மறக்கப்பட வேண்டியவை. ஆனால் உன் மறைவோ! விதையாய் வீழ்ந்து விருட்சமாய் நிற்குதப்பா!!
*என்றும் உன் ஆத்ம சாந்திக்காய், உன் அன்பு அம்மா சகோதரங்கள் உறவுகள், நண்பர்கள்.*
*தகவல்: ஜெ. சாலட்*

### மன்னார் மாதோட்டத் தமிழ் அறிஞர்களின் தமிழ்ப் பணிகள்

# கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்களின் தமிழ்ப் பணிகள்

மு. சுந்தரம் பாண்டியன், நறுவிலிக்குளம், மன்னார்.

இலங்கை நாட்டில் மன்னார் மாவட்டம் அதிகம் கல்வி வளர்ச்சி பெற்றிடாத மாவட்டங்களில் ஒன்றாகும். எனினும் மன்னார் மாதோட்டம் என வரலாற்று நூல்களில் கூறப்படுமளவுக்கு பல பெருமைகளை தன்னகத்தே கொண்டமைந்த பிரதேசமாகும்.

கி.பி. 1700 ஆண்டளவில் தோன்றிய லோறஞ்சுப்பிள்ளை புலவர்தான் முதல் கல்வி அறிவு பெற்ற பாடுந்திறன்கொண்ட புலவராக அறியப்படுகின்றார். அவரைத் தொடர்ந்து, இன்றளவும் பல சிறந்த தமிழ்ப் புலவர்கள் தோன்றி, காலத்துக்குக் காலம் தமிழ்ப் பணியாற்றி, மறைந்தும், வாழ்ந்தும் வருகின்றனர். அந்த வரிசையில் பாரம்பரிய தமிழ் மருத்துவ, தமிழ்ப் புலவர் பரம்பரையில் பிறந்தவர்தான் கவிஞர் செபமாலை மொத்தம் போல் (1924 - 1982) அவர்கள்.

மன்னார் மாதோட்டத்தின் மண் வாசனையைத் தனது இலக்கியப் பணியினால் வளம்படுத்திய, வலுப்படுத்திய புலவர் இவர். பத்துத் தலைமுறைகளுக்கு மேலாக மருத்துவத் துறையில் சிறந்து விளங்கிய குடும்பத்தில் பிறந்து, தமிழ் மருத்துவத்தில் சிறந்த மருத்துவர் என்று மக்களாலும், மக்கள் அரசாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மருத்துவர். பிஞ்சு உள்ளங்களிலே கொஞ்சி விளையாடும் அழகு தமிழாலே, எண்ணையும், எழுத்தையும் இன்னும் பல நீதி அறநூல்களையும் போதித்து, இளஞ் சிறார்களின் நெஞ்சங்களில் பதியச் செய்து, பல கல்வியாளர்களை, சிந்தனையாளர்களை உருவாக்கிய பாடசாலை ஆசிரியர், அதிபர். தாம் பெற்ற அனுபவத்தாலும், அறிவாலும், அறிவு முதிர்ச்சியாலும் பாடசாலை அதிபர் பதவியை அலங்கரித்தவர்.

எல்லைப்படுத்தப்பட்ட பாடசாலைக்கு வெளியே எத்தனையோ மாணவர்கள் அன்னாருக்குச் சீடர்கள். இவர்களின் பெயர்ப் பட்டியலை அறிந்துகொள்ள முடியாததற்கு காரணம் வரவு இடாப்பு வைத்து பெயர்கள் பதியப்படவில்லை என்பதாகும். இலங்கையில் பல தமிழ் அறிஞர்கள் அன்னாருடன் நேரடியாகவும், கடிதங்கள் மூலமாகவும் கேட்டுத் தெரிந்துகொண்ட, விவாதித்த பல விடயங்களை அறிந்து பெருமையடைந்தது தமிழ் உலகம். அதன் மூலமாகத்தான் கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்கள் ஓர் சிந்தனையாளர், ஆராய்ச்சியாளர் என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.

மன்னார் மாதோட்டம் வாழையடி வாழையாக வரலாறு காணாத காலந்தொட்டு, தமிழ் மக்கள் வாழ்ந்த பிரதேசம். இக்கருத்தினை உறுதியோடும், ஆதாரபூர்வமாகவும் ஆய்வுசெய்து, ஈழத்தின் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களுடன் சரிநிகர் சமனாக வைத்து, மன்னார் மாதோட்டத்தின் சிறப்பை, தனித்துவத்தை எடுத்துக்காட்டக் கூடிய திறனுடைய ஒருவர் இப்பிரதேசத்திலிருந்து இதுவரை உருவாகவில்லையே என்று வேதனைப்பட்டுக்கொள்வார் கவிஞர் அவர்கள். இச்சர்ந்தர்ப்பங்களிலே, தான் ஆராய்ந்து, சிந்தித்து கண்டறிந்த உண்மைகள் பலவற்றை ஆதாரபூர்வமாகக் கூறும்போது, ஆச்சரியத்தோடு கேட்டுக்கொண்டிருந்த காலத்தின் பாதச்சுவடுகள் பசுமையாகவே உள்ளன. அவற்றுள் ஒரு சிலவற்றை எடுத்து நோக்குவது அன்னாரின் ஆய்வுத்திறனை அளந்து அறிந்துகொள்ளக்கூடிய அளவுகோலாகும்.

மன்னார் மாதோட்டம் வரலாற்றுச் சிறப்புடையது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மை. திருக்கேதீஸ்வரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தவன் இராவணனின் மனைவி மண்டோதரியின் தந்தை கேதுமன்னன். கேதீசுவரம் என்னும் பெயர் வரக் காரணம் இம்மன்னனே. கேதுமன்னன் திராவிட இனத்தவன். இலங்கையின் ஆதிக்குடி மக்களாகிய இயக்கர்களும், நாகர்களும் திராவிடர்களே. நாகன், பூதன், தேவன் என்ற ஆண்பாற் பெயர்கள் தமிழ் மக்களுக்குரியன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்நாட்டை முடியுடை மூவேந்தர் ஆட்சிபுரிந்த காலத்தில் ஈழத்துப் பூதன்தேவனார் என்ற தமிழ்ப்புலவர் தான் இயற்றிய செய்யுட்களை மதுரை தமிழ்ச்சங்கத்தில் பாண்டியன் முன்னிலையில் அரங்கேற்றினார்.



கவிஞர் மொத்தம் போல்

அச்செய்யுட்கள் அகநானூறு, நற்றிணை, குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளன. அப்புலவர் ஈழநாட்டைச் சேர்ந்தவர் என்பது அறிஞர்களின் கருத்தாகும். ஆனால் கவிஞர் நிச்சயமாக அப்புலவர் மாதோட்டத்தைச் சேர்ந்தவர் என ஆதாரங்களுடன் நிறுவியுள்ளார்.

அதாவது இக்காலம் வரை மாதோட்டத்தில் நாகக்குளம், நாகத்தாழ்வு, பூதன்குடா என்னும் பெயர்கள் இடப்பெயர்களாக அமைந்துள்ளன. எனவே, மூவேந்தர்கால ஈழத்துப் பூதன்தேவனார் இப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்தான் என்பதில் இனிமேலும் சந்தேகங்கொள்ள வேண்டியதில்லை.

பூதன்குடா என்ற பெயர் ஓர் இடப்பெயராக வழங்கப்பட்டு வருகின்றது. இவ்விடத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது புதுக்கமம் என்னும் கிராமம். இங்கு 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் குருகுலநாட்டுத் தேவர் என்னும் பெயர் கொண்ட பெரும்புலவர். இவர் மன்னார் மாதோட்ட முதற்கல்வியாளர் லோறஞ்சுப்பிள்ளைப் புலவரின் மாணாக்கர். இவர் தென்பாங்கு என்றிக்கு எம்பரதோர், திருச்செல்வர் மூவிராக்கதையை நாடகப் பாவாகப் பாடிய பெருமைக்குரியவரும், கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்களின் மூதாதையருமாவார். பிறப்பால் குருகுலத்தைச் சேர்ந்தவர். கண்டி இராச்சியத்தை ஆட்சிபுரிந்த நாயக்க மன்னனால் எதிர்மன்னசிங்கம் என்னும் பட்டம் வழங்கி சிறப்பிக்கப்பட்டவர். குருகுலநாட்டுத் தேவர் எனச் சிறப்பித்துப் போற்றப்பட்டவர். தேவன் என்னும் பெயர் மரியாதைப் பன்மை. அர் விகுதி பெற்று, தேவர் ஆகியது. எனவே ஆதித்தமிழ்க் குடிகளின் பெயர் தொடர்ச்சியாக வழங்கி வருவதிலிருந்தே தொன்றுதொட்டு தமிழ் மக்கள் மன்னார் மாதோட்டத்தில் வாழ்ந்து வருவதற்கு ஆதாரங்களாகின்றன.

மாதோட்டம் என்னும் பெயரை எடுத்து நோக்கும்போது, இது மன்னார்த்தீவு தவிர்ந்த பிரதேசமாகும். இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே இப்பெயர் வழங்கப்பட்டு வந்துள்ளது. முத்தொள்ளாயிரம், தேவாரத்திருப்பதிகம் போன்றவைகள் இதற்கு சான்று பகர்கின்றன.

அக்காலத்தில் மாதோட்டத்தில் தமிழர்கள் முடியோடும், கொடியோடும், சீரோடும், சிறப்போடும் வாழ்ந்து வந்தனர். மாதோட்டம் வன்னிப் பெருநிலப்பரப்பின் ஒரு பகுதியாகும். வன்னிப் பிரதேசம் அடர்ந்த காடுகளைக் கொண்டது. இப்பெருங்காட்டின் மேற்குப் பிரதேசம் பெரும் பரப்பு வெட்டவெளியாக அமைந்து காணப்பட்டது. இதுவே மாதோட்டம் என்னும் பெயர்வரக் காரணமாயிற்று. மா - பெரிய, தொட்டம் - தோட்டம், குறில் நெடிலாகி, தொட்டம் என்பது தோட்டமாகி, மாதோட்டம் என வழங்கலாயிற்று. தொட்டம் என்ற சொல்லாட்சி மிகப்பழமை வாய்ந்தது. இது சங்க காலத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. இந்நாள் வரைக்கும் மன்னார் மாதோட்டப்பகுதி மக்கள் இச்சொல்லை வழங்கி வருகின்றனர்.

நெல் விதைக்கின்ற காலத்தில், மழை அதிகமாகப் பெய்வதினாலோ, அல்லது வேறு எக்காரணங்களினாலோ பயிர்கள் அழிந்து அடர்த்தியில்லாமல் ஐதாக, இடைவெளி கூடுதலாகக் காணப்படும். வெறுமனே காணப்படும் இடைவெளிகள் தொட்டம் என்ற பெயர் பெறும். தொட்டத்திற்கு பயிர்களை நடும்போது, தொட்டம் போடுதல், தொட்டம் நிரப்புதல் என்று கூறப்படும். எனவே வெளியான இடம் தொட்டம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. இதன்படியே அடர்ந்த வன்னிப் பிரதேசக் காட்டின் மேற்குப் பாகத்தில் மாதொட்டமாகக் காடுகள் இன்றிக் காணப்பட்ட இடப்பகுதியே மாதொட்டம் ஸ்ரீ மாதோட்டம் எனப்பெயர் பெற்றது. என்ற கருத்தினை எடுத்து விளக்கியவர் எங்கள் குரு மதிப்புக்குரிய கவிஞர் போல் மொத்தம் அவர்கள்.

பாலாவித் தீர்த்தத்திற்கு அண்மையில்தான் மாந்தைத் துறைமுகம் அமைந்திருந்தது என்கிறது பழைய இலக்கிய நூல்கள். முத்தொள்ளாயிரத்தில் மாந்தை பற்றிய சிறப்பு விதந்துரைக்கப்பட்டுள்ளது. மாதோட்டம், மாந்தை, பாலாவி பற்றிய பொலிவும் சிறப்பும் தேவார திருப்பதிகங்கள் இரண்டிலும் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளன. ஆனபோதிலும் தற்காலத்தில் மாந்தை, பாலாவி எனப்பெயர் வழங்கப்படும் இடங்களிலோ, அல்லது அண்மித்த இடங்களிலோ கப்பல்கள் தரித்து நிற்கவோ, பிரயாணம் செய்யவோ கூடிய ஆழமான கடல் துறைமுகம் காணப்படவில்லை. இதனைத் தம் பக்கச்சார்பு வாதமாகக் கொண்டு ஆய்வாளர் சிலர் பாலாவி என்று கூறப்பட்டதானது புத்தளத்துக்கு அண்மையிலுள்ளதென்றும், தேவாரத்தில் பாடப்பட்டுள்ள திருத்தலமான திருக்கேதீஸ்வரமும் முன்னேஸ்வரம் அமைந்துள்ள பிரதேசத்தில் இருந்திருக்கலாமென்றும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இக்கருத்துக்களை கவிஞர் அவர்கள் தீவிரமாக மறுத்துரைத்துள்ளார். அதாவது பாலாவி, மாந்தை, திருக்கேதீஸ்வரம் ஆகிய மூன்று இடங்களும் இன்று மாதோட்டத்தில் அமைந்துள்ளனவே. அக்காலத்தில் பாலாவி என்னும் ஆறு, மாந்தைக்கடலில சங்கமமாகியது. இவ்விடம் பாலாவித் தீர்த்தம் எனப்பட்டது. இதன் கரையில் திருக்கேதீஸ்வரம் புனிதத்தலம் அமைந்து கம்பீரக் காட்சியளித்தது. பாலாவியாற்றின் கழிமுகத்தில் சிறப்பு வாய்ந்த மாந்தைத் துறைமுகம் பேரோடும், புகழோடும் சிறப்புற்றிருந்தது. காலகதியில் பாலாவியாற்றின் திசைமாறி அருவியாறு என்னும் பெயருடன் முத்தரிப்புத்துறையில் சங்கமமாகின்றது. பாலாவி ஆறுதான் அருவி ஆறாகும் என்பதில் எவ்வித கருத்து வேறுபாடுகளும் இருக்க முடியாது. பாலாவித் தீர்த்தத்திலிருந்து கிழக்குத் திசையாக ஓர் பள்ளத்தாக்கு அமைப்பில் நிலவுருவம் தற்போதும் காணப்படுகின்றது. இவ்வமைப்பு கட்டுக்கரைக் குளத்தினூடாகச் செல்கின்றது. பிற்காலத்தில் அக்கிரபோதி மன்னன் கட்டுக்கரைக்குளம் என்றழைக்கப்படும் இராட்சத குளத்தை கட்டிய காலத்தில் பாலாவி ஆறு செயற்கையாக திசைதிருப்பப்பட்டு, அருவி ஆறு என்ற பெயருடன் விடப்பட்டிருக்கலாம்.

பொதுவாக அருவி என்பது சிற்றோடைகளையே குறிக்கும். இந்நதி கடம்ப நதி என்ற வரலாற்றுப் பெயரையும் கொண்டது. இவ்வாறு பாலாவியாறு கடலுடன் சங்கமமாகியதற்கு அணித்தாகவே மாந்தை பெருந்துறைப்பட்டினமாக விளங்கியது. இவைபற்றி தேவாரத் திருப்பதிகத்தில் பாடப்பட்டுள்ளது என்பது கவிஞர் அவர்களின் உறுதியான, தர்க்கரீதியான வாதமாகும். இவற்றில் பல உண்மைகள் சரித்திரச் சான்றுக்ள பொதிந்துள்ளதை அறிஞர் உலகு நன்கறியும்.

இவைபோன்ற சிந்தனையுள்ள பல விடயங்களை ஓர் சரித்திர ஆராய்சியாளராக ஆதாரத்துடன் உறுதிபடக் கூறுவார் கவிஞர். இவை தவிர அன்னார் கூறியுள்ள விடயங்கள் பலவாகும். அவற்றில் வரலாறு சார்ந்த முரஞ்சியூர் பட்டித்தோட்டம், கோட்டைக்காடு என்பன பற்றிய தமிழ் சார்ந்த விடயங்களும் அடங்கும். இன்னும் தமிழ் மொழியின் சொல்லாட்சி ஆய்வுகள் சம்பந்தமான விடயங்களை எடுத்து விளக்குவார். தீர்க்கமான சிந்தனையோட்டமுள்ள ஒப்புக்கொள்ளக்கூடிய கருத்துக்கள் கவிஞரின் கருத்தாக அமைந்திருக்கும்.

கவிஞர் அவர்கள் மடுவில் வீற்றிருக்கும் அன்னை மரியாள்மீது ஆராத அன்பும் பக்தியும் கொண்டவர். 'பார்வளன் நாடகம்' என்ற நாடகத்தைப் பக்தியுடன் பாடி பிச்சை குளம் கிராமத்தில் அரங்கேற்றஞ் செய்தார். மங்களம்பாடி நிறைவுறும் தருணம் வரண்டு கிடந்த அப்பிரதேசம் மழை சோ வெனப் பொழிந்ததால் உவகை எய்தியது. அன்னாரின் பக்தி செறிந்த நாடகம் மாதோட்ட மக்களால் பக்தியுடன் போற்றப்பட்டது. இத்தகைய பக்தியும், பெருமையும் நிறைந்த கவிஞர் அவர்கள் மாதோட்டப் புலவர்களின் கவிதைப் போட்டியில் முதல் பரிசாக பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களால் தங்கப் பதக்கம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

அன்னாரின் பூதவுடல் மறைந்துவிட்ட போதிலும், அவர்களுடைய சிந்தனைத் தாக்கம் மாணவர்கள் வாயிலாக கருவாகி, உருவாகி வெளிப்பட்டு கவிஞரின் புகழை நிலைக்கச் செய்யும் என்பது உறுதியான உண்மையாகும். அவருடைய செய்யுள் ஒன்று வருமாறு :

இந்துநற் சமயத்தாரு மியேசுவினடிக ளாரும்
சந்திர சின்னத்தாரும் சத்திய வேதத்தாரும்
சொந்தமே பழகி வாழுஞ் சுந்தரப் பண்பை யாரும்
இந்த மாதோட்ட மன்றி எங்குமே அறியார் திண்ணம்.

வாழ்க! கவிஞர் செபமாலை மொத்தம் போல் அவர்களின் சிந்தனைகள், கருத்துக்கள், ஆராய்ச்சிகள், ஆக்கங்கள்!

## 11வது உலக ஆயர்.......

7ம் பக்கத் தொடர்ச்சி......

11 ஆவது ஆயர்மன்ற மாநாட்டில், 118 நாடுகளைச் சேர்ந்த 356 பேரவைத் தலைவர்கள் கலந்துகொண்டனர். இந்தியாவில் பழங்குடியினரில் இன்று 20 இலட்சம் கத்தோலிக்கர்கள் உள்ளனர். கத்தோலிக்க திருச்சபையின் மறைப்பணிக்கு இது சான்று என உலக ஆயர் பேரவையில் குறிப்பிட்டார் இந்தியக் கருதினால் சோப்போ. கடந்த 130 ஆண்டுகளில் சிராஞ்சி பெருமறை மாவட்டம் 12 மறைமாவட்டங்களையும், 23 ஆயர்களையும், நூற்றுக்கணக்கான துறவியரையும் உருவாக்கியுள்ளது. இந்த மறைமாவட்டம் நற்கருணைமீது கொண்டுள்ள சிறப்புப் பக்தியிலிருந்து பிறந்தது.

இம்மாநாட்டின் பங்கேற்பாளர்களிலிருந்து புதிய குழுவொன்று வாக்கெடுப்பின் மூலம் தெரிவுசெய்யப்பட்டது. இக்குழு ஆயர் பேரவைக் கூட்டத்தின் தீர்வுகளையும், தீர்மானங்களையும் சேர்த்து இறுதி அறிக்கையைத் தயாரித்துக் கொடுக்கும் பணியை மேற்கொள்ளும்.

இக்குழுவில் மும்பை கருதினால் ஐவன் டயஸ் தென்னமரிக்க கருதினால் சாம்பியோ சிம்மஸி, ஆபிரிக்க கருதினால் லாரன்ஸ் சப்பினியா, ஐரோப்பாவிலிருந்து இத்தாலிய பேராயர் குறூனிங் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழு தேர்ந்தெடுக்கும் இறுதித் தீர்மானங்களை பொதுக்குழு வாக்கெடுப்பு மூலம் தீர்மானிக்கும். இதன் இறுதி வடிவம் அப்போஸ்தலிக்க திருமடலாக திருத்தந்தையால் வெளியிடப்படும்.

### மன்னார் வலயக் கல்விப் பணிமனையினால் நடாத்தப்பட்ட

## கிறிஸ்மஸ் கரோல் பாடல் போட்டி முடிவுகள்

**தரம்**

1 - 5 பெண்கள் -1ம் இடம் மன்/புனித சவே. பெண்கள் கல்.
2ம் இடம் மன்/ முருங்கன் மகா வித்.
3ம்இடம் மன்/ சென்மேரிஸ் பெண்கள் வித்.

6 - 9 பெண்கள் -1ம் இடம் மன்/ புனித சவே. பெண்கள் கல்.
2ம் இடம் மன்/ சென் மேரிஸ் பெண்கள்
3ம் இடம் மன்/ எழுத்தூர் றோ.க.த.க. பாட.

10 - 13 பெண்கள் -1ம் இடம் மன்/புனித சவே. பெண்கள் கல்.
2ம் இடம் மன்/ உயிலங்குளம் றோ.க.த.க.பாட.
3ம் இடம் மன்/ சென்மேரிஸ் பெணகள் வித்.

1 - 5 ஆண்கள் -1ம் இடம் மன்/ பற்றிமா ம.ம.வித்
2ம் இடம் மன்/ புனித. சவே. ஆண்கள் கல்.

6 - 9 ஆண்கள் -1ம் இடம் மன்/ புனித சவே. ஆண்கள் கல்.
2ம் இடம் மன்/ பற்றிமா ம.ம.வித்தியாலயம்.

10 - 13 ஆண்கள் -1ம் இடம் மன் புனித சவே. ஆண்கள் கல்.

**தரம்**

1 - 5 - குழு 1ம் இடம் - மன்/ எழுத்தூர் றோ.க.
2ம் இடம் - மன்/ புனித ஆனாள் ம.ம.வி
3ம் இடம் - மன்/ புனித வளனார் றோ.க


6 - 9 - குழு 1ம் இடம் - மன்/ பரிகாரிகண்டல் அ.த.க. பா
2ம் இடம் - மன்/ புனித ஆனாள் ம.ம.வி.
3ம் இடம் - மன்/ நானாட்டான் ம.வி.

10 - 13 -குழு 1ம் இடம் - மன்/ புனித ஆனாள் ம.ம.வி
2ம் இடம் - மன்/ பற்றிமா ம.ம.வி.
3ம் இடம் - மன்/ தோட்டவெளி அ.த.க.பா.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ஆபேல் அவர்களின் சிந்தனையில் உருவான இந்த போட்டி முயற்சி எதிர்பார்த்த பலனைத் தந்துள்ளது. பல மாணவர்கள் - ஆசிரியர்கள் மிகுந்த ஆர்வத்தோடு போட்டியில் பங்கேற்றனர். இனி மன்னாரின் மூலை முடுக்கெல்லாம் ஆங்கிலக் கரோல் பாடல்களின் முணுமுணுப்புத்தான் கேட்கும். அனைவருக்கும் பாராட்டுக்கள்!

*தகவல்: திருமதி. பெப்பி விக்ரர் லெம்பட் . (I.S.A)*

# பெரியப்பா பதில்கள்





கே. அமவாசை, பௌர்ணமி தினங்களில் கடல் அலைகளின் வேகம் அதிகமாகும் என்று பொதுவாக சொல்லப்படுவது உண்மையா? உண்மை எனில் என்ன காரணம்?
*மீனா, முருங்கன்.*

ப. வேகம் அல்ல விம்மல் அதிகமாகும். கடற்பரப்பு அதிகமாகத் தத்தளிக்கும். பௌர்ணமி அமவாசை தினங்களில் சூரியன், சந்திரன், பூமி மூன்றும் நேர்கோட்டில் இருப்பதால், பூமியின் மேல் சூரிய - சந்திரனின் ஈர்ப்பு விசைகள் ஒன்று சேர்ந்துகொள்ள கடல் நீரின்மேல் அதிக பாதிப்பு ஏற்படுகின்றது. அதனால் அலைகள் மேலெழுகின்றன என்று வானிலை விஞ்ஞானிகள் விளக்கம் சொல்கிறார்கள்.

கே. பெரியப்பா! குடும்பப் பிரச்சினையோடு சம்மந்தப்பட்ட ஜோக் ஒன்று சொல்லுங்களேன்?
*- அற்புதன், அடம்பன்.*

ப. *டொக்டர்: உங்க கணவருக்கு கண்ணில என்ன பிரச்சினை?*
*பெண்: அவருக்கு என்னைத்தவிர மற்றப் பெண்கள் எல்லாம் அழகாய் தெரியுறாங்க டொக்ரர், அதுதான் பிரச்சினை.*

கே. பகலில் வீட்டில் நித்திரை கொள்ளலாமா?
*- மதன், மன்னார்.*

ப. அலுவலக வேலையை அலுவலகத்தோடு முடித்துவிடுங்கள். அதை வீட்டில் வைத்துக்கொள்ளாதீர்கள்? கி.... கி....!

கே. "இந்த மழை போதுமா, இன்னும் கொஞ்சம் வேணுமா" என்று மன்னார் மக்களைப் பார்த்துப் பாடலாமா?
*- சின்னத்தம்பி, பிரான்ஸ்.*

ப. பாடுங்கள்.. உங்களைப் போன்றவர்களைப் பிடித்து நுளம்பு நெற், நுளம்புத் திரி கொடுக்காமல் மன்னாரில் தூங்க வைக்கவேண்டும். அப்போதுதான் மழையின் விபரீதம் புரியும்.

கே.பெரியப்பா, நீங்கள் ரி.வி.யில் புராண நாடகங்கள் பார்ப்பதுண்டா? புராணங்களை நம்பலாமா?
*- கிறிஸ்ரியன், வவுனியா.*

ப. அவற்றின் முழு ரீல்களையும் நம்பத் தேவையில்லை. ஆனால் அதன் கடைசி ரீலை நம்பலாம். அவை சொல்லும் நீதிகளில் எனக்கு நம்பிக்கை உண்டு.

கே. மனைவியோடு கடைக்குப் போவது வேணாம்ண்டு போகிறது..! கடையில எதைப் பார்த்தாலும் "வாங்கித் தாங்க.. வாங்கித் தாங்க.." என்று அடம்பிடிக்கிறாளே?
*- நிருபன், வவுனியா.*

ப. இதுக்கா போய் கவலைப்படுறீங்க. பாவம் அவவுக்கு 'குழந்தை மனசு' என்று சந்தோஷப்படுங்க நிருபன்.

கே. செய்யாத குற்றத்திற்காக தண்டனை பெற்ற அனுபவம் உண்டா?
*- அமிர்தநாதன், பள்ளிமுனை.*

ப. உண்டு! பள்ளிக்கூடத்தில் தந்த 'வீட்டு வேலை' (Home work) 'செய்யாத' குற்றத்திற்காக தண்டனை பெற்றுள்ளேன்.

கே. பெரியப்பா, புதிய காதலியிடம் பழைய காதலைப் பற்றிச் சொல்லத் தீர்மானித்து இருக்கிறேன். உங்கள் அட்வைஸ்... பிளீஸ்..?
*- மணி, மன்னார்.*

ப. நீங்கள் தீர்மானித்தது சரி. காதலியின் பழைய காதலைப் பற்றிக் கேட்கத் தயாராக இருந்தால் தாராளமாகச் சொல்லுங்க..



கே. மலிவான செருப்பை அணியலாமா? விலை உயர்ந்த செருப்பை அணியலாமா? எது உடலுக்கு நல்லது?
*விமலநாதன், பேசாலை*

ப. இரண்டிலும் பிரச்சினை உண்டு என்றே எனக்குத் தோன்றுகிறது. மலிவான செருப்பு காலைக் கடிக்கும். விலை உயர்ந்த செருப்பு கையைக் கடிக்கும். எனவே நடுத்தர விலைக்குப் போங்கள்..!

கே. உலகம் இன்று யாரை மதிக்கிறது?
*வினோதினி, செட்டிகுளம்*

ப. ஒரு சரித்திர சம்பவம் இதோ. உலகையே வென்ற மாபெரும் வீரன் அலெக்சாண்டர் என்ற அரசன், டயாஜினியஸ் என்ற தத்துவ ஞானியிடம் - துறவியிடம் கேட்டான். "மக்கள் என்னைவிட உங்களை மட்டும் அதிகமாக மதிக்கிறார்களே என்ன காரணம்?" அதற்கு அந்த துறவி சொன்னார். "அலெக்சாண்டர், நீ மண்ணை வென்றவன். ஆனால் நானோ என்னை வென்றவன்."

கே. குடும்பத்திற்காக காதலை உதறித் தள்ளலாமா?
*- ராணி மேரி, மன்னார்.*

ப. 'உதறித் தள்ள' காதல் என்ன கடையில் வாங்கிய சரக்கு என்றா நினைத்து விட்டீர்கள் ராணி மேரி?

கே. என் மனைவி கரப்பான் பூச்சிக்கு இப்படிப் பயப்படுகிறாளே...? ப. இராச சேகரன், மட்டக்களப்பு

ப. அப்படியா...! நீங்கள் கொடுத்து வைத்தவர் போங்கள்....! உங்கள் வீட்டு அலுமாரியில் பணம் வைக்கும் இடத்தில் எப்போதும் ஒரு கரப்பான் பூச்சியையும் சேர்த்து வைத்து விடுங்கள். வங்கியில் இருப்பதைவிட பணம் பத்திரமாக இருக்கும்.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 13ம் ஆண்டு நினைவு — 5ம் ஆண்டு நினைவு

மலர்வு 28 - 04 - 1920



உதிர்வு 06 - 05 - 1992

மலர்வு 04 - 06 - 1935



உதிர்வு 30 - 07 - 2000

**ஆ. பாக்கியம் பறுனாந்து — பா. அன்னபூரணி லெம்பேட்**


**பெரியபண்டிவிரிச்சான்**

எங்கள் அன்பான அப்பாவே!
எங்களைப் பாசமுடன் அரவணைத்து வளர்த்த அம்மாவே!
நீங்கள் ஆண்டவன் பாதமலர் சென்றடைந்தாலும்,
உங்கள் அன்பு முகங்களும், நீங்கள் எங்களை வளர்க்க செய்த
தியாகங்களும், எங்கள் நெஞ்சை விட்டு நீங்கவில்லையே.
வற்றாத உங்கள் அன்பை நினைவு கூருகின்றோம்.
ஆண்டவன் பாதம் அமைதிகொள்ளுங்கள்.
உங்கள் பிள்ளைகளும், மருமக்களும் பேரப்பிள்ளைகளும்.

தகவல்: பா. கென்றி, லெஸ்லி பறுனாந்து ஜெயம்,
கோட்டல் ஆனந்தபவன், வங்காலை.

## 10ம் ஆண்டு நினைவு — 9ம் ஆண்டு நினைவு

மலர்வு 18 - 04 - 1920



உதிர்வு 26 - 12 - 1995

மலர்வு 06 - 04 - 1925



உதிர்வு 16 - 12 - 1996

**செ. சூசையப்பு பீரிஸ் (இளைப்பாறிய அதிபர்) — சூ. அக்னஸ் குரூஸ் (இளைப்பாறிய ஆசிரியை)**

எந்தையே, உம்மை நினைக்கையிலே எந்நாளும் நெஞ்சு வெடிக்குதையா! கண்ணுங் கருத்துமாய் எமைவளர்த்து கல்விச் செல்வத்தை தந்திட்ட ஆசை ஐயா! பண்பாக பக்தியாக பாரினிலே பரிவுடன் எமையெல்லாம் வளர்த்திட்டாலும் பகலிரவாய் எம்மவர்க்கு பாசக்கதைகள் இங்கு யார் பகர்வார்? அன்னையே உன்னை நினைக்கையிலே அனலாக அடிவயிறு எரியுதம்மா! எந்நாளும் உன்னை மறக்க இயலாதம்மா! கண்ணாக எம்மை வளர்த்த ஆசை அம்மா, மாதாவின் இரட்சிப்பில் வாழ்ந்திட்டாலும் மாதா உன் முத்தங்களை யார் தருவார்?
பரிகாரி மகளான ஆசையம்மா இனி எப்போது முகம் தடவ வருவாயம்மா?
*இவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்கும்,*
*அன்புப் பிள்ளைகள், திரு அன்ரன் பீரிஸ் - கனடா, அருட்பணி அஞ்சலிற்றோ - கலிபோர்ணியா, திரு யோண் மேரி பீரிஸ் - கனடா, திரு. போல் பீரிஸ் - சென் ஆன்ஸ் ம.ம.வி, திரு றெமிஜியஸ் பீரிஸ், திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட், திருமதி மல்லிகா மரியதாசன் சில்வா (வலயக்கல்விப் பணிமனை, மன்னார்) அமரர்: ஞானம் பீரிஸ் - பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.*

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 15 - 01 - 1985



உதிர்வு 12 - 12 - 2002

**செல்வன் ம. சிரான் டயஸ் (தலைமன்னார் கிராமம்)**

அன்பின் மகனே, பாசமிகு சகோதரனே, தாங்கமுடியவில்லை ஐயா, உன் பிரிவுச் சுமையை! கன்னத்துள் சிரிப்பைத் தேக்கி வைத்து எந்நேரமும் பூரிக்க வைத்த நீ மீள் துயில் கொண்டு 3 வருடமாகியும் எங்கள் விழி நீரில் ஞாலம் உள்ள காலம் வரையில் கலந்திருப்பாய்.
காலன் தன் கடனைச் செய்திருப்பினும் பரலோக தந்தையின் கரத்தில் சிறு குழந்தையாகத் தவழுவாய் என நம்புகின்றோம்.
*என்றும் பிரிவில் வாடும்,*
*அம்மா, அப்பா, அக்கா, தம்பி, உற்றார், உறவினர், நண்பர்கள்.*

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 05 - 10 - 1916



உதிர்வு 19 - 11 - 2002

**திருமதி. மேரி மாகிறேற் (பாலைக்குழி - அடம்பன்)**

கண்ணீர் கடலிலே காற்றடிக்கும் திசையினிலே, கரையறியா ஓடமாய் ஓடியது மூன்றாண்டு. பத்தொன்பது கார்த்திகையில் பறந்து விட்டாய் எம்மை விட்டு, பரிதவித்து நாமழுதும் பயனேதும் காணவில்லை. பாரினிலே வேறு தெய்வம் உன்போல் இனி எங்கு காண்போம்? உத்தமியே உன் பிரிவால் உயிரே துடிக்குதம்மா! சத்தியத்தின் நாயகியே, சாவினிலே ஏன் புகுந்தாய்? உன்னைத் தெய்வம் என நாம் வணங்குகின்றோம். உன் மலரடிக்கு எம் கண்ணீர்க் காணிக்கை.
*இவரின் பிரிவால் துயருறும்,*
*குமார் அற்புதமலர் குடும்பம் (சுவீஸ்)*

## 31ம் நாள் நினைவு

மலர்வு 26 - 07 - 1922



உதிர்வு 18 - 10 - 2005

**மரிசால் கபிரியேல் செல்லத்துரை (பெரிய நாவற்குளம்)**

பாசமிகு தந்தையே ஐயா! அள்ளி எம்மை முத்தமிட்டு அன்பைச் சொரிந்தீர். அறிவுநிறை வார்த்தைகளை முத்துமுத்தாய் பொழிந்தீர். வாழ்வில் எம்மை உயர்த்திட விழிப்பாய் எப்போதும் இருந்தீர். அயலவர் பிணக்குத் தீர்க்க மத்தியசம் வகித்தீர். ஆண்டவர் பாதையை எமக்குக் காட்டினீர். அனைத்துத் துன்பங்களையும் துணிவோடு தாங்கினீர். உங்கள் வாழ்வை உயிருள்ளவரை நாம் எப்படி மறப்போம். செபவீரராய் மண்ணகத்தில் திகழ்ந்து சேயர் எமக்காய் இறைவன் பாதம் செபிக்க சென்றுவிட்டீர்கள் என்ற நம்பிக்கையில் உங்கள் நினைவில் வாழ்கின்றோம்.
*இவரின் பிரிவால் துயருறும், அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், இல. 118, குருமடவீதி, மன்னார்.*

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 20 - 03 - 1937



உதிர்வு 01 - 12 - 2003

**திரு. அந்தோனி புஸ்பராசா (பறப்பாங்கண்டல்)**

அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய் பண்பின் சிகரமாய் ஊர் புகழும் உத்தமனாய் வாழ்ந்து, எமக்கெல்லாம் வழிகாட்டிய தெய்வமே! நீங்கள் மறைந்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவு என்றென்றும் எம்மனதைவிட்டு நீங்காது. உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.
*இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இரங்கற் திருப்பலிகள் 01.12.2005 காலை 7.00 மணிக்கு பறப்பாங்கண்டல் கார்மேல அன்னை ஆலயத்திலும் காலை 6.15 மணிக்கு மன்னார் பேராலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டது.*
*இவரின் பிரிவால் துயருறும், மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல. 44

யோசுவா 1 - 12

உங்கள் விடைகளை 15.01.2006 க்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும்.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | | | | | | | 02 |
| | * | | | 03 | | * | 04 | | | |
| | | | | | | | | | 05 | |
| | | | | | 06 | | | | | |
| | | 07 | | | | * | | | | 08 |
| | | | 09 | | | | | 10 | | |
| | | | | * | | * | | | * | |
| | 11 | | | | | | | 12 | * | |
| | | 13 | | | | 14 | | 15 | | |
| | | | | 16 | | | | 17 | | |
| 18 | | | | | | | 19 | | | 20 |

## இடமிருந்து வலம்

1. அவர்களிடம் சென்று, "நாட்டை .............................. வாருங்கள்" என்றார்.
4. மக்தோவில் .............................. இறங்கியிருந்த யோசுவாவிடம் மக்கள் அனைவரும் நலமே திரும்பினர். (3வது எழுத்து 4வதாக நிற்கிறது.)
6. ஆண்டவர் உங்களிடையே .............................. செயல்கள் புரிவார்.
10. நீங்கள் செல்லும் .............................. உங்களுக்குத் தெரிய வேண்டும்.
11. ஏழு .............................. ள் கொம்புகளால் ஆகிய எக்காளங்களைப் பேழைக்கு முன் ஏந்திச் செல்லட்டும்.
15. உங்களைத் துரத்துபவர்கள் கண்டுபிடிக்காதபடி நீங்கள் .............................. யை நோக்கிப் போங்கள்.
16 ...................... பார்த்த இளைஞர்கள் சென்றனர்.
17. ஏனெனில் உங்கள் கடவுளாகிய ஆண்டவர் மேலே விண்ணுலகம் முதல் .............................. மண்ணுலகம் அனைத்திற்கும் கடவுள்.
18. .............................. தரைவழியாக இஸ்ராயேலர் இந்த யோர்தானைக் கடந்தனர்.
19. அறுவடை நாள்களில் .............................. கரைபுரண்டு ஓடும்.

## மேலிருந்து கீழ்

1. "நாங்கள் தொலைநாட்டிலிருந்து வருகின்றோம். இப்பொழுது எங்களோடு .............................. செய்துகொள்ளுங்கள்."
2. "எங்கள் ஆடைகளும், எங்கள் மிதியடிகளும் மிகநெடும் .............................. கிழிந்துவிட்டன" என்றனர்.
3. இக்கற்கள் இஸ்ராயேல் மக்களுக்கு என்றும் இந்நிகழ்ச்சியை நினைவூட்டுவதற்காக .............................. என்று சொல்லுங்கள்.
6. நிலத்தின் .............................. உண்ட மறுநாளிலிருந்து மன்னா நின்றது.
7. உன் ..................யை உன் காலிலிருந்து அகற்று. ஏனெனில் நீ நிற்கும் இடம் புனிதமானது.
9. நீங்கள் ...................... வரையிலும், யோர்தான் நீரை உங்கள் கண்முன் வற்றச் செய்துள்ளார்.
11. ஏனெனில் அவர்கள் ஆண்டவரின் ..............................க் கேட்கவில்லை.
13. பின்னணி .............................. பேழைக்குப்பின் நடந்து சென்றனர்.

## வலமிருந்து இடம்

2. நகருக்குப் பின்புறத்தில் ஒரு ..............................அமை. (2வது எழுத்து இறுதியாக நிற்கிறது)
3. யோசுவா அதை அவர்கள் குலப்பிரிவுகளின்படி இஸ்ரயேலுக்கு..............................ச் சொத்தாகக் கொடுத்தார்.
5. ஏனெனில் அவரது வீடு கோட்டைச் .............................. இணைந்திருந்தது.
7. மோசேக்கு நான் கூறியவாறு உங்கள் .............................. படும் இடத்தை எல்லாம் உங்களுக்குக் கொடுப்பேன்.
8. இரவும் - பகலும் இதனைத் .............................. செய்து, இதில் எழுதியுள்ள அனைத்தையும் கடைப்பிடிப்பதில் கவனமாயிரு.
10. அவனது வீட்டாரை ஆள் ஆளாக முன்னே ..............................தார். (குழம்பியுள்ளது)
12. எந்தக் குடும்பத்தைக் கடவுள் குறிப்பிடுகிறாரோ அந்தக் குடும்பம் வீடு .............................. வரும்.
14. எக்காளத்தின் ஓசையைக் கேட்ட மக்கள் .............................. எழுப்பினர்
19. அவருடன் .............................. போர்வீரர்கள் எல்லோரும் புறப்பட்டுச் சென்று, அந்நகருக்கு அருகில் வந்தனர்.

## கீழிருந்து மேல்

6. .............................. வந்து எங்களைக் காப்பாற்றும்
7. உலகனைத்தின் ஆண்டவரது உடன்படிக்கைப்பேழையைத் தூக்கிச் செல்லும் குருக்களின் ..............................கள் யோர்தான் நீரில்பட்டவுடன் அத்தண்ணீர் பிரிந்து போகும்.
9. உங்கள் கடவுளாகிய ஆண்டவரது பேழைக்கு முன்பாக யோர்தான் நடுவில் ...................... செல்லுங்கள்.
11. உன்னைக் கைநெகிழமாட்டேன். கைவிடவும்மாட்டேன். .............................. கொள். துணிந்து நில்.
12. இப்போது இஸ்ராயேலின் பன்னிரு குலங்களிலிருந்தும் .............................. ஒருவராக நீங்கள் தேர்ந்தெடுங்கள். (2வது எழுத்து 4 வதாக நிற்கின்றது)
18. அதனால் ................ எல்லா மக்களும் ஆண்டவரின் கைவலிமையுள்ளது என்று அறிவர்.
19. ஆயினும் உங்களுக்கும், அதற்கும் ...................... அடி இடைவெளி இருக்கட்டும்.
20. கடவுளின் ஊழியர் மோசே உங்களுக்கு அளித்ததும், நீங்கள் ஏற்கனவே உடமையாக்கிக் கொண்டதுமான கீழை யோர்தானுக்குத் .............................. வந்து அந்நாட்டை உரிமையாக்கிக் கொள்வீர்கள்.

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 43ற்கான முடிவுகளை 2006ம் ஆண்டு ஜனவரி மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.

## விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 42ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்

**முதலாம் பரிசு**

டீ. ஜனனி, 12/6 கெனடி வீதி, நாவாந்துறை, யாழ்ப்பாணம்.

**இரண்டாம் பரிசு**

மடுத்தீன் லடிஸ் மேரி, குமனாயங்குளம், ஆண்டாங்குளம்.

**மூன்றாம் பரிசு**

ச.பிருந்தா பறுனாந்து, முத்தரிப்புத்துறை, மன்னார்.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 153 பேர்
சரியான விடைகளை எழுதியோர் 150 பேர்

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 42ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. கொறற்றி ஞானமணி, நவ. கன்னியர் இல்லம், கம்பகா.
2. ஜீவரெட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
3. யே. இனோக்கா ஜெகாங்கி, பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
4. சியாமளா கிறிஸ்தோப்பர், வயல்வீதி, சின்னக்கடை, மன்னார்.
5. யேசுதாசன் பிரசாந்தன், சென்மேரீஸ் வீதி, அடம்பன்.
6. ஜெ. றேபனா, அந்தோனியார் புரம்.
7. கு. நெல்சன், இல. 328, வீரபுரம், நேரியகுளம்.
8. எஸ். எமிலியானா மகேஸ்வரி, தி.கு.கன்னியர்மடம், ஊர்காவற்துறை.
9. திருமதி. பி. பர்வின் நிருஷியா குரூஸ், சென்யூட் வீதி, பேசாலை.
10. அ. றொசாணி, சென் மேரிஸ் வீதி, அடம்பன்.
11. ரி. ஜெயசீலன் பாபு தலைமன்னார் ஸ்ரேசன், தலைமன்னார்
12 ச. அமலா, ஆலங்குளம் வட்டக்கண்டல்
13. நீ. கரிஸ் கில்றோய் குரூஸ், சென்யூட்வீதி, பேசாலை
14. ரி. கிஸானி டயஸ், தாழ்வுபாடு, மன்னார்.
15. ம. யஸ்ரின் பிரபாகர், பறப்பாங்கண்டல், உயிலங்குளம், மன்னார்.
16. பீ. ஒகஸ்ரினா, இல.25/1 ராணிமில்வீதி, இறம்பைக்குளம் வவுனியா
17. அ. நிறோஜினி, தரம் 9 ,கள்ளிகட்டைக்காடு, உயிலங்குளம்.
18. நோ. ஆன்செரூஜா, சப்திகா, பெரியகமம், எழுத்தூர், மன்னார்.
19. அ.மேரி ஷர்மிளா குரூஸ், வங்காலை 3, மன்னார்.
20. மு. புவனமோகன்(நித்தியன்), நெடுங்கண்டல், அடம்பன்
21. ஷறோமி அருளப்பு, பெரியமுறிப்பு, முருங்கன்
22. கிருபா ஆட்ஸ், முருங்கன் வீதி, நானாட்டான்.
23. திருமதி. எட்வின் மிரியம் யாழினி, சுவிஸ்
24. ஜெ. எட்வின் சுரேஸ், சுவிஸ்
25. அருட்சகோதரி. மேரிபற்றிசியா,இல.1/13 துடல, யாஎல.
26. சகாயதாசன் கிறிஸ்ரீன், தரம்9, படகுத்துறை, இலுப்பைக்கடவை
27. ப.மரிசால் மரியை, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
28. மாகிறட் இராயப்பு, தபால்கந்தோர்விடுதி, மன்னார்.
29. செ. வளன் நியூமன் துரம், மரியாள்வீதி, தாழ்வுபாடு.
30. யு. செபஅன்னலா, தலைமன்னார் கிராமம், தலைமன்னார்
31. அ. லயானி, அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.
32. ச. வின்சன் குரூஸ், பறப்பாங்கண்டல், (சிறுகுளம்) உயிலங்குளம்.
33. வி. வி. ஜோண்பிரவின், இல.102, 1ம்குறுக்குத்தெரு, வவுனியா
34. தி. கமலன், இத்தாலி.
35. எம். யூலி வலன்ரீனா, காத்தான்குளம், வட்டக்கண்டல்.
36. அ. திரேசா, முருங்கன்பிட்டி, முருங்கன்
37. வை. கனிஸ்ரா, சாந்திபுரம், மன்னார்.
38. யே. மனாசே நோயல்குரூஸ், இல.32, 100வீ.தி. பெரியகமம், மன்.
39. ச. யதுசன் பர்ணாந்து, எமில்நகர், மன்னார்
40. ஆ.எட்வேட் சூஞ்ஞ, 2ம் வட்டாரம், வங்காலை.
41. ஸ். டண்ஸ்சன், தரம் 10 ,அச்சங்குளம், நானாட்டான்.
42. அருட்சகோதரி மைக்கிள், வாழ்க்கைப்பெற்றான்கண்டல், முருங்கன்
43. த. மரியசுமதி, அந்தோணியார்புரம்.
44. மத்தேஸ்பிள்ளை சாலினி, சூரியகட்டைக்காடு, நானாட்டான்
45. பி. அன்ரன் பொன்ராஜ், சுவிசலாண்ட்
46. சிறகுடைந்த இளஞ் சிட்டு, வெனில், தோட்டவெளி, மன்னார்.
47. றொ. சாள்ஸ்லியோ, சிறுநீலாசேனை, உயிலங்குளம்.
48. அ. கரோலின் கீர்த்திக்கா, 70, பேராலயவீதி, திருகோணமலை
49. ஜீன் றோஸ், நிவேதனம், அ.க. இல்லம், பட்டித்தோட்டம், மன்னார்.
50. ஆர். அழகுராஜா, லூர்துமாதாவீதி, பள்ளிமுனை.

## அனைத்துத் தொடர்புகளுக்கும்

பதிப்பாசிரியர்.
மன்னா
திருமறைப்பணி நிலையம்.
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.



The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar, Sri Lanka.

தொ.பேசி. இல. 023 - 2232377

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவில் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

உள்நாட்டு ஆண்டுச் சந்தா இலங்கை ரூபா 400 ஆகவும் வெளிநாட்டு ஆண்டுச் சந்தா ரூபா 2000 (20 யூரோ) ஆகவும் இருக்கும்.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

### 1ம் ஆண்டு நினைவு



மலர்வு 14 - 04 - 1965
உதிர்வு 02 - 11 - 2004

**திரு. செ.கி. மெல்கீஸ் டலிமா (பேசாலை)**

அன்னையாய் தந்தையாய் நல்
ஆசிரியராய் எம்மை எல்லாம் அன்புடன்
உயிர் வாழ்வில் நேசித்த நாயகனே, நீ
மறைந்து ஓராண்டு சென்றாலும் உன்
நாமம் எம் நெஞ்சில் நிழலாடுதைய்யா.

இவரின் பிரிவால் துயருறும் மனைவி ஸ்ரெலா, பிள்ளைகள் சியான் டலிமா, கபில் பிரசாத் டலிமா, மேரி பிறஷானியா டலிமா, மற்றும் தந்தை, தாய், சகோதரர், உற்றார் உறவினர்கள்.

3.11.2005, 14.11.2005 இத்திகதிகளில் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயத்தில் நினைவுத் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டன.

### 10ம் ஆண்டு நினைவு



மலர்வு 07 - 04 - 1925
உதிர்வு 16 - 12 - 1995

**திரு. பா. அந்தோனிப்பிள்ளை (சூரியகட்டைக்காடு, நானாட்டான்)**

பாசத்தின் திருவிளக்காய் நேசத்தின் ஒளிவிளக்காய் எம் உள்ளத்தில் வீற்றிருக்கும் எம் அன்புத் தெய்வமே, எம் இதயத்தின் அணையாத அகல் விளக்காய் ஒளி வீசும் எம் இனிய தந்தையே, நீங்கள் எம்மைப் பிரிந்து ஈரைந்தாண்டுகள் மறைந்தாலும் மறையாது உங்கள் நினைவு. தங்களின் ஆன்மா இறைவனில் இணைய நாளும் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவில் துயருறும்.
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

### 5ம் ஆண்டு நினைவு



மலர்வு 21 - 11 - 1984
உதிர்வு 23 - 12 - 2000

**செல்வன். லூ. கி. டிலீசியன் (கங்காணிதீவு - நானாட்டான்)**

செல்வத்திற்கு அதிபதியாய் செல்வ மகனாய் செல்லமாய் வளர்ந்த செல்லமே, சொல்லாமல் எம்மைவிட்டு சென்று விட்டாயே! எம் இனிய டிலீசியனே! அன்பான குணமும், உன் அழகிய வதனமும், மழலைப் பேச்சும், நீ செய்த குறும்புகள் அத்தனையும் எம் மனதைவிட்டு போகவில்லையப்பா. விளையாட்டில் கதாநாயகனாய், பழகுவதில் தோழனாய், பெற்றோருக்கு மதிப்புள்ள பிள்ளையாய் இருந்தாய். ஆண்டுகள் ஐந்து போனாலும் உன் சிரித்த முகம் எம்மை விட்டு அகலவே அகலவில்லையப்பா. உமக்காய் தினமும் இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.

*உன் பிரிவால் துயருறும் அம்மா, அப்பா, அக்கா மற்றும் உன்னை நேசிப்போர்.*

### 31ம் நாள் நினைவு



மலர்வு 01 - 01 - 1916
உதிர்வு 14 - 10 - 2005

**திருமதி.சவினம்மா பத்திநாதன் (முத்தரிப்புத்துறை)**

பண்பின் உறைவிடமே பாசத்தின் தாயே! பாரினில் எம்மை பரிவுடனும் பாங்குடனும் வளர்த்துவிட்டு பரம திருப்தியுடன் பரமனிடம் சென்றாயோ? உங்கள் திருவுருவைத் தேடி குழந்தைகள் நாம் தவிக்கின்றோமம்மா. உங்கள் ஆன்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

எம் தாயின் இறந்த செய்தியறிந்து நேரடியாகவும், தொலைபேசி, தந்தி மூலம் அனுதாபம் தெரிவித்த எம் ஆயர், குருக்கள், அருட்சகோதரிகள் உட்பட அனைவருக்கும் இறுதிச்சடங்கில் கலந்துகொண்டு எம் அன்னைக்காய் செபித்தவர்களுக்கும் அன்றைய தினங்களில் உதவி, ஒத்தாசைகள் புரிந்த அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம். *இவரின் பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,*

# மன்னா

## உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக அல்லேலூயா (லூக். 2 : 14)

### 31ம் நாள் நினைவஞ்சலி



**பத்திநாதர் சவீனம்மா**

மன்னார் முத்தகழ் பிறப்பிடமாய்
மாண்புடனே வாழ்ந்தவர்தான் சந்யோகு பத்திநாதர்
மறைந்த அவர் உருவம் மங்காத புகழ் ஒலிக்கும்!

பெற்றவர்கள் வைத்தபெயர் இதனாலேயோ
பத்தியது முத்திநிலை நாமம் பெற்றார்
பத்திநாதர் நாமமது பொருத்தம் பெற்றார்.

நாவசைந்தால் நாடசையும் அவர் தொனியும்
நாற்திசையும் எதிர் ஒலிக்கும் கைமணியும்
நாளும் பொழுதும் கையில் ஏந்தும் செபமாலையும்
நாளெல்லாம் கோயிலினில் துதிக்கும் ஒலிக்கும்
நாட்டினிலே யார்தான் நிகர் அவர்க்கிணையாய்

வெள்ளை நிறத்தோற்றமது மட்டுமன்று
வெள்ளை உடை அணிந்த அவர் வீறுநடை
மூத்த முதல் தபால் அதிபர் மட்டுமல்ல
முகவழகும் கொண்ட மகன் பத்திநாதன்

வயதான காலமும் வருத்தமுமே
வருந்தியே அழைத்ததுவே வானகத்துக்கு
வாழ்நாள் முடிந்த நிலை கேள்வியுற்றோம்
வருத்தப்பட்டு கண்ணீர் வடிக்கின்றோம்
வாஞ்சையுடன் எம் சோகம் கூறுகின்றோம்.

வேண்டுகின்றோம் பிதாவிடத்தில் உங்களுக்காய்
உங்கள் ஆன்மா சாந்தி பெறவேண்டுமென்று
சாந்தி சாந்தி சாந்தி

அன்புடன்
கணேசன், ரத்னா, மயூரன், பிரியா,
பிரபா, பிருந்தா, பொன்மணி (சுவிஸ்)

### மணவாழ்வின் 35 வருட நிறைவு



**திரு. திருமதி. ரனிக்கிலஸ் பிறிஜிற்றா யோகவதி தம்பதியினர் (7.12.2005)**

**வயல் வீதி, மன்னார்**

இல்லறச் சோலைதனில்
முப்பத்தைந்து ஆண்டுகள்
மகிழ்வுடன் விழாதனில் தடம் பதித்த
இந்த நாளில், தம் மக்களாம் உம்
பிள்ளைகள் நாமும் நற்சகோதரர்
சுற்றத்தாரும் வாழி நலம் வாழ்க
என வாழ்த்துகிறோம்.
இந்நாள் வரை இனிதே காத்த
இறைவன் இனிவரும் எந்நாளும்
காத்திட இறைவனை
இறைஞ்சுகின்றோம் யாம்.

வாழ்த்தும் பிள்ளைகள் பியூலா, சரண்ராஜ்
மருமகன் தவசீலன் மருமகள் உதயசெல்வி
பேரன் அஸ்லின்
மற்றும் சகோதரர் உறவினர் நன்பர்கள்

தகவல் பிள்ளைகள் - பாரீஸ் பிரான்ஸ்

### 2 வது பிறந்தநாள் வாழ்த்து




**செல்வன். க. கெறோல்ட்**
**23.12.2005**

சுவிஸ் விண்டிஸ்ஸில் வசிக்கும் கபிரியேல்-நிகிலா தம்பதிகளின் செல்வப் புதல்வன் க. கெறோல்ட் தனது இரண்டாவது பிறந்த தினத்தை சுவிஸ் விண்டிஸ்ஸிலுள்ள தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடு கின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, சித்தப்பா குடும்பம் (லண்டன்) செல்வக்குமார் அத்தான் (லண்டன்) அன்ரன் அண்ணா குடும்பம் (ஜேர்மன்) தேவன் அண்ணா (பிரான்ஸ்) தொட்டம்மா, தொட்டப்பா (சுவிஸ்) மற்றும் இலங்கை மன்னாரைச் சேர்ந்த அம்மம்மா, அம்மப்பா, அப்பப்பா (க. சந்தியாம் பிள்ளை) மாமாமார், மாமிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், அன்ரிமார், சித்தப்பாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் அனைவரும் எல்லாம்வல்ல இறைவனின் அருள் பெற்று சகல கலைகளிலும் சிறந்தவனாய் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றார்கள்.

தகவல்: திருமதி. நிகிலா கபிரியேல் (அம்மா) சுவிஸ்



## மன்னா

**உங்கள் வாசற் படியை தட்டுகிறது!**

**மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை**

**“யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்”**

### மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்



உங்கள் உறவினர் நண்பர்களுக்கு மன்னாவை அறிமுகம் செய்யுங்கள். உங்கள் உறவினர் அல்லது நண்பரின் பெயர் முகவரிகளை தெளிவாக எழுதி சந்தாப் பணத்தையும் எமக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் உறவினர், நண்பரின் வீடுதேடி மன்னா பறந்து செல்லும். உள்நாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 400யும் வெளிநாட்டில் உள்ளவராயின் ஒரு ஆண்டுக்குரிய சந்தாப்பணமாக இலங்கை ரூபா 2000 யும் (20 யூரோ) அனுப்பவும். சந்தாப் பணத்தை மன்னா பணியகத்தில் நேரடியாகவோ அல்லது காசுக் கட்டளை மூலமாகவோ அல்லது காசோலை மூலமாகவோ அனுப்பலாம். காசோலை மூலம் அனுப்புவதாயின்

வங்கியின் பெயர்: Hatton National Bank Ltd. Mannar
பணம்பெறுபவர் பெயர்: The Editor – MANNA.
வங்கிக் கணக்கு இலக்கம்: S/A No. 02 – 1678001 - 5
என்று குறிப்பிடவும்.

உங்கள் ஆன்மீகப் பசிக்கு உணவாக - உங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொள்ளும் வகையில் மன்னா இன்னும் புதிய அம்சங்களுடன், புதுமெருகுடன் தொடர்ந்து வெளிவரும்.



## வளனகம்

**உங்களை அன்போடு வரவேற்கிறது!**

**வளனகத்தில் நீங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய பொருட்கள் நூல்கள் பற்றிய விபரங்கள்**

- திருவிவிலியம், புதிய ஏற்பாடு, சிறுவர் வேதாகமம், பொக்கற் பைபிள் (கையடக்கமான சுப்பர் டிலக்ஸ் பேப்பரில் அச்சிடப்பட்ட திருவிவிலியம்.)
- அனைத்து வகையான வேதாகாமங்களுக்கும் உரிய கவர்கள். திருமணம், பிறந்தநாள் இன்னும் பல்வேறு விழாக்களுக்கான இறைவார்த்தை பொறிக்கப்பட்ட வாழ்த்து மடல்கள்.
- முதல் நன்மை, உறுதிப்பூசுதல் நினைவு மடல்கள்.
- பல்வேறு படங்களுடன் - பல்வேறு அளவுகளில் ஸ்ரிக்கர்கள்.
- விசேட வைபவங்களுக்கு அன்பளிப்பாக கொடுக்கக்கூடிய இறைவார்த்தை பொறிக்கப்பட்ட அன்பளிப்புப் பொருட்கள்
- அனைத்து வகையான செபப் புத்தகங்கள்,
- மோட்ச பாதை புத்தகம்
- பல்வேறு வகையான செபமாலைகள், குருசுகள், வரவணிக்கங்கள்
- பல அளவுகளைக் கொண்ட இயேசு, மாதா, புனிதர்களின் படங்கள்- சுருபங்கள்.
- ஆலயத்திற்குரிய நற்கருணை, வைன் பாத்திரங்கள். நற்கருணைத் தட்டுக்கள், மணிகள், துருவில்கள், கதிர்ப்பாத்திரங்கள்- முதல் நன்மை பிள்ளைகளுக்குரிய பல நிறத்திலான அழகிய மெழுகுதிரிகள், படங்கள்
- பல வகையான இயேசு, மாதா படத்திலான திறப்புக் கோர்வைகள்
- பல்வேறு தரப்பினருக்கும் உரிய பல்வேறு பயனுள்ள கிறிஸ்தவ நூல்கள்
- மறையாசிரியர் தேர்வு 1,2,3 ற்கான புத்தகங்கள்,
- க. பொ. த. சாதாரணதர உயர்தர கிறிஸ்தவபாட வினாவிடை நூல்கள்.
- பல்வேறு வழிபாட்டுக் காலத்திற்குரிய கிறிஸ்தவ தியான, பஜனை, நடன - பாடல்களைக் கொண்ட ஒலிநாடாக்கள்
- பாடசாலை உபகரணங்கள் - கொப்பி, பென், பென்சில் கொம்பாஸ் முதலிய அனைத்துப் பொருட்களையும் வளனகத்தில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்.

(முக்கிய குறிப்பு: வளனகம் வாரம் முழுவதும் (சனி தவிர்ந்த) அனைத்து நாட்களும் காலை 8 மணியிலிருந்து இரவு 8 மணி வரை திறந்திருக்கும்) வாருங்கள்! பாருங்கள்! வாங்குங்கள்!


இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பில் நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.